### உட்கார்ந்தே ஜெயித்தவர்

வெற்றிக் கோப்பையுடன் மாமிச மலை போல அமர்ந்திருக்கும் இந்த மனிதர் யார்?

சுமார் 25 வயதுடைய இவர் பெயர் கோனிசிகி! அமெரிக்கா வாசியான இவர் ஜப்பானில் நடந்த குஸ்தி போட்டியில் கலந்து கொள்ள வந்திருந்தார்—

இவர் உருவத்தைப் பார்த்தே போட்டியிட வேண்டியவர்கள் ஒதுங்க [illegible] முதல் பரிசை இவருக்கே அளித்து விட்டார்கள்

உட்கார்ந்தே ஜெயித்து வி[illegible] என்னவோ கால்களைப் பரப்பி அமர்ந்தபடியே வெற்றிக் கோப்பையை [illegible] கொண்டபடி கோனிசிகி போஸ் கொடுக்கிறார்—

இவர் பெற்ற வெற்றிக்கு இவ்வளவு பெரிய (கிட்டத்தட்ட அரை ஆளுயரம்) வெள்ளிக் கோப்பையுடன் 13 டன் அரிசியும் 5000 ஈல் மீன்களும வேறு அன்பு பரிசாகக் கொடுத்தார்களாம!

வெள்ளிக் கோப்பையைத் தவிர மற்ற இரண்டு பரிசு ஐயிட்டங்களையும ஜப்பானில் இருந்து புறப்படும முன் அநேகமாக சாப்பிட்டு காலி பண்ணியிருப்பார் என்று நம்பலாம!

மாமிச மலை போன்ற இவருக்கு அடைமொழி பெயர் "மீட்பாம!"




குளியல் தண்ணீர் தொட்டி இவர் சைஸுக்கு கிடைக்காததனாலோ அல்லது பக்கெட்டில் தண்ணீரை எடுத்து உடம்பிலே ஊற்றினாலும எல்லா பாகமும நனையாது என்பதாலோ இவர் மாதம் ஒரு முறை குளிக்கிறாராம—


ஒருவேளை அந்த நாற்றத்தினால் இவரை நெருங்க முடியாமல் மற்றவர்கள் குஸ்தியில் இருந்தே விலகினார்களோ என்னவோ!!

(ம-10)

# நட்பை வளர்ப்போம்



# நட்பை வளர்ப்போம்






## பிறிஸ்டல்

### சுவையைப் பகிர்ந்துகொள்வோம்

அரசாங்க எச்சரிக்கை:
புகைப்பிடிப்பதால் உங்கள் சுவாசப்பைகளுக்குத் தீங்கு விளையக்கூடும்

விலை
10 கொண்டது — ரூ 17/-
20 கொண்டது — ரூ 34/-

# பனாமா: அமெ. படையெடுப்பு நோக்கம்?

ஆறு வேறு நிறமானாலும் பால் வேறு நிறமாகாது- வல்லரசுகளில் ஒன்று இரத்தச் சிவப்பாக இருக்கும் மற்றது கருமேக நீலமாக இருக்கும்- ஆயினும் வல்லரசின் அதிக்கப் போக்கில் வேறுபாடு கிடையாது-

பண்டைக் காலத்தில் மன்னர்களுக்கு தினவு எடுக்கும்- அப்போது அவர்கள் அந்தப் புரத்தில் சரசமாடுவார்கள் அல்லது அயல் நாடு மீது படை எடுப்பு நடத்துவார்கள்-

லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்றான பனாமா மீது அமெரிக்கா படை எடுப்பு நடத்தி இருப்பதை இப்படித்தான் சொல்லத் தோன்றுகிறது-

தலை வணங்க, திறை வழங்க மறுத்த குட்டி அரசர்கள் கைகால்கள் பிணைக்கப்பட்டு படை எடுப்பு நடத்திய மாமன்னர் முன் நிறுத்தப்பட்ட கதை, பனாமா



நொரீக்கா

விவகாரத்தைப் பொறுத்தவரை நம் கண்முன் நிழலாடுகிறது-

## அமெரிக்காவுக்கு இது புதியது அல்ல

படை எடுப்பு நடத்தியதும், ஆயுத பலம் கொண்டு அந்நிய நாடுகளை மிரட்டியதும் அமெரிக்காவுக்கு ஒரு புதிய சமாசாரம் அல்ல-

வியட்நாம், கிறினெடா- டொமினிகன் குடியரசு மீது எல்லாம் அமெரிக்கா படை எடுப்பு நடத்தியிருக்கிறது-

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி கொறசொன் அக்குவினோவுக்கு எதிராக நடைபெற்ற புரட்சிச் சதி முயற்சியை முறியடிக்க

இருந்த தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் காலத்தில் நொரீக்காவுக்கு அமெரிக்கா "நற்சான்றுப் பத்திரம்" வழங்கி அவர் அப்பழுக்கற்றவர் என்று கூட வக்காலத்து வாங்கியிருக்கிறது-

எல்லாம் கொஞ்சக் காலத்துக்குத் தான் அல்லவா? நொரீக்காவும் அமெரிக்காவுடன் இணைந்து போக மறுக்கத் தொடங்கினார் அமெரிக்காவைப் பகைக்க ஆரம்பித்து விட்டார்-

அமெரிக்காவுடன் "யுத்தம்" என்று பிரகடனப்படுத்தும் அளவுக்கு அவர் எல்லை மீறினார்- பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய்ப் போய் விட்டதே- இது அமெரிக்காவுக்குப் பெரும சங்கடமாகப் போய் விட்டது-

நொரீக்காவை பதவி இறக்க வேண்டும் அல்லது பதவி கவிழ்க்க வேண்டும் என்று அமெரிக்கா சாதவிக் கொண்டது-

## பிரசாரப் பீரங்கியால் குறிவைப்பு

பிரசாரப் பீரங்கியால் குறி வைக்கது- ஒன்றும் அகவில்லை- புரட்சிச் சதி ஒன்றுக்கு தூபமிட்டது- அதுவும் பிசு பிசுத்து விட்டது-

இப்போது அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அலுக்கலாய்க்க ஆரம்பித்து விட்டார்- என்ன செய்வது என்று மண்டையை குழப்பித் தொடங்கினார்-

பனாமா மீது படை எடுப்பு நடத்த வேண்டும் அதற்கு ஒரு நியாயத்தைக் கண்டு பிடிக்க வேண்டும் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஒடு மீன் ஓடி உறு மீன் வரும் அளவும் காத்திருந்தார்-

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சின் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை நொரீக்காவே படையெடுப்பதற்கான நியாயத்துக்கு வழி அமைத்துக் கொடுத்து விட்டது-

றப்பர் ஸ்டாம்ப் மக்கள் பேரவை மூலம தன்னைத்தானே "அதி உயர் தலைவர்" என்று பிரகடனப்படுத்திக் கொண்டார்-

அமெரிக்காவுக்கு அத்திரமூட்டும் வகையில் அதனுடன் "யுத்த நிலைமையை" பிரகடனப்படுத்தினார்-

அழிவு வரும முன்னே அறிவு கெட்டு விடும் என்பார்கள்-



பெற்றது- அதனையடுத்து கூட்டம் ஒன்று நடந்தது-

பனாமாவில் வைத்து அமெரிக்க கடற்படை லெப்டினன்ட்



ஜோர்ஜ் புஷ்

ஒருவர் பனாமா பாதுகாப்பு படையினரால் வெளியே இழுத்து எடுக்கப்பட்டார்- நையப் புடைக்கப்பட்டார்- அவருடைய மனைவி கூட மாறி மாறி மானபங்கப்படுத்தப்படுவார் என மிரட்டப்பட்டார்-

அதிகாரிகள் இந்த விவரத்தை அந்தக் கூட்டத்தில் அச்சொட்டாக விவரித்தார்கள்- இதனைக் கேட்ட ஜனாதிபதி புஷ்சின் இரத்தக் குழாய்கள் வீங்கிப் புடைத்தன அவர் ஆவேசமுற்றிருந்தார்-

"போதும போதும என்றாகி விட்டது. இந்த ஆசாமி (நொரீக்கா) சும்மா இருக்கப் போவதில்லை. நான் மோசமாகிப் போவதே ஒரே வழி" என்று ஜோர்ஜ் புஷ் கடுகடுத்தார்.

## நொரீக்காவை மடக்க் வழி என்ன?

நொரீக்காவை மடக்கி வழிக்குக் கொண்டு வர என்ன செய்யலாம என்று அந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

யோசனை ஒன்று பாரா துருப்புகள் மூலம "ஒரு சத்திர சிகிச்சை" அதாவது நொரீக்காவை அப்பிக் கொண்டு அமெரிக்காவுக்கு கொண்டு வருவது. ஆபத்து நிறைந்தது என்பதால் இந்த யோசனை கைவிடப்பட்டது.

யோசனை இரண்டு: கூட்டுப் படைத் தலைவர் பவல் தனது திட்டத்தை முன்வைத்தார். பூரண படை எடுப்பு. சாதக பாதகங்கள் அலசப்பட்டன. ஜனாதிபதி புஷ் உன்னிப்பாக கவனித்தார். பின்னர் சாவகாசமாகச் சொன்னார்: "இதனைச் செய்வோம"

ஜனாதிபதி அக்குவினோவுக்கு எதிரான புரட்சிச் சதியை முறியடிக்க அமெரிக்க யுத்த விமானங்களை அனுப்பினார் என்பது சற்று கவனிக்கத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதி புத்தி சாதுரியமாகவே சர்வதேச விவகாரங்களை அணுகத் தொடங்கினார்.

பீகிங்கில் ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்களை சீன அரசு கொன்று குவித்த போது அவர் சீனாவுக்கு எதிராக தடைகளை அறிவித்து நாடகமாடினார் என்றும உண்மையில் சீனாவுக்கு அடிவருடினார் என்றும அரசியல் நிபுணர்கள் மத்தியில் கருத்து நிலவுகிறது.

## பீகிங் விவக்ாரத்தில் ஒரு போலி நாடக்ம

அப்போது அவர் சீனாவுடனான உயர்மட்ட அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கும தடை விதித்திருந்தார். ஆனால் உண்மையில் நடந்தது என்ன?

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிறென்ட்ற் ஸ்கோவ்குரொப்டையும, பிரதி வெளியுறவு அமைச்சர் லோரன்ஸ் ஈகில்பேர்கரையும இரண்டு தடவை பீகிங்கிற்கு அனுப்பினார்.

முதலாவது சீனப் பயணம ஜூலையில் நடைபெற்றது. டிசம

## பூலோக சஞ்சாரம்


## எஸ்.எஸ்.எஸ்

பர் கடைசிப் பகுதியிலேயே இது வெளிச்சத்திற்கு வந்தது.

அமெரிக்காவின் போக்கிற்கு பீகிங் நன்றிக் கடன் செய்ய வேண்டும அல்லவா? அது பனாமா படையெடுப்பு குறித்து "அதிர்ச்சியும கண்டனமும" தெரிவித்தது. அத்துடன் விவகாரம சரி.

அமெரிக்காவின் படையெடுப்புக்கு கமயூனிஸ்ட் நாடுகளான ரஷ்யாவிடம இருந்தோ, சீனாவிடம இருந்தோ வலுவான எதிர்ப்புக் கிளமபவில்லை. சமபிரதாய ஆட்சேபனையோடு விவகாரம முற்றுப் பெற்று விட்டது.

அமெரிக்காவின் 40 வருட வெளியுறவுக் கொள்கையில்




(1) ஜமேக்கா; (2) கியூபா; (3) பெலிஸ்; (4) கௌத்தமாலா; (5) ஹொன்டுராஸ்; (6) எல் சல்வடோர்; (7) நிகரகுவா; (8) கோஸ்டா றிக்கா; (9) பனாமா; (10) பனாமா கால்வாய். (ண)

உள்ள அமெரிக்க இராணுவத் தளத்தில் "பொமமை" ஜனாதிபதியாக குயிலெர்மோ என்டாரா என்ற எதிர்க் கட்சி அரசியல்வாதியின் சத்தியப் பிரமாண வைபவமும நடைபெற்றது.

இவர் கடந்த மே மாதம நடைபெற்ற பொதுத் தேர்தலில் எதிர்க் கட்சி வேட்பாளர். நொரீக்காவின் வேட்பாளரான டுகே ஜேன் தோல்வி காணுகிறார் என்று கண்டதும தேர்தலை நொரீக்கா செல்லுபடியாகாது என்று தள்ளுபடி செய்திருந்தார்.

நூற்றாண்டு முற்பகுதியில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் "நான் பனாமாவை எடுத்து விட்டேன்" என்று வெற்றி முழக்கமிட்டார். அதனையே இப்போது ஜனாதிபதி புஷ் மீண்டும செய்திருக்கிறார்.

## படை எடுப்பு நோக்க்ம பற்றி புஷ் விவரிப்பு

கடந்த புதன்கிழமை 24ஆம திகதி அமெரிக்க ஜனாதிபதி புஷ் வெள்ளை மாளிகை பத்திரிகையாளர் மாநாட்டில் டிசமபர் 20ஆம திகதி பனாமா மீது நடத்தப்பட்ட படையெடுப்புக்கான நான்கு நோக்கங்களை அறிவித்தார்.

(1) அமெரிக்க பிரஜைகளின் உயிர் பாதுகாப்பு

(2) ஜனநாயகத்தை மீண்டும ஏற்படுத்த உதவி

(3) பனாமா கால்வாய் உடன்

நொரீக்கா சம்பந்தப்பட்டிருக்கிறார்- இது அமெரிக்காவை சிதைய வைக்கும மறைமுக நடவடிக்கை- இப்படி அமெரிக்கா காரசாரமாக குற்றச் சாட்டை வாரி வீசியது-

கோஸ்டா றிக்கா என்ற நாட்டு எல்லையை அண்டியுள்ள பனாமா காட்டுப் பகுதியில் போதை வஸ்து உற்பத்தி தொழிற்சாலை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது என்று அமெரிக்கப் படையினர் தெரிவித்தார்கள்-

பனாமாவின் போதை வஸ்து தடுப்பு பொலீஸ் நிலையத்தில் இருந்த 300 கிலோ (660 றாத்தல்) போதை வஸ்து கைப்பற்றப்பட்டிருக்கிறது என்று அவர்கள் தெரிவித்தார்கள்-

டிசம்பர் 20 ஆம திகதி படை எடுப்புக்கு பின்னர் கைப்பற்றப்பட்ட 415 கிலோ (915 றாத்தல்) போதை வஸ்தில் இது அடங்காது என்றும அவர்கள் கூறினர்-



அறிக்கைகளை கடந்த திங்கட்கிழமை 22 ஆம திகதி வாபஸ் பெற்றுக் கொண்டார்கள்- விளக்கமும் அளித்தார்கள்- தப்பு நடந்து விட்டது என்று கையை விரித்தார்கள்-

## கைப்பற்றப்பட்டது போதைவஸ்து அல்ல

நொரீக்காவை தொடர்பு படுத்து "பிசாசு மாளிகை" அதாவது போர்ட் அமடோரில் உள்ள பனாமா அலுவலகத்தில் இருந்து போதை வஸ்து கைப்பற்றப்படவில்லை என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்-

அமெரிக்க துருப்புகள் போதை வஸ்து தடுப்பு பயிற்சி பெற்றவர்கள் அல்லர். எனவேதான் இந்த தப்புத்தண்டா நிகழ்ந்து விட்டது என்று இராணுவ புலனாய்வு அதிகாரி ஒருவர் கூறினார்.

உண்மையிலேயே அமெரிக்கத் துருப்புகள் போதைவஸ்து என்ற சந்தேகத்தில் கைப்பற்றிய பதார்த்தம என்னவென்று தெரியுமா?

மெக்ஸிக்கோ நாட்டவரின் ஜனரஞ்சக உணவுப் பதார்த்தமான "தமலெஸ்" எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதைத்தான் அவர்கள் நொரீக்காவின் அலுவலகத்தில் கைப்பற்றியிருக்கிறார்கள். இந்த உணவுப் பதார்த்தம இறைச்சி சிவப்புக் கடுகு, தக்காளி பாணி ஆகியன மூலம தயாரிக்கப்படுவது. இந்த உணவுப் பதார்த்தம வாழை இலையில் சுற்றி வைக்கப் படும.



நொரீக்கா

விவகாரத்தைப் பொறுத்தவரை நூர் கண்முன் நிழலாடுகிறது—

## அமெரிக்காவுக்கு இது புதியது அல்ல

படை எடுப்பு நடத்தியதும், ஆயுத பலம் கொண்டு அந்நிய நாடுகளை மிரட்டியதும் அமெரிக்காவுக்கு ஒரு புதிய சமாசாரம் அல்ல—

வியட்நாம், கிறினெடா—டொமினிகன் குடியரசு மீது எல்லாம அமெரிக்கா படை எடுப்பு நடத்தியிருக்கிறது—

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி கொறசொன் அக்குவினோவுக்கு எதிராக நடைபெற்ற புரட்சிச் சதி முயற்சியை முறியடிக்க அமெரிக்கா யுத்த விமானங்களை அனுப்பி வைத்திருக்கிறது—

கம்யூனிஸ கியூபாவை வழிக்குக் கொண்டு வர அது பீரங்கி படகு ராஜதந்திர நெருக்கடியைக் கூட திணித்தது—

கம்யூனிஸ எதிர்ப்பு, ஜனநாயக காப்பு என்ற போர்வையில் அமெரிக்க வல்லரசு இப்படி எல்லாம் நடத்தியிருக்கிறது—

பனாமா விவகாரத்தில் அமெரிக்கா என்ன சொல்கிறது தெரியுமா? போதை வஸ்து கடத்தல் விவகாரத்தை பூண்டோடு வேரறுக்கவே இந்தப் படை எடுப்பு என்ற சொல்லியிருக்கிறது—

பதவியில் இருந்த இழுத்து எறியப்பட்ட பனாமாவின் ஜனாதிபதி மனுவல் அந்தோனியோ நொரீக்கா சர்வாதிகாரி என்பதில் எவருக்கும சந்தேகம இல்லை—

## "கவ் போய்" பாணியில் அமெ பொலீஸ் வேலை

இறைமையும் சுயாதிபத்திய மும் கொண்ட ஒரு நாட்டின் மீது அமெரிக்கா "கவ் போய்" பாணியில் நடந்து கொண்டிருக்கிறதே பொலீஸ்காரன் வேலையைப் பார்க்கிறதே என்பது தான் சர்ச்சை கிளப்பியிருக்கிறது—

இத்தனைக்கும் பெரும பூதமாக காட்டப்படும் நொரீக்காவை அமெரிக்காவே வளர்த்துவிட்டிருக்கிறது—

அடுத்த அடுத்து வந்த இரண்டு அமெரிக்க ஜனாதிபதிகளின் ஆட்சிக் காலத்திலேயே நொரீக்கா வளர்க்கப்பட்டார்—

அமெரிக்க ஒற்றர் அமைப்பான சி ஐ ஏ யின் தலைவராக

செயலாக என்ற மன்னையை குறிப்பிட்டுக் காட்டினார்—

பனாமா மீது படை எடுப்பு நடத்த வேண்டும. தெற்கு ஒரு நியாயத்தைக் கண்டு பிடிக்க வேண்டும ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஒரு மீன் வெட்டி உண மீன் வரும அளவு காத்திருந்தார்—

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை நொரீக்காவே படையெடுப்பதற்கான நியாயத்துக்கு வழி அமைத்துக் கொடுத்து விட்டது—

நப்பர் ஸ்டாம்ப் மக்கள் பேரவை மூலம தன்னைத்தானே "அதி உயர் தலைவர்" என்ற பிரகடனப்படுத்திக் கொண்டார்—

அமெரிக்காவுக்கு அத்திர மூட்டும வகையில் அதனுடன் "யுத்த நிலைமையை" பிரகடனப்படுத்தினார்—

அழிவு வரும முன்னே அறிவு கெட்டு விடும் என்பார்கள்—



ரூஸ் வெல்ட்

நொரிக்காவுக்கும அறிவு கெட்டு விட்டது—

இந்தச் சூழ்நிலையில் தான் பனாமாவில் மற்றொரு சமபவம் நிகழ்ந்த விட்டது— பனாமாவில் நிலை கொண்டிருந்த அமெரிக்க படை வீரர்கள் தாக்கப்பட்டு விட்டார்கள்—

பனாமாவில் அமெரிக்க படை வீரர்கள் தாக்கப்பட்டது இது முதல் சமபவம அல்ல— இதற்கு முன்னரும் தாக்கப்பட்டிருக்கிறார்கள்—

ஆனால் யுத்த நிலைமை பிரகடனப்படுத்தப்பட்ட வேளையில் நிகழ்ந்த இந்தச் சமபவத்தை அமெரிக்கா மிகப் பாரதூரமாக கருதியது—

## வெள்ளை மாளிகை விருந்து வைபவம

மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லா பேய் என்பார்கள்— இங்கு அமெரிக்கா மருண்டு விட்டது— பனாமா பட்டி உடைந்தது— இப்போது எட்டு மீறி விட்டது என்ற அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அவருடைய ...லோசகர்களுடன் அந்தரங்க ... ர்கள்—

டிசம்பர் 17 ஆம் திகதி வெள்ளை மாளிகையில் கிறிஸ்மஸ் விருந்து வைபவம் நடை

ஜோர்ஜ் புஷ் கடுகடுத்தார்.

## நொரீக்காவை மடக்க வழி என்ன?

நொரீக்காவை மடக்கி வழிக்குக் கொண்டு வர என்ன செய்யலாம என்ற அந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

யோசனை ஒன்று பாரா துருப்புகள் மூலம "ஒரு சத்திர சிகிச்சை" அதாவது நொரீக்காவை அப்பிக் கொண்டு அமெரிக்காவுக்கு கொண்டு வருவது. ஆபத்து நிறைந்தது என்பதால் இந்த யோசனை கைவிடப்பட்டது.

யோசனை இரண்டு: கூட்டுப் படைத் தலைவர் பவல் தனது திட்டத்தை முன்வைத்தார். பூரண படை எடுப்பு. சாதக பாதகங்கள் அலசப்பட்டன. ஜனாதிபதி புஷ் உன்னிப்பாக கவனித்தார். பின்னர் சாவகாசமாகச் சொன்னார்: "இதனைச் செய்வோம"

பனாமா படையெடுப்புத் திட்டம மூன்று அமசங்களைக் கொண்டது.

(1) எதிர்ப்புகளைக் கிள்ளி எறிவது

(2) சர்வாதிகாரி நொரீக்காவை சிறை பிடிப்பது. போதை வஸ்து குற்றச்சாட்டின் பேரில் அமெரிக்க நீதிமன்றத்தில் நிறுத்துவது

(3) மே தேர்தலில் வெற்றி பெற்ற அரசியல்வாதிகள் மூலம புதிய ஜனநாயக அரசை ஏற்படுத்துவது.

படை எடுப்பு முடிவுகளுக்கு வருவதற்கு அமெரிக்கா சர்வதேச சூழ்நிலைகளையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது.

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ். கடந்த மே மாதம முதல் கொண்டே சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கினார்.

## கொர்பச்சேவுடன் மோல்டா உச்சிமாநாடு

ஜூலை மாதம அவர் ரஷ்ய ஜனாதிபதி மிக்கையில் கொர்பச்சேவுடன் மோல்டாவில் உச்சி மாநாடு ஒன்றை நடத்தினார்.

நிகழ்ச்சி நிரல் இல்லாத சாதாரண அறிமுக கூட்டத் தொடரே இது என்ற வலியுறுத்தியே அவர் கொர்பச்சேவை மாநாட்டுக்கு சுண்டியிழுத்தார்.

ஆனால் டிசமபர் மாத முற்பகுதியில் அவர் 21 யோசனைகள் அடங்கிய பட்டியல் ஒன்றை கொர்பச்சேவிடம கையளித்தார். அது பொதுவான வரவேற்பைப் பெற்றது.

அதே வேளையில்தான் அவர்,

# பூலோக சஞ்சாரம்

## எஸ். எஸ். எஸ்

பர் கடைசிப் பகுதியிலேயே இது வெளிச்சத்திற்கு வந்தது.

அமெரிக்காவின் போக்கிற்கு பீகிங் நன்றிக் கடன் செய்ய வேண்டும அல்லவா? அது பனாமா படையெடுப்பு குறித்து "அதிர்ச்சியும கண்டனமும" தெரிவித்தது. அத்துடன் விவகாரம சரி.

அமெரிக்காவின் படையெடுப்புக்கு கமயூனிஸ்ட் நாடுகளான ரஷ்யாவிடம இருந்தோ, சீனாவிடம இருந்தோ வலுவான எதிர்ப்புக் கிளமபவில்லை. சமபிரதாய ஆட்சேபனையோடு விவகாரம முற்றுப் பெற்று விட்டது.

அமெரிக்காவின் 40 வருட வெளியுறவுக் கொள்கையில் கமயூனிஸ்ட்டுகளை அடக்குவதுடன் தொடர்பில்லாத முதலாவது படை எடுப்பு இது என்று தெரிவிக்கப்படுகிறது.

## பனாமா சோரம போக் உடன்படிக்கை உதவியது

பனாமா மீது அமெரிக்கா படை எடுப்பு நடத்துவதற்கு, பனாமா கால்வாய் உடன்படிக்கை சட்ட ரீதியான முகாந்திரங்களை வழங்கியிருக்கிறது.

போதைவஸ்து கடத்தலைக் கட்டுப்படுத்த பனாமா கால்வாயில் அமெரிக்க துருப்புகள் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன. பனாமாவில் ஏற்கனவே 7,000 அமெரிக்க படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர்.

அந்நிய நாட்டுடனான ஒப்பந்தம ஒன்று நாட்டின் இறைமைக்கு எந்த அளவில் குந்தகமாக அமைந்து விட்டது என்பதற்கு பனாமா விவகாரம நல்ல முன்னுதாரணம என்று அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

நாய் ஒன்றை அடிக்க வேண்டுமானால் முதலில் அதற்கு விசர் பிடித்து விட்டது என்று கதை கட்ட வேண்டும.

பனாமா ஜனாதிபதி நொரீக்காவை பிடித்து விடுவதற்காக அமெரிக்கா அவர் மீது போதை வஸ்து குற்றச்சாட்டுகளை சுமத்தியது படை எடுப்பையும நடத்தி முடித்தது.

## "பொமமை" ஜனாதிபதி பதவி ஏற்றம

படையெடுப்பு நடைபெற்ற அதே வேளை போர் கிளேயரில்

என்று தன்னுடபடி செய்திருந்தார்.

நூற்றாண்டு முற்பகுதியில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் "நான் பனாமாவை எடுத்து விட்டேன்" என்ற வெற்றி முழக்கமிட்டார். அதனையே இப்போது ஜனாதிபதி புஷ் மீண்டும செய்திருக்கிறார்.

## படை எடுப்பு நோக்கம பற்றி புஷ் விவரிப்பு

கடந்த புதன்கிழமை 24ஆம திகதி அமெரிக்க ஜனாதிபதி புஷ் வெள்ளை மாளிகை பத்திரிகையாளர் மாநாட்டில் டிசமபர் 20ஆம திகதி பனாமா மீது நடத்தப்பட்ட படையெடுப்புக்கான நான்கு நோக்கங்களை அறிவித்தார்.

(1) அமெரிக்க பிரஜைகளின் உயிர் பாதுகாப்பு

(2) ஜனநாயகத்தை மீண்டும ஏற்படுத்த உதவி

(3) பனாமா கால்வாய் உடன்படிக்கையின் பூரணத்துவத்தை காத்தல்

(4) ஜெனரல் நொரீக்காவை நீதிமன்றத்தில் நிறுத்துவது

இந்த நோக்கங்கள் எல்லாம நிறைவேறி விட்டன என்றும ஜனாதிபதி புஷ் பெருமை அடித்துக் கொண்டார்.

## புஷ்சின் கூற்றில் நியாயம உண்டா?

ஜனாதிபதி புஷ்சின் கூற்றில் நியாயம உண்டா? அரசியல் நிபுணர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

நொரீக்காவின் அரசு பனாமா கால்வாய் உடன்படிக்கைக்கு மாறாக பகிரங்கமாக எவ்வித நடவடிக்கைகளையும எடுக்கவில்லை.

இந்தக் கால்வாய் மேலும 10 வருட காலம அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இருக்க உடன்படிக்கையில் இடம இருக்கிறது.

ஆயினும பனாமா ஆட்சியாளரினால் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் எதிர்காலம மங்கலாகவே அமையலாம.

சிறை பிடிக்கப்பட்ட பனாமா ஜனாதிபதி நொரீக்கா மீது அமெரிக்காவில் வழக்குத் தாக்கல் செய்யப்படுகிறது. வெளிநாடு ஒன்றின் தலைவர் ஒருவருக்கு எதிராக முன்னெப்பொழுதுமே அமெரிக்காவில் வழக்குத் தாக்கலானது கிடையாது.

பனாமா மீது படை எடுப்பு நடத்தப்பட்டதற்கு, நொரீக்காவை சிறைப் பிடித்து அமெரிக்காவுக்கு கொண்டு வந்ததற்கும அமெரிக்கா சோடித்த பிரதான குற்றச்சாட்டு என்ன தெரியுமா?

போதை வஸ்து கடத்தலில்

தார்கள்—

பனாமாவின் போதை வஸ்து தடுப்பு பொலீஸ் நிலையத்தில் இருந்த 300 கிலோ (660 றாத்தல்) போதை வஸ்து கைப்பற்றப்பட்டிருக்கிறது என்று அவர்கள் தெரிவித்தார்கள்—

டிசம்பர் 20 ஆம திகதி படை எடுப்புக்கு பின்னர் கைப்பற்றப்பட்ட 415 கிலோ (915 றாத்தல்) போதை வஸ்தில் இது அடங்காது என்றும அவர்கள் கூறினர்—



என்டாரா

அத்துடன் அவர்கள் மற்றொரு பொய் மூடை ஒன்றையும அவிழ்த்து விட்டார்கள்—

## "பிசாசு மாளிகை" நாமகரணம

போரிம் அமடோரில் உள்ள கட்டிடம் ஒன்றில் இருந்த போதை வஸ்துகள் கைப்பற்றப்பட்டன— அங்கு பேயோட்டுதலுடன் தொடர்புடைய பொருட்களும் காணப்பட்டன— இதனால் அந்தக் கட்டடத்திற்கு "பிசாசு மாளிகை" என்ற நாமகரணம் இந்தக் கட்டடம பனாமா அரசின் அலுவலகமாகும்—

அதன் மூலம அவர்கள் நொரீக்காவையும் போதை வஸ்து கடத்தலுடன் சமபந்தப்படுத்தினார்கள் அவருக்கு எதிராக பிரசார சாதனங்களை முடுக்கி விட்டார்கள்—

இப்போது தகிடு தத்தங்கள் அம்பலமாகத் தொடங்கியிருக்கின்றன—

கைப்பற்றப்பட்ட போதை வஸ்தின் எடை என்ன? இரண்டு மாறுபட்ட தகவல்கள் 50 கிலோவா அல்லது 50 றாத்தலா? அதிகாரிகளின் அறிக்கைக்கு அறிக்கை மாறுபாடு—

கைப்பற்றப்பட்ட வஸ்து போதை வஸ்து அல்ல என்பது நிரூபணமாகியிருக்கிறது—

அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தாம முன்னர் வெளியிட்ட

இருந்து போதை வஸ்து கைப்பற்றப்படவில்லை என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்—

அமெரிக்க துருப்புகள் போதை வஸ்து தடுப்பு பயிற்சி பெற்றவர்கள் அல்லர். எனவேதான் இந்த தப்புத்தண்டா நிகழ்ந்து விட்டது என்ற இராணுவ புலனாய்வு அதிகாரி ஒருவர் கூறினார்.

உண்மையிலேயே அமெரிக்கத் துருப்புகள் போதைவஸ்து என்ற சந்தேகத்தில் கைப்பற்றிய பதார்த்தம என்னவென்று தெரியுமா?

மெக்ஸிக்கோ நாட்டவரின் ஜனரஞ்சக உணவுப் பதார்த்தமான "தமலெஸ்" எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதைத்தான் அவர்கள் நொரீக்காவின் அலுவலகத்தில் கைப்பற்றியிருக்கிறார்கள். இந்த உணவுப் பதார்த்தம இறைச்சி சிவப்புக் கடுகு, தக்காளி பாணி ஆகியன மூலம தயாரிக்கப்படுவது. இந்த உணவுப் பதார்த்தம வாழை இலையில் சுற்றி வைக்கப் படும.

இது உடலுக்கு தீங்கு விளைவிக்காது. போதையும தராது. இதனை ஊசி மூலம ஏற்ற முடியாது. பொடியாக முகர்ந்து எடுக்கவும இயலாது.

இந்த உணவு பதார்த்தத்தைத் தான் அமெரிக்க துருப்புகள் போதைவஸ்து என்ற தப்பெண்ணம கொண்டு கைப்பற்றியிருக்கிறார்கள்.

## நையாண்டி ஆர்ப்பாட்டம

இப்படி அமெரிக்காவின் "வாஷிங்டன் போஸ்ட்" கடந்த செவ்வாய்க்கிழமை 23ஆம திகதி செய்தி வெளியிட்டிருக்கிறது. ஆயினும இந்தச் செய்தியை அதிகாரிகள் ஊர்ஜிதம செய்யவில்லை.

பனாமா படை எடுப்புக்கு எதிராக மெக்ஸிக்கோவில் ஆர்ப்பாட்டம நடத்தினார்கள்.

அமெரிக்காவின் படை எடுப்பை நையாண்டி செய்யும வகையில் அவர்களுடைய ஆர்ப்பாட்டம நடைபெற்றது.

மெக்ஸிக்கோ மீது அமெரிக்கா படை எடுப்பை நடத்தும அபாயம இருக்கிறது.

ஏன் தெரியுமா? "தமலெஸ்" உணவுப் பதார்த்தம காரணமாகவே அமெரிக்கா, பனாமா மீது படை எடுப்பு நடத்தியது. இந்த உணவுப் பதார்த்தம மெக்ஸிகோவில் நிறைய இருக்கிறதே!

இதுதான் மெக்ஸிக்கோ ஆர்ப்பாட்டக்காரர்கள், அமெரிக்க படை எடுப்பு அபாயத்திற்கு தெரிவிக்க "காரணம".

அரசியலே ஒரு நாடகம அதில் கமாஸுகளுக்கும குறைச்சல் இல்லை. பனாமா விவகாரத்தை ...படிக் கூறத் தோன்றுகிறதல்லவா?

(ண)

# கிராமத்து மின்னல் பளிச்சிட்டு ஏற்படுத்திய கலகலப்பு

நீண்ட கால இடைவெளிக்குப் பிறகு கடந்த 19 ஆம திகதி மீண்டும தென்னிந்தியத் திரைப் படம ஒன்றைப் பார்க்கும வாய்ப்பு வாஹினி ரசிகர்களுக்குக் கிடைத்தது!

அதிலும சமீபகாலப் படமொன்றைப் பார்க்கும சந்தர்ப்பம கிடைத்ததன் மூலம இனிப் புதிய படங்களையும பார்க்கலாம என்ற நம்பிக்கை வாஹினி ரசிகர்களுக்குப் பிறந்துள்ளது!

கிராமத்துப் பின்னணியிலான கதையமைப்பைக் கொண்ட "கிராமத்து மின்னல்" ஒரு சாராரைக் கவரும படமாகவே காட்சியளித்தது!

கண்ணுக்குக் குளிர்ச்சியான பச்சைப் பசேலென்ற இயற்கைக் காட்சிகளைக் கொண்ட இப்படத்தில் —

மின்னல் வேகத்தில் எவரையும கவரும கிராமத்துக் கன்னியாக நடித்திருந்தார் ரேவதி!


இந்தக் கிராமத்து மின்னல் கொடிக்கும ஏற்படுகிறது இன்னல் — அதுவே "மின்னல் போல்கும இந்த வாழ்க்கையே" என்றும ஆகி விடுகிறது!

காதலனைக் கொன்றவனைப் பழி தீர்க்கும பொழுது கன்னி மின்னல் கடும இடியாக மாறி விடுவதையும இறுதியில் காணுகிறோம்! திருமணத்துக்குப் பிறகு ரேவதி நடித்த முதலாவது படம இது! வ

கிராமத்துப் படங்களென்றதும் நமது ஞாபகத்துக்கு வருபவர் ராமராஜன்! அவரைக் கிராமராஜன் என்றும ரசிகர்கள் அழைப்பதுண்டு!

இளையராஜாவின் இனிய இசையமைப்பிலான "கிராமத்த மின்னல்" நகரத்தவர்கள் மனதிலும் பளிச்சிடத்தான் செய்தது!

## இதயபூர்வமான நன்றிகள்




ஸ்ரீதர் பிச்சையப்பா

என்றும என் ப்ரியத்துக்குரிய... "சஞ்ஜயன்" அவர்களுக்கு...
வணக்கம.
கடந்த வார சிந்தாமணியில் தங்கள்
"ஒலி ஒளி உருவம" பகுதியில் பொங்கல் தினம ஒளிபரப்பான "பொங்கல் பரிசு" நாடகம பற்றி பாராட்டி எழுதியிருந்தீர்கள்.
வளர்ந்து வரும இளைஞனான எனக்கு
தங்கள் பாராட்டுக்கள்...இந்தத் துறையில் மேலும பிரகாசிக்க முடியும
எனும நம்பிக்கையையும...என் நடிப்பின் மீதான நம்பிக்கைகளை காப்பாற்ற வேண்டும் எனும கவனத்தையும
கற்றுக் கொடுத்திருக்கின்றன.
உங்கள் விமர்சனங்களே...
என்னைப் போன்றவர்களை வளர்க்கும

சிந்தாமணிக்கும, தங்களுக்கும என் இதயபூர்வமான நன்றிகள்.

— இவண் என்றும
அன்புகலாப்ரியங்களுடன்,
ஸ்ரீதர் பிச்சையப்பா,
186, கதிரேசன் வீதி,
கொழும்பு - 13.



"கிராமத்து மின்னல்" ஜோடி... தனிமையை நாடி... களித்திருக்குது கூடி... (ராமராஜன் — ரேவதி)

# ஒலி ஒளி உருவம்

ரூபவாஹினி RUPAVAHINI

## கலையகத்தில் கலைஞர்

"கலையகத்தில் கலைஞர்" என்ற மகுடமிட்டு இலங்கை வானொலி கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு புது நிகழ்ச்சித் தொடரை ஆரமபித்தது.

பழம பெரும கலைஞர்களை குறிப்பாக இசைத்துறை, வாத்தியத்துறை, வாய்ப்பாட்டுத் துறைக் கலைஞர்களை பேட்டி கண்டு. அவர்களுடைய அனுபவங்களையும, சாதனைகளையும, கலை நுணுக்கங்களையும அவர்தம வாயினாலேயே கேட்டு அறிவது தான் இந்தப் பேட்டி நிகழ்ச்சியின் நோக்கமாக இருந்திருக்க வேண்டும என நினைக்கிறோம.

முதலாவது நிகழ்ச்சி கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 9–45 மணிக்கு இலங்கை வானொலி தமிழ்ப் பிரிவில் ஒலிபரப்பப்பட்டது.

துடன், இந்நிகழ்ச்சிகளை சுவடிக் கூடத்தில் பாதுகாத்து வைக்கவும நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிகழ்ச்சியை கேட்டபோது ஏற்பட்டது ஏமாற்றமே. ஏனென்றால், பேட்டி காணப்பட்ட புகழ்மிக்க கலைஞரைப் பற்றிய விவரங்களைக் கேட்டு அறிவதற்குப் பதிலாக, பேட்டி கண்டவர் தமது சொந்த பிரதாபங்களை சுய தமபட்டம அடிக்க முற்பட்டது தான்.

பேட்டி கண்ட அமமையார் "வாருங்கோ மாஸ்டர். கொஞ்ச நேரம சந்தோஷமாக உரையாடுவோம" என்று கூறியதுமே நல்லதொரு பேட்டியைக் கேட்கப் போகிறோம என்ற உணர்வே ஏற்பட்டது.

ஆனால், பேட்டி கண்ட அமமையார் தனது முதலாவது கேள்வியை இவ்வாறு ஆரமபித்தார். "நான் 7 வயதுச் சிறுமியாக புத்துவாட்டி சோமசுந்தரம அவர்களிடம சங்கீதம பயில வந்திருந்த போது, நீங்கள்..." என்ற கேள்வி தொடர்ந்தது.

சரி தொடக்கந்தானே என்று பார்த்தால், பேட்டியின் தொனி தொடர்ந்தும இவ்வாறே அமைந்திருந்தது.

உதாரணத்துக்கு ஒன்று இரண்டு. "நான் 66 ஆம ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்குக் கலைஞராக வந்திருந்தபோது..." "இதைப் பற்றி நான் இப்படி நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்...?" இவ்வாறு முமப் பேட்டியும தொடர்ந்தது.

முகானந்தமா? அல்லது பேட்டியை நடத்திய பெண்மணியா? ஏனென்றால், அன்றைய நிகழ்ச்சி மூலம சண்முகானந்தத்தைப் பற்றி அறிந்ததிலும பார்க்க பேட்டி கண்டவரைப் பற்றித்தான் கூடுதலாக அறிய முடிந்தது.

இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டதன் நோக்கம என்ன? வானொலி நிலையத்தைச் சேர்ந்த ஒருசிலர் தாங்களே சுய புராணம பாடிக்கொள்வதற்காகவா?

இன்னொரு வேடிக்கை. பேட்டி நிகழ்ச்சி என்றால் ஒருவர் பேட்டி காண வேண்டும. மற்றவர் பேட்டி கொடுக்க வேண்டும. அவ்வளவுதான். இதற்குள்ளே ஏன் ஒரு தொகுப்பாளர்?

இந்த அரை மணி நேரத்தில் அனைவரையும கவர்ந்த ஒரு அமசம சண்முகானந்தம வயலினை வெவ்வேறு விதமாக வாசிக்கும் முறை பற்றி அளித்த விளக்கமே. வயதான பழம பெரும கலைஞர்களைப் பேட்டி கண்டு அவற்றை சுவடிக் கூடத்தில் சேர்த்து வைப்பது தான் இந் நிகழ்ச்சியின் நோக்கம என்றால்... அந்த நோக்கம இந்த நிகழ்ச்சி மூலம நிறைவேற்றப்படவில்லை என துணிந்து கூறலாம.

இந்த நிகழ்ச்சியில் கேட்கப் பட்ட கேள்விகள் கூட இயற்கையாக இல்லாமல் ஒரு செயற்கைத்...

# ஏனைய பாடகர்களும் ஏற்றம் பெற்றனர்

சினிமா ரசிகர்களின் "சிந்தை கவர்ந்த சித்ரகானங்கள்" பொங்கலன்று நம உள்ளூர்க் கலைஞர்களால் பாடப்பட்டுப் பாராட்டுப் பெற்றதைக் கடந்த வாரம இப்பகுதியில் நாம குறிப்பிட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே!

"இந்நிகழ்ச்சியில் ஏனைய பாடகர்களும் நன்றாகப் பாடியிருக்கும பொழுது — குறிப்பிட்ட சிலரை மட்டுமதான் சஞ்ஜயன் பாராட்டியிருந்ததாக"ச் சில செல்விகள் குறைபட்டுக் கொண்டார்கள்!

இடமின்மை காரணமாகக் கடந்த வாரம விடுபட்டுப் போன அக்கலைஞர்களைப் பற்றியும் இம்முறை எழுதத்தான் இருந்தோம — அதற்கிடையில் அவசரப்பட்டு விட்டார்கள் அந்தச் செல்விகள்!

சித்தாரா இசையில் ராணி ஜோசப்பும தர்ஷினியும "பூப் பூக்கும மாசம தை மாசம்" என்ற — பொங்கல் நிகழ்ச்சிக்குப் பொருத்தமான பாடலை இனிமையாகப் பாடி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்கள்!

இலங்கையின் இன்றைய இளைய தலைமுறைப் பாடகர்களிலேயே நல்ல குரல் வளமுடையவராகத் திகழும சிவகுமார் சுஷிதாவுடன் சேர்ந்து கானராவின் இசையில் "சின்னவளே சின்னவளே செல்லக்கிளி யாரம்மா... செங்கமலர்க் கண் திறந்து என்னைக் கொஞ்சம பாரமமா..." என்று பாடிய பாடல் எல்லோரையும கவரும கானமாகவே அமைந்தது!

சுப்பர்சன்ஸ் இசையில் கலைக்கமலும் தனக்கேயுரித்தான பாணியில் "நந்தவனம பூத்திருக்குது அடி அம்மாடி... வண்டு வந்து ஆடிப்பாடத்தான்..." என்ற "இல்லம்" படப்பாடலை அருமையாகப் பாடி அனைவரையும் கவர்ந்தார்!

புதிய பாடல்களிடையே ஒரு பழைய பாடலும மனதைக் கவர்ந்தது! சித்தாரா இசையில் சகாயம் பெர்னாண்டோவும ராணி ஜோசப்பும் பாடிய "மயக்கமென்ன இந்த மௌனமென்ன மணிமாளிகைதான் கண்ணே..." என்ற "வசந்த மாளிகை" படப் பாடலே அப்பாடலாகும!

பாடினார்- ஆனாலும உணர்ச்சி பூர்வம் போதாது!

"பூங்காற்று உன் பேர் சொல்லக் கேட்டேனே இன்று" என்ற "வெற்றி விழா"ப் படப் பாடலை சந்திரமோகனும நிரோஷா விராஜினியும "சுப்பர்சன்ஸ்" இசையில் பாடினார்கள்!

பாடல்களை எப்படிப் பாடினால் ரசிகர்கள் ரசிப்பார்கள் என்பதற்கு சந்திரமோகன் பாடும பாணி நல்லதொரு எடுத்துக்காட்டு! எப்படியும பாடலாம என்றில்லாமல் இப்படித் தான் பாட வேண்டும என்ற வகையில் அமைந்திருந்தது அவர் பாடிய விதம!

அப்சராஸ் இசையில் மோகனும் நிலாமதியும் "தென் மதுரை வைகை நதி" என்ற "தர்மத்தின் தலைவன்" படப்பாடலைப் பாடி மகிழ்வித்தார்கள்—

"கண்ணம்மா கண்ணம்மா ஒண்ணு நான் சொல்லலாமா"



"மெல்லிசைப் பாடல்கள்" நிகழ்ச்சியில் சரோஜினி செல்வகுமாரின் பாடற் காட்சி—

என்ற "தென்றல் சுடும்" படப் பாடலை கான்ஸ் மௌலானா பாடிப் பார்வையாளர்களைக் கவர்ந்தார்!

அப்சராஸ் இசையில் "நின்னுக்கோரி வர்ணத்தை"ப் பாடி வழக்கம் போல் நினைவில் நிறைந்தார் நிலாமதி!

கடைசியாகச் சித்தாரா இசையில் மகிந்தகுமாரும தர்ஷினியும் "பாட்டி சொல்லைத் தட்டாதே" படப்பாடலான வண்ணாத்திப் பூச்சி வயசென்ன ஆச்சு?" என்ற பாடலை பாவத்துடன் அருமையாகப் பாடி நிகழ்ச்சியை மகிழ்ச்சிகரமாக நிறைவு செய்தார்கள்!

சந்திரபோஸின் இசையமைப்...

## தயாரிப்பு: சஞ்ஜயன்

★ கதிர் தில்லைநாதன்

## எங்கே நிம்மதி?

உயர் வானுக்கு நீ விண்மதி
உலாவரும் நிலாவில் நீ நிலாமதி
உன் பெயரோ வளர்மதி
உனை அடைந்தாலே நிம்மதி!

★ சிவகுமார்

## ஏக்க ஏந்திழை

நினைவினில் அவளே நிறைகிறாள்
நெஞ்சத்தை அவளே ஆளுகிறாள்
கனவிலும் அவளே வருகிறாள்
கண் விழித்ததும் மறைகிறாள்
ஏக்கத்தையும் தருகிறாள்!

★ எம ஆர் எம இமதியாஸ்

## கமராக் காதல்

உன் விழிக் "கமரா"வில்
"கிளிக்" ஆகிய நான்...
உன் இதய "அல்பத்"தில்
இன்னுமா இடம்பெறவில்லை?,

★ வ திலகா

## நெருக்கம்!

கண்ணே நான் உன்னுடன்
இருக்கும் தூரத்தை விட...
கண்ணுக்கும் இமைக்குமுள்ள
தூரமதான் அதிகம பெண்ணே!

★ க வி தர்ஷனி

## மறவாத உறவு!

எத்தனை முறை பார்த்தாலும்
என் உள்ளம் சலிப்பதில்லை!,
இரு விழியில் ஒரு விழியாய்
உன்னை நான் நினைத்துள்ளேன்!
இதயத்தில் அரைப்பாகத்தை
ஒதுக்கியுள்ளேன் உனக்காக!
உயிருள்ளவரை உன் பாசத்தை
நான் என்றும் மறக்க மாட்டேன்

★ ஏ எம எம நிஸ்பா

## இதயவரிகள்!

பூவாக நினைத்த அவளை
என் இதயத்தில் செருகினேன்!,
அவளோ முள்ளாக மாறி
இதயத்தை தைத்து விட்டாள்!,
அதில் வடியும் ரத்தமே
மணிக்கவிதை வரிகள்!

★ முனிரா தல்பிக்

## தவிப்பு!

நெஞ்சில் நிழலாடும் உன்
நினைவுகளோ பல கோடி!,
தனிமையில் அதைக் கூற
தவிக்கிறேன் மனம் வாடி!

★ பர்ஸானா ஹனீபா

## எல்லாம் நீயே!

என் உள்ளம் ஏடென்றால்
உன் நாமம் கதையாகும்!
என் இதயம் கோயிலென்றால்
உன் உருவம் தெய்வமாகும்!
என் விழிகள் விளக்கென்றால்
நீயே அதன் ஒளியாகும்!

★ ஆர் மோகன்ராஜ்



அவசரத்துக்கு ஒருவருக்கு மருந்து வாங்கி வருவது- பம்பில் தண்ணீர் எடுத்துக் கொடுப்பது- கடைக்குப் போய் வருவது- முதியவருக்கு உதவுவது போன்ற வேலைகளை முகம சுளிக்காமல் செய்து கொடுப்பாள்...

"நாம் காசுகளை அள்ளிக் கொடுத்துச் செய்யும் தர்மத்துக்கு அந்த நளினா வெறுங் கையால் செய்யும் உதவி சமமானதா?

நம்மோடு அவளையும் சரிநிகராக ஒப்பிட்டுப் பேசுகிறார்களே" என்ற அனிதா

...கேட்டார்-

அவர்கள் சொன்னார்கள் —

ஐயா அந்த மனிதர் பரம ஏழையாக இருந்தாலும் பரந்த உள்ளம் கொண்டவராக வாழ்ந்தவர்-

அவர் பட்டினி கிடந்து வந்தாலும் பிறர் பசியைப் பொறுக்க மாட்டார்-

தன் பசிக்குக் கையேந்தாத அவர் பிறர் பசியாற போக வேண்டிய இடத்துக்குக் கை காட்டுவார்-

ஏன் உமது இல்லத்து வாசலுக்கே எத்தனையோ பேரை அழைத்துக் கொண்டு வந்து விட்டிருக்கிறார்...

புண்ணியம் என்பது கொடுக்கும பொருளின் அளவைப் பொறுத்ததல்ல- மனதைப் பொறுத்ததே! அதனால் அம் மனிதருக்கு சொர்க்கப் பதவி கிட்டியது" என்று விளக்கம் தந்தார்கள்-

...முள்ளவர்-

தினந்தோறும் அவர் நூறு பேருக்காவது சாப்பாடு போடுவது வழக்கம்...

அவர் வெகுகாலம் சிறப்பாக வாழ்ந்து முதிய பருவத்தில் காலமானார்-

அவருக்கு மேலுலகத்தில் ...யின் தாராளத்தால்தான் என்...

தமபி தஙகைக்களே! இந்தக் காகம தனது கூடு இருக்கும இடத்திற்கு செல்ல வழி தெரியாமல் திண்டாடுகிறது- அதற்கு உதவி செய் யுஙகள்-

இதுவே அனிதாவை சிந்திக்க வைத்த மகானின் கதை!

புண்ணியம் என்பது பொருளின் அளவால் அல்ல... புத்தி பது அவர்களுக்கு விளஙக ஆரம பித்ததும் நளினாவை மற்றவர் கள் பாராட்டுவதில் உள்ள நியாயம் அவளுக்குப் புரிந்தது!

அதன் பின் அனிதா உதவும் பண்பில் உயர்வு தாழ்வு இல்லை என்பதை தெளிவாய் உணர்ந்து அடக்கமாய் வாழ்ந்தாள்!

[த—10],

சிறுவர் சிந்தாமணி

# உலகின் முதலாவது சைக்கிள் ஓட்ட சாம்பியன் யார்?

நவீன போக்குவரத்து வாகனஙகள் கண்டு பிடிக்கப்பட்ட பிறகு முதன் முதலாக சைக்கிளை வைத்துத் தான் பந்தயம நடத்தப்பட்டது,

மனிதன் குதிரை மீது ஏறிப் பறந்து யார் முதலில் வருவது என அந்தக் காலத்தில் பந்தயம கட்டினான், வெற்றி பெற்றவர்களுக்கு மணி, மகுடம போன்ற அணிமுடிகள் சூட்டிப் பாராட்டி மகிழ்ந்தான், அதே பழக்கம தான் சைக்கிள் கண்டுபிடிக்கப் பட்டதும, தோன்றியது,

ஆரமப கால சைக்கிளைப் பயன்படுத்தி உலகின் முதல் பந்தயம பாரிஸ் நகரில் 1868 ஆம ஆண்டு நடந்தது. இப் பந்தயத்தின் மொத்த தூரம எவ்வளவு தெரியுமா? இரண்டே கிலோ மீட்டர் தான்.

இதில் டாக்டர் ஜேமஸ் டுர் என்பவர் முதலில் கடந்து வெற்றி பெற்றார், இவரே உலகின் முதல் சைக்கிள் சாம்பியன் ஆவார்,

இதன் பிறகு 11 ஆண்டுகள் கழித்துத் தான் மூன்று மைல் தூரப் போட்டி ஒன்று நடந்தது, அமெரிக்காவில் நடந்த இப் போட்டியில் 12 நிமிடம 27 நொடிகளில் ஆரமப கால சைக்கிள் மாடலில் அமர்ந்து இம மூன்று மைல் தூரத்தை முதலில் கடந்தவர் பெயர் பார்க்கர்.

ஒலிமபிக் போட்டிகள் மீண்டும நடத்தப்பட்ட போது சைக்கிள் போட்டியும அதில் சேர்க்கப்பட்டது. அப்போது தான் இந்தப் போட்டிக்கு பைசிக்கிள் பந்தயம என்று பெயர் வழஙகப்பட்டது.

அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களின் ஆர்வத்தினால் தான் உலகம் முழுவதும சைக்கிள் பந்தயம பிரபலமான விளையாட்டாக பரவியது, அமெரிக்காவில் இன்று பிரபலமாக உள்ள விளையாட்டு ஆறு நாட்கள் நடக்கும சைக்கிள் பந்தயம இப்போட்டியில் பேட்ரிக் செர்ஸு என்ற பெல்ஜிய வீரர் 233 போட்டிகளில் கலந்து 88 முறை வெற்றிபெற்றுள்ளார்.

சைக்கிள் பந்தயஙகளில், இரண்டே இரண்டு வகை மட்டுமே உண்டு, ஒன்று திடல்களில் அரைக் கிலோ மீட்டர் தூரம வட்டமாகவோ, நீளமாகவோ பாதை அமைந்திருக்கும, இதை முதலில் கடப்பவர் வெற்றிபெற்றவர், இதற்கு "டிரக்" ரேஸ் என்று பெயர்.

இரண்டாவது சாலை பந்தயம குறைந்த பட்சம 80 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல்தான் இந்தப் பந்தயம நடத்தப்படுகிறது,

சாலை பந்தயத்திற்கு மட்டும மிகவும எடை குறைவான சைக்கிள்கள் தயாரிக்கப்படுகின்றன, எல்லா சைக்கிள்களிலும வேகமாய் போய் விட முடியாது. நினைத்த மாத்திரத்தில் நிறுத்த இதில் விசேஷ "பிரேக்குகள்" உள்ளன,

பிரான்ஸ் நாட்டில் ஆண்டு தோறும 4800 கிலோ மீட்டர் தூரமுள்ள "டுர் டி பிரான்ஸ்" என்ற சாலைப் பந்தயம நடைபெறுகிறது. இந்த தூரத்தை யார் குறைந்த நாட்களில் கடக்கிறாரோ அவரே வெற்றி பெற்றவர்,

83 ஆண்டுகளுக்கு முன்பு இப் போட்டி நடந்த போது ஒருவர் 29 நாட்களில் கடந்து சென்றார், 1986 இல் இந்தத் தூரத்தை கிரேக் லீமென்ட் என்ற வீரர் 23 நாட்களில் கடந்து சாதனை புரிந்துள்ளார், பார்வையாளர்கள் ஒரு கோடி பேர், 150 போட்டியாளர்கள், இது மாபெரும போட்டி, சராசரியாக இப்போட்டியில் வென்ற வீரர்கள் மணிக்கு 23 கிலோ மீட்டர் வேகத்தில் பறந்து சாதனை புரிந்துள்ளார்கள்.

இத்தாலி, பிரான்ஸ் அமெரிக்கா, ஜப்பான், பெல்ஜியம, கனடா ஆகிய நாடுகளில் சைக்கிள் பந்தயம முதல் தரமான முக்கிய போட்டியாக வளர்ச்சியடைந்துள்ளது,

ஜான் ஹவாட் என்ற அமெரிக்கர் சிறப்பாக தயாரிக்கப்பட்ட சைக்கிள் மூலம 1985 இல் மணிக்கு 152 மைல் வேகத்தில் ஓட்டிக் காட்டினார்.

காரில் கூடப் போக முடியாத இந்த வேகம உலக சாதனை புத்தகத்தில் பதிவாகியுள்ளது, (ம-455)

# கூடைப்பந்தாட்டம் ஆடுவதில் உயரமான மனிதர்கள் சமர்த்தர்கள்

நாம் அவ்வப்போது மிக உயரமானவர்களைச் சந்திக்கிறோம்-

மிக உயரமான இளைஞனாக இருந்தால் அவனைக் கூடைப் பந்தாட்டத்துடன் இணைத்துப் பார்க்கிறோம்-

சோவியத் கூடைப்பந்தாட்டத்தில் முதலாவது உயர்ந்த மனிதராக ய அக்தயேவ் திகழ்ந்தார்- 232 செ மீ உயரம் இருந்த அவர் தமது எதிராளிகளுக்கு சிம்மசொப்பனமாக விளங்கினார்-

எந்தவித சிரமமும் இன்றி நின்ற கொண்டே கூடைக்குள் பந்தைப் போட்டு விடுவார்-

கூடைப்பந்தாட்டத் திடல்களுக்கு வெளியேயும் இத்தகைய உயர்ந்த மனிதர்கள் உள்ளனர்-

மிக உயரமான பலசாலியான குருமின்ஷ் என்பவர் ஒரு முறை ஒரு காரை அலாக்காகத் தூக்கிக் கொண்டு கூட்டத்தில் நடந்து சென்றதாகக் கூறக் கேட்டிருக்கிறோம்

ஒருநாள் கூடைப்பந்தாட்ட வீரர் வி த்காசெங்கோ (220 செ மீ) தமது குடித்தனப் பகுதியில் திருடன் ஒருவன் நுழைந்திருப்பதைக் கண்டார்-

ஒடிசலான உருவம் கொண்ட அத்திருடன் இவரைப் பார்த்தவுடன் "தயவு செய்து என்னை எதுவும் செய்து விடாதீர்கள்" என்ற கண்ணில் நீர் மல்க கெஞ்சினான்-

அந்த விளையாட்டு வீரர் தமது வீட்டுக்குள் நுழைந்த திருடனைக் கழுத்தைப் பிடித்து தூக்கிக் கொண்டுபோய் காவல் துறையினரிடம் ஒப்படைத்தார்-

சாதாரண மனிதர்களிடையே வாழ்வது இத்தகைய உயர்ந்த மனிதர்களுக்குச் சிரமமான காரியம்தான்! இத்தகையவர்கள் பின் சீட்டில் இருந்து தான் காரை ஓட்ட வேண்டியிருக்கும்! [ம]

## தெரியாது என்று சொல்லலாமா?

அருணகிரிநாதர் போட்டிக்கு சென்றபோது, "போட்டியின் நிபந்தனை தெரியுமா?" என்று ஒருவர் கேட்க, "தெரியாது" என்று பதிலளித்தால் அது தோற்றதாக ஆகிவிடும் எனக் கருதி "சொன்னால் தெரியும!" என்ற பதில் கூறினார்-

இதைப் போலவே யாராவது நம்மிடம "உருது தெரியுமா!" என்று கேட்டால் "படித்தால் தெரியும்!" என்று பதிலளிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்- "கார் ஓட்டத் தெரியுமா?" என்று கேட்டால், "கற்றுக் கொண்டால் தெரியும்" என்றும் "சொந்த வீடு உண்டா?" என்று கேட்டால்" "வீடு வாஙகினால் சொந்தம்!" என்று பதில் கூற வேண்டும- (ம-10)

# மறைந்த பின்னரும் மர்மங்கள் தொடரும் ரஜனீஸ் சுவாமி!

## அவரின் விதவைகள் என்றார்கள் 3 அழகிகள் பிள்ளைகள் என்று எத்தனை பேர் வருவரோ?


செக்ஸ் சாமியார் என்று அழைக்கப்பட்டு வந்த ரஜனீஸ் சுவாமி கடந்த வாரம் பூனாவில் காலமானார். தீவிர ஆஸ்துமா நோயினால் நீண்ட காலமாக அவதிப்பட்டு வந்த அவர் மாரடைப்பால் மரணமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பகவான் ரஜனீஸ் தன்னை ஒரு இருபதாம நூற்றாண்டின் யோகி என அழைத்துக் கொண்டார். அவரிடம சென்றவர்கள் லப்பட்டிருக்கிறது, இதையே தான் நானும சொல்கிறேன்.

இப்படி ஒரு புதிய பாணியில் தனக்கென ஒரு தனித்தத்துவத்தை வகுத்துக் கொண்டார் ரஜனீஸ் இளமையில் இவருக்கு சமணர்களோடு நெருக்கம அதிகமாக இருந்ததாம. இதனால் இவர் இந்த தர்மத்தின் பல்வேறு தத்துவங்களைப் படித்து அறிந்து கொண்டார்.

இவற்றில் தாந்திரிகம இவரை மிகவும ஈர்த்தது. இந்த தர்மத் ரஜனீஸ் நல்லவரோ கெட்டவரோ நிச்சயம ஒரு மகத்தான மனிதர் தான் என்பதில் சந்தேகமே இல்லை. அவர் மறைந்ததைத் தொடர்ந்து அவர் உபதேசித்த தத்துவங்களும வழிமுறைகளும மங்கி மறைந்து விட முடியும. ஆனால் இந்திய ஆன்மிக உலகை ஒரு குலக்கு கலக்கியவர் அவர் என்பதை மறுப்பதற்கில்லை!

ரஜனீஸ் பூனாவில் ஆசிரமம் நடத்தி வந்தார். இங்கு ஏராள



ஒரு பக்தையின் மனக்குறையை தீர்த்து வைக்கும் ரஜனீஸ் சுவாமி— (ம)

பட்டினி கிடக்க வேண்டிய அவசியம இருக்கவில்லை. எதையும தியாகம செய்ய வேண்டியிருக்கவில்லை. ஆணும, பெண்ணும தாம

தின் ஒரு கிளையான தாந்திரிகத்தில் கலவியையும ஒரு உபாசனையாகச் செய்ய முடியும— மதமாத, மாமிசம மற்றும்

மான வெளிநாட்டவர் வந்து தங்கியிருந்தனர். குருப் செக்ஸ எனப்படும ஒரு மண்டபத்தில் ஆண்களும, பெண்களுமாக

ஏனைய சாமியார்களிடமிருந்தும அவருடைய கொள்கைகளை ஏனைய ஆன்மிகத் தத்துவங்களிடமிருந்தும வேறுபடுத்திக் காட்டி உள்நாட்டிலும வெளிநாடுகளிலும பெருமளவில் பக்தர்களையும சீடர்களையும ஆகர்ஷித்தது.

விடியோ மூலமும, ஒலிப்பதிவு நாடாக்கள் மூலமும ரஜனீஸின் பகிரங்கமாக அறிவித்துக் கொண்டார்கள்.

சுவாமியின் மறைவைத் தாளாத ஒரு விதவை கத்தியால் தன்னைத் தானே குத்தித் தற்கொலை செய்து கொண்டார்.

அவரின் விதவைகள் தாம் என்று 3 அழகிகள் கூறி விட்டார்கள்— இனி ரஜனீஸ் சுவாமியின் பிள்ளைகள் நாம என்று

**— அருள். சத்தியநாதன் —**

தத்துவங்களை யோக விளக்கங்களை ஒருவரால் கற்றுக் கொள்ள முடியும், தியாகம துறவறம எல்லாம அவசியமில்லை. நிர்வாணத்தை சீக்கிரமே அடைந்து விட முடியும என்று உபதேசித்து இவர் சப்பாணமிட்டு அமர்ந்து குண்டலினியை எழுப்ப வேண்டியதில்லை, என்று கூறியதோடு இன்பத்தைத் துறக்க வேண்டாம, அணைத்துக் கொள்ளுங்கள். அள்ளிப் பருகுங்கள் என்றார்.

நிர்வாணத்தைப் பெற உடலை வருத்திக் கொள்ள வேண்டாம. ஆணும, பெண்ணும ஆனந்தமாக இணைந்து காம சுகம அனுபவியுங்கள், அதன் உச்சக் கட்டத்தில் முக்தி மிளிரும என்று கூறினார்.

இப்படி உபதேசம பண்ணினால் இளவட்டங்கள் சும்மா இருப்பார்களா என்ன? வெளிநாட்டு பக்தர்கள் – பெருமபாலும பெரும பணக்காரர்கள் அவரைச் சுற்றிக் கூடினார்கள்—

கூறிக் கொண்டு எத்தனை பேர் வருவார்களோ யார் கண்டார்கள்—

ரஜனீஸ் சில காலம பத்திரிகைகளோடு கோபித்துக் கொண்டு இனிமேல் பத்திரிகை வாசிப்பதேயில்லை என்று விரதம பூண்டி

**லட்ச கணக்கில் பக்தரை ரஜனீஸ் சுவாமி கவர்ந்து இழுத்த**

விமர்சித்திருந்தனர்.

சமீபத்தில் சுமார் ஓராண்டுக்கு முன்னர், தன்னை கௌதமர் என அழைக்குமபடி அவர் சொல்லியிருந்தார். கௌதம புத்தரின் ஆன்மா தன்னுடலில் புகுந்திருப்பதால் கௌதமர் என்றே தன்னை அழைக்க வேண்டும என அவர் கூறினார்.

திடீரென இவர் இப்படியொரு ஸ்டண்ட் அடித்ததில் பலருக்கு ஒரே குழப்பம, ஆனால் அவரே பின்னர் தன்னை கௌதமர் என அழைக்க வேண்டாமெனவும பழையபடியே ரஜனீஸ் என்றே அழைக்குமபடியும தெரிவித்தார்.

ஏன் பழைய பெயருக்கே திரும்பி விட்டீர்கள் என அவரிடம கேட்ட போது கௌதமரின் ஆன்மாவை தற்காலிகமாகவே என்னுடலில் குடியேற்றியிருந்தேன், அவரைப் போகச் சொல்லி விட்டதால் நான் இப்போது பழையபடி ரஜனீஸ் ஆகி விட்டேன் என்று பதில் சொல்லி விட்டார் அவர்.


ரஜனீஸின் வலது கையாக



ரஜனீஸ் சுவாமி

யெழுப்பியதோடு இருமபுக்கரம கொண்டு அதை நிர்வகித்தும வந்தார்கள்.

அவர் தான் எனது குரு, காதலர் எல்லாமே என்று கூறிவந்த மா ஆனந்த ஷீலா 1985 ஆம ஆண்டளவில் 5 கோடி 50 லட்சம டாலர்களையும ரஜனீஸ் புரத்தைக் கட்டியாண்ட பல பெரும புள்ளிகளையும தன்னு



# லட்ச கணக்கில் பக்தரை ரஜனீஸ் சுவாமி கவர்ந்து இழுத்த விதம்




ஒரு பக்தையின் மனக்குறையை தீர்த்து வைக்கும் ரஜனீஸ் சுவாமி— (ம)

பட்டினி கிடக்க வேண்டிய அவசியமும் இருக்கவில்லை. எதையும் தியாகம் செய்ய வேண்டியிருக்கவில்லை. ஆணும், பெண்ணும் தாம்பத்திய உறவில் மூழ்கித் திளைத்து உச்ச நிலையை அடையும் போதும் அங்கே நிர்வாணம் பிறக்கிறது என்று இவர் உபதேசித்தார்.

தின் ஒரு கிளையான தாந்திரிகத்தில் கலவியையும் ஒரு உபாசனையாகச் செய்ய முடியும்— மது மாது, மாமிசம் மற்றும் போதைப் பொருட்களுக்கு தாந்திரிகத்தில் இடமுண்டு.

ரஜனீஸ் இந்த தாந்திரீகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு புது முக்திக்கான பாதையை



பக்தியின் உச்சக் கட்டத்தில் ஆழ்ந்து விட்ட பக்தர்கள்— (ம)

கோபாலகிருஷ்ணன் ஆயர் பாடி கோபிகைகளுடன் ஜலக்கிரீடை செய்து மகிழவில்லையா?] கோபியர் யமுனா நதியில் நீராடித் திளைத்திருக்கும் போது குறும்புக்கார கிருஷ்ணன் கோபியரின் ஆடைகளை கையில் எடுத்துக் கொண்டு மரத்தின் மீதேறி அமர்ந்து ஆடைகள் வேண்டுமென்றால் அம்மணமாகக் கரையேறி வாருங்கள் என்று அவர்களிடம் பிடிவாதமாகச் சொல்லவில்லையா?

இங்கே எல்லாம் பாலியல் மூலமும் முக்தியை அடையக் கூடும் என்ற [illegible] சொல்

வகுத்து மக்கள் முன் வைத்தால் அது புதுமையாகவும் கவர்ச்சிக்குரியதாகவும் இருக்கும் என்று எண்ணினார், அவர் நினைத்த மாதிரியே நடந்தது.

சுலபமாக முக்தி நிலையை அடைவது எப்படி என மூளையைக் குழப்பிக் கொண்டிருக்கும் வெளிநாட்டவரிடையே தனது தத்துவம் நன்றாக விலைபோகும் என அவர் போட்ட கணக்கும் தப்பவில்லை.

இவ்வாறான முற்றிலும் வித்தியாசமான ஒரு ஆன்மிக வழியை உருவாக்கி பல்லாயிரக் கணக்கானோரை அதில் ஈடுபடுத்திய

மான வெளிநாட்டவர் வந்து தங்கியிருந்தனர். குரூப் செக்ஸ் எனப்படும் ஒரு மண்டபத்தில் ஆண்களும், பெண்களுமாக கூட்டம் கூட்டமாக காம உறவில் ஈடுபடுதல், போதைவஸ்து பாவனை என்பனவெல்லாம் இங்கு சர்வ சாதாரணம் என்று செய்திகள் வெளிவரத் தொடங்கின.

அப்போது ஆட்சி மாற்றம் நடந்து ஜனதா கட்சி மொரார்ஜி தேசாயின் தலைமையில் அரசு கட்டில் ஏறியது. தேசாய்க்கு ரஜனீஸின் விவகாரங்கள் பிடிக்கவில்லை இதையடுத்து ரஜனீஸ் அவசர அவசரமாக தனது பரிவாரங்களோடு அமெரிக்காவுக்கு மூட்டை கட்ட வேண்டியதாயிற்று.

அமெரிக்காவின் ஒரேகன் மாநிலத்தில் பல்லாயிரம் ஏக்கர் தரிசு நிலத்தில் ரஜனீஸ் புரம் என்ற பெயரில் நவீன வசதிகள் அனைத்தையும் கொண்ட "எதிர் கால நகரம்" ஒன்றை ரஜனீஸ் கட்டியெழுப்பினார்.

ஆனால் அங்கும் அவரால் அதிக காலம் தாக்குப்பிடிக்க முடியவில்லை. அமெரிக்காவில் இருந்த போது அவர் வாய்க்கு வந்தபடி வசை பாடிய இந்தியாவுக்கே 1985 ஆம் ஆண்டு திரும்பி வந்தார், கிரேக்கத்துக்கு சென்ற போது அந்நாடு அவரைத் திருப்பி அனுப்பியது பல நாடுகள் தமது கதவுகளை மூடிக்கொண்டன. இதன் பின்னர் பூனாவே கதி என தமது சீடர்களுடன் ரஜனீஸ் காலத்தை அதிக சத்தமின்றி கடத்தி வந்தார்.

"ஸ்டண்ட்" பண்ண வழியில்லாத நிலையில் வாழ்ந்தபோது தான் அவரது உயிர் பிரிந்து விட்டிருக்கிறது.

ரஜனீஸின் போக்கும் பார்வையும் மிகவும் வித்தியாசமானது. இந்த வித்தியாசம் தான் அவரை

தத்துவங்களை யோக விளக்கங்களை ஒருவரால் கற்றுக் கொள்ள முடியும், தியாகம் துறவறம் எல்லாம் அவசியமில்லை. நிர்வாணத்தை சீக்கிரமே அடைந்து விட முடியும் என்று உபதேசித்து இவர் சப்பாணமிட்டு அமர்ந்து குண்டலினியை எழுப்ப வேண்டியதில்லை. என்று கூறியதோடு இன்பத்தைத் துறக்க வேண்டாம், அணைத்துக் கொள்ளுங்கள். அள்ளிப் பருகுங்கள் என்றார்.

நிர்வாணத்தைப் பெற உடலை வருத்திக் கொள்ள வேண்டாம். ஆணும், பெண்ணும் ஆனந்தமாக இணைந்து காம சுகம் அனுபவியுங்கள், அதன் உச்சக் கட்டத்தில் முக்தி மிளிரும் என்று கூறினார்.

இப்படி உபதேசம் பண்ணினால் இளவட்டங்கள் சும்மா இருப்பார்களா என்ன? வெளிநாட்டு பக்தர்கள் — பெரும்பாலும் பெரும் பணக்காரர்கள் அவரைச் சுற்றிக் கூடினார்கள்— அவரை பகவான் என்றழைத்தனர், செல்வத்தை அவரது காலடியில் கொட்டினர், இப்படித்தான் ரஜனீஸ் இயக்கம் மலர்ந்தது—

தனது பெருமைகளை எல்லாம் கடைசி காலத்தில் இழந்திருந்த போதிலும் ரஜனீஸை சுற்றி பக்தர்கள் கூட்டம் இருக்கவே செய்தது— அவருக்காக அவர்கள் எதையும் செய்யத்தயாராக இருந்தனர்,

ரஜனீஸ் காலமானார் என்றதுமே மூன்று அழகிகள் நாம் விதவைகளாகி விட்டோம் என

கூறிக் கொண்டு எத்தனை பேர் வருவார்களோ யார் கண்டார்கள்—


ரஜனீஸ் சில காலம் பத்திரிகைகளோடு கோபித்துக் கொண்டு இனிமேல் பத்திரிகை வாசிப்பதேயில்லை என்று விரதம் பூண்டிருந்தார். ஆனாலும் பத்திரிகைகள் இவரை விட்டபாடில்லை. பல மாதங்களாக வாசிப்பதை இவர் நிறுத்தியிருப்பதால் பகவானின் உபதேசங்களில் பழைமை வாடை வீசுகிறது— இன்றைய நடப்புத் தெரியாததால் பழைய உதாரணங்களையே சுட்டிக் காட்டுகிறார் என நிருபர்கள்

ஆன்மாவை தற்காலிகமாகவே என்னுடலில் குடியேற்றியிருந்தேன், அவரைப் போகச் சொல்லி விட்டதால் நான் இப்போது பழையபடி ரஜனீஸ் ஆகி விட்டேன் என்று பதில் சொல்லி விட்டார் அவர்.

ரஜனீஸின் வலது கையாக

தார்கள்.

அவர் தான் எனது குரு, காதலர் எல்லாமே என்று கூறிவந்த மா ஆனந்த ஷீலா 1985 ஆம் ஆண்டளவில் 5 கோடி 50 லட்சம் டாலர்களையும் ரஜனீஸ் புரத்தைக் கட்டியாண்ட பல பெரும் புள்ளிகளையும் தன்னு



விளங்கியவர் மா ஆனந்த ஷீலா என்ற நெஞ்சுறுதியும், கடுமையான போக்கும் கொண்ட பெண் இவரது உதவியாளரின் பெயர் மாயோகவித்யா. இவ்விரு சன்னியாசினிகளும் (ஆனால் இருவருமே இடையில் தைத்தப்பாக்கி வைத்திருந்தார்கள்) அமெரிக்காவில் ரஜனீஸ் புரத்தைக் கட்டி

டன் அழைத்துக் கொண்டு சுவிட்ஸர்லாந்துக்குப் பறந்து சென்றார்,

அதன் பின்னர் தான் ரஜனீஸ் புரம் கவிழ்ந்தது. அமெரிக்க அரசாங்கம் ரஜனீஸை கைது செய்து சிறையில் தள்ளியது,

(21ஆம் பக்கம் பார்க்க)



ரஜனீஸ் சுவாமி கண்ட கூட்டு வழிபாடு இந்திரலோகத்தை பூமிக்குக் கொண்டு வருவது போன்றது. (ம)


ஸ்ரீதேவி

# சிந்தாமணி கேள்வி ? பதில்

திரிஞானி

இசட் ஏ எம் நஜிப்தீன்,
வறக்காமுறை—
கே— ஒருவனுக்கு அன்பான மனைவி கிடைத்தால் வேறு ஏதும் தேவையா?
ப— ஆம்! நிம்மதியாக வாழ்க்கை நடத்த பணம் தேவை—

★

செல்வி வேலின் ஹரஸ்ப்
னைக்குடா—
கே— ஸ்ரீதேவி தற்போது ஏன் தமிழ் திரைப் படங்களில் நடிப்பதில்லை— உங்களால் காரணத்தை சொல்ல முடியுமா?
ப— ஹிந்தி மார்க்கட்டில் கிடைக்குமளவுக்கு பணம் தமிழ் மார்க்கட்டில் கிடைக்காததால்—

★

எம் ஜே எ ஹாசிர் கஹைப்
அக்குரை—
கே— அன்றைய சாஜஹான் தாஜ்மகாலைக் கட்டினான்— இன்றைய சாஜஹான்கள்?
ப— இன்சூரன்ஸ் கட்டுகிறார்களே!

★

இ ஞானேந்திரம
பண்டாரவளை—
கே— ரஜனிகாந்த் சந்நியாசியாக மாறி வருவதன் காரணம் என்ன?
ப— அவர் மட்டுமா? இளையராஜா... சினிமா உலகில் இது ஒரு புது பாஷன்—

★

கே எம் றமீஸ்,
...
கே— எங்கள் வீட்டில் நல்ல ... என்ன வழி செய்வது?
ப— எடுத்த படங்களை ஒரு ஸ்டுடியோவில் கொடுத்து கழு




சுபியான்,
மாதிப்பொளை,
கே— ஏழை மக்கள் மகிழ்ச்சி அடைவது எப்போது?
ப— ஏழைகளுக்கு மகிழ்ச்சி என்பது எட்டாக் கனியாகும!

★

உ. கஜேந்திரன்,
திருகோணமலை.
கே— கொழும்பில் ஆங்கிலப் படம் பார்ப்பதற்குத் தியேட்டர்களுக்கு இளம் பெண்கள் வருகிறார்கள்! ஆனால் திருகோணமலையில் ஆங்கிலப் படம் பார்ப்பதற்குப் பெண்கள் வருவதில்லையே ஏன்?
ப— நீர் படம் பார்க்க போகிறீரா? இளம் பெண்களைப் பார்க்கப் போகிறீரா?

★

குசைமா ஸலாம,
குதிசியா ஸலாம,
கிண்ணியா - 1.


ரஜனிகாந்த்

கே— உங்கள் மனைவிக்கு முன்னால் ஒரு பெண் உங்களிடம உங்களைத் திருமணம முடிக்க விருமபுவதாகச் சொன்னால் என்ன செய்வீர்கள்?
ப— ஐயையோ! நீங்கள் இலஙகையில் தவறுதலாக பிறந்து விட்டீர்களே! "சின்ன வீடு" வைக்கும வழக்கம தமிழ்நாட்டில்
வைதௌவியம!

★

ஆர் ஷரீன்,
கண்டி.
கே— சாதி, மதம என்ற ஒன்று இல்லாவிட்டால் எமது சமுதாயம எப்படி இருக்கும?
ப— மிக நன்றாக இருக்கும!

★

எஸ் சிவராம,
நாவலப்பிட்டி.
கே— நீங்கள் ஒரு கூட்டத்துக்குச் சென்று உஙகளை ஒரு புலவரைப் பற்றி பேசச் சொன்னால் யாரைப் பற்றிப் பேசுவீர்கள்?
ப— கமபனைப் பற்றியே பேசுவேன்.

★

செல்விகள் பொ திருலோகேஸ்வரி, ஆ ராஜேஸ்வரி,
லபுகல்ல போஸ்ட்
கே— ஞாபகசக்திக் குறைவு எதனால் ஏற்படுகிறது?
ப— எந்த விஷயத்தில் உள்ளம உள்ளபடி நாட்டம கொள்கிறதோ அது ஞாபகத்தில் இருந்து இலேசில் அழியாது!

★

எம ஜே எம பர்ஸானா,
மாகோ.
கே— பகலில் பழஙகள் விழுவதை விட ஏன் இரவில் அதிகமாக விழுகின்றன?
ப— பூமி குளிரும போது அதன் மையக் கவர்ச்சி அதிகரிப்பதால்!

★

டீஸிர் அகமட்,
ஊமட் மாவத்த.
கே— வாழ்க்கையில் ஒருவருக்கு எந்தச் சந்தர்ப்பத்தில் சந்தேகம ஏற்பட இடமுண்டு?
ப— சந்தேகம எல்லாச் சந்தர்ப்பத்திலும ஏற்படலாம! ஆனால் குடுமபத்தில் அது ஏற்பட இடமளித்தல் ஆகாது!

★

ஆர் விஜயகுமார்,
கொள்ளுப்பிட்டி.
கே— இறைவன் மனிதனாகப் பிறந்தால்?
ப— அவன் தேவசுதன் என்று போற்றப்படுவான்!

★

...மல் கரப்பொத்தானுக்குப் பயப்படும பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
ப— கணவனை விட கரப்பொத்தானின் கடி அபாயகரமானது என்பதால்!

★

வீ ரஙகன், த தேவன்,
தேற்றாத்திவு.
கே— சுய உணர்வுடன் இருக்கும போது மூச்சு விடுவதிலும பார்க்க உறஙகும போது ஆழ்ந்த மூச்சு வருவது ஏன்?
ப— சூட்சும உடமபும சேர்ந்து மூச்சு விடுவதால்!

★



# மிதிலையில் இராமனை வரவேற்ற கொடி எது?

## கம்பரின் கவிநயம் விவரிக்கும் பாங்கு

பொய் கூறும உரிமை புலவர்களுக்கே உரியது. அந்த திறமை அவர்களுக்கு இயல்பாகவே அமைகின்றது.

நல்ல சொல் நயம, பொருள் நயம கொண்ட செய்யுள்களை இயற்றவல்ல புலவர்கள் அவை சுவைபடத்தக்கதாய் சிற்சில இடஙகளில் தம கற்பனைக் கருத்தையேற்றி பாடல்களின் கருத்தை இலகுவாக்கி தருவதும, அவற்றிற்கு அழகூட்டுவதுமுண்டு.

தற்குறிப்பேற்ற அணி நயத்தில் அதிகமான பாடல்கள் இவ்வித இனிமையைத் தருவது உண்மை.

இந்தத் திறமையில் கவிச்சக்கரவர்த்தி கமபன் முதல் நம நாட்டு நவாலியூர் சோமசுந்தரப் புலவர் வரை அதிகமான புலவர்கள் திறமைசாலிகளாகவே அறியப் பட்டுள்ளனர்.

கமபரின் கமபராமாயணத்திலே இராமன் ...

போ!" என்று விரட்டுவது போலிருந்ததாம. அக்கருத்தை நல்கும பாடல் வரிகள் இது தான்:

போருழந் தெடுத்த வாரெயி
னெடுங் கொடி
வாரலென் பனபோன் மறித்துக்
கை காட்ட

இயற்கையாக கொடி அசைகின்றது. அது புலவர்களின் கருத்தேற்றி விளக்க சாதகமாக அமைந்து விடுகின்றது.

—நுக்மணி ராமச்சந்திரன்—

இராமனுக்கு நன்மை ஏற்படுவதையும, கோவலனுக்கு தீமையுண்டாவதையும ஒரு கொடியசைவின் மேலேற்றி இடத்திற் கேற்ப புனைந்துரைத்த இரு...

சின தன்மையை நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அழகுபட சித்திரித்துள்ளார்.

புதருக்கடியில் மலருகின்ற காந்தள் எனும ஒருவகைப் பூ (கார்த்திகைப்பூ)வை விஷங் கொண்ட அரவமதான் என அஞ்சி புலுனியினஙகள் ஏனையவற்றிற்கு எச்சரிக்கை செய்வது போல சப்திக்க, அணில்கள் அச் செய்தியை தந்தி போல எடுத்துச் சென்று சொல்லுகின்றதாம.

அதாவது அணில்கள் அஙகும இஙகும ஓடி ஓடி கீச்சிடுவதை தந்தி கொடுப்பதாக உருவகிக்கப் படுகின்றது.

அதைக் கேட்டு அஙகு வாசம...

வகைக் கொடியில் மலர் மலர்கின்ற தன்மை சிரிப்பது போன்றிருக்குமாம.

இயற்கையாக மலர்கள் மலர்வதையும, பிராணிகளின் ஒலிகளையும தன் கற்பனைக்குள் விட்டு அர்த்தமுள்ள, சுவையுள்ள செய்கைகளாக விவரித்துக் காட்டுவது எல்லோருக்கும இயல்பாக வரக் கூடியதல்ல.

இது புலவரின் பாடல்:

புதர்மலர்ந்த காந்தளினை
விடப்பாமபென்றஞ்சிப்
புளினியினமெச்சரிக்க
அணில் தந்தி புகல
வதியுமிளம பூவையினம
கேட்டுவாய் பொத்த
மலர்கின்ற பனி முசுண்டை
மடமைகண்டு சிரிக்கும.

— இப்படியான நகைச்சுவையும கவிச்சுவையும கொண்ட பாடல்கள் இலக்கிய நெஞ்சஙகளில் எளிதாய் இடமபிடிக்க தவறுவதுமில்லை.

றைய சார்ஜொன்கள்?

ப– இன்சூரன்ஸ் கட்டுகிறார் களே!

★

இ ஞானேந்திரம

பண்டாரவளை–

கே– ரஜனிகாந்த் சந்நியாசி யாக மாறி வருவதன் காரணம் என்ன?

ப– அவர் [illegible]? [illegible] [illegible] சினிமா உலகில் இது ஒரு புது பாஷன்–

★

கே எம றமீஸா,

[illegible]–

கே– எங்கள் வீட்டில் நல்ல [illegible] [illegible] படம எடுத்த [illegible] ணம இருக்கிறது– [illegible] செல்வ தற்கு என்ன வழி செய்வது?

ப– எடுத்த படஙகளை ஒரு ஸ்டூடியோவில் கொடுத்து கழு



கமலஹாசன்

வச் சொல்லுஙகள்– போய்விடும

★

செல்விகள்– நஸ்லி அஸீஸ், நஸீபா அஸீஸ்

காத்தான்குடி– 3

கே– ரஜனி கமல் பிரபு ஆகி யோரின் சிரிப்பை வரிசைப்படுத் துக,

ப– மூவருக்குமே சரியாகச் சிரிக்கத் தெரியாது!

★

பைஸீன், பஸ்மின்,

களுத்துறை (தெற்கு).

கே– ஒரு நாட்டின் ஜனாதிபதி யாக வருவதற்கு என்ன செய்ய வேண்டும?

ப– ஜனாதிபதித் தேர்தலில் நிற்க வேண்டும! அதில் வெற்றி யும பெற வேண்டும!

★

செல்விகள் ருபஸ்ஸிரா

[illegible]



ரஜனிகாந்த்

கே– உஙகள் மனைவிக்கு முன்னால் ஒரு பெண் உஙகளி டம உஙகளைத் திருமணம முடிக்க விருமபுவதாகச் சொன் னால் என்ன செய்வீர்கள்?

ப– ஐயையோ! நீஙகள் இலஙகையில் தவறுதலாக பிறந்து விட்டீர்களே! "சின்ன வீடு" வைக்கும வழக்கம தமிழ்நாட்டில் அல்லவா உண்டு!

★

செல்வி எபி எம பஷிபா,

அக்குறணை.

கே– ஆண்களிடம பெண்ணைப் பிடித்திருக்கிறதா என்று கேட்கி றார்கள்? ஆனால் பெண்ணைப் பார்த்து மாப்பிள்ளையைப் பிடித் திருக்கிறதா என்று கேட்பதில் லையே – அப்படியான பெற் றோரைப் பற்றி நீஙகள் என்ன நினைக்கிறீர்கள்?

ப– பெண்ணை கழுத்தைப் பிடித்து தள்ள வேண்டும என்று நினைக்கும பெற்றோர் கேட்க மாட்டார்கள்! தஙகள் பெண் நன்றாக வாழ வேண்டும என்று நினைக்கும பெற்றோர் கேட் பார்கள்!

★

செல்விகள் நியாஸா, சிபாயா,

கல்ஹின்னை.

கே– பெண்கள் வாழ்க்கையில் சந்திக்கக் கூடாதது எது?, சந்திக் கக் கூடியது எது?

ப– சந்திக்கக் கூடியது திரு மணம! சந்திக்கக் கூடாதது



இளைய[illegible]

[illegible] இருந்த இலேசில் அழியாது!

★

எம ஜே எம பர்ஸானா,

மாகோ.

கே– பகலில் பழஙகள் விழு வதை விட ஏன் இரவில் அதிக மாக விழுகின்றன?

ப– பூமி குளிரும போது அதன் மையக் கவர்ச்சி அதிகரிப்பதால்!

★

பஸீர் அகமட்,

ஸமட் மாவத்த.

கே– வாழ்க்கையில் ஒருவ ருக்கு எந்தச் சந்தர்ப்பத்தில் சந்தேகம ஏற்பட இடமுண்டு?

ப– சந்தேகம எல்லாச் சந் தர்ப்பத்திலும ஏற்படலாம! ஆனால் குடுமபத்தில் அது ஏற்பட இடமளித்தல் ஆகாது!

★

ஆர் விஜயகுமார்,

கொள்ளுப்பிட்டி.

கே– இறைவன் மனிதனாகப் பிறந்தால்?

ப– அவன் தேவசுதன் என்று போற்றப்படுவான்!

★

எம எஸ் யாஸ்மி இல்யாஸ்,

அக்குறணை.

கே– இழுக்க இழுக்க இன் பம தரும பொருள் என்ன?

ப– தேர்!



பிரபு

★

எம எப் எம மிஸ்வான்,

அனுராதபுரம.

கே– இப்பொழுது இலஙகை யில் நடு நடுஙக வைக்கும காரி யம எது?

ப– தேடலும கடத்தலும தான்!

★

மலாபிரா மஜீட்,

முஹாரா மொஹமட்,

குருநாகல்.

கே– பொறுமையாய் இருப்ப தற்கு என்ன செய்ய வேண்டும?

ப– அப்படி இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும!

★

செல்வி எச் எஸ் அஸ்மியா,

முருத்தலாவ.

கே– கணவனுக்குப் பயப்படா [illegible]

# கம்பரின் கவிநயம் விவரிக்கும் பாங்கு

பொய் கூறும உரிமை புலவர் களுக்கே உரியது. அந்த திறமை அவர்களுக்கு இயல்பாகவே அமைகின்றது.

நல்ல சொல் நயம, பொருள் நயம கொண்ட செய்யுள்களை இயற்றவல்ல புலவர்கள் அவை சுவைபடத்தக்கதாய் சிற்சில இடஙகளில் தம கற்பனைக் கருத்தையேற்றி பாடல்களின் கருத்தை இலகுவாக்கி தருவதும, அவற்றிற்கு அழகூட்டுவதுமுண்டு.

தற்குறிப்பேற்ற அணி நயத்தில் அதிகமான பாடல்கள் இவ்வித இனிமையைத் தருவது உண்மை.

இந்தத் திறமையில் கவிச்சக்கர வர்த்தி கமபன் முதல் நம நாட்டு நவாலியூர் சோமசுந்தரப் புலவர் வரை அதிகமான புலவர்கள் திறமைசாலிகளாகவே அறியப் பட்டுள்ளனர்.

கமபரின் கமபராமாயணத் திலே இராமன் மிதிலை நகர் செல்லும காட்சி அழகுற வர் ணிக்கப்பட்டுள்ளதை நாம அறி வோம. இராமனும சீதையும "அண்ணலும நோக்க அவளும நோக்கிய" சமபவம் அஙகு நிகழ்ந்தது.

அஙகே மிதிலை நகரில் இராமன் புகும வேளையில் மிதிலை மாநகர கோபுரத்தின் வாசல் கொடி காற்றினால் உட் பக்கமாக வேக வேகமாக அசைகின்றது. ஆனால் உண்மை யில் இராமனை வரவேற்ற கொடி எது?

அந்தச் செயலை கவிச்சக்கர வர்த்தி இப்படி வர்ணிக்கிறார். "அந்நகரமே ஸ்ரீராமனை வருக! வருக! நீவரின் உனக்கு மஙகலம உண்டாகும" என்பதை போன்றி ருந்ததாம.

இதோ அந்த அழகிய பாடல் —

மையறு மலரினீஙகி யான்
செய்மா தவத்தின் வந்து
செய்யவளிருந்தாளென்று
செழுமணிக் கொடிகளென்னும
கைகளை நீட்டி யந்தக்
கடிநகர் கமலச் செஙகண்
ஐயனை ஒல்லை
வாவென்றழைப்பது
போன்றதமமா"

இதே அழகில் இளஙகோவடி கள் கூட சிலப்பதிகாரத்தில் ஒரு செய்யுள் புனைந்துரைத்துள் ளார்.

கோவலன் கண்ணகியுடன் மதுரை மாநகர் எய்திய போது அந்நகர் கீழ்த்திசை கோபுர வாயிற் கொடி வெளிப்பக்கமாக அசைந்த தன்மை —

"நீ இஙகு வராதே! வந்தால் தீஙகுண்டாம, ஆதலால் போ!" என்று விரட்டுவது போலிருந்ததாம. அக்கருத்தை நல்கும பாடல் வரிகள் இது தான்:

போருழந் தெடுத்த வாரெயி
னெடுங கொடி
வாரலென் பனபோன் மறித்துக்
கை காட்ட

இயற்கையாக கொடி அசை கின்றது. அது புலவர்களின் கருத்தேற்றி விளக்க சாதகமாக அமைந்து விடுகின்றது.

## ருக்மணி ராமச்சந்திரன்

இராமனுக்கு நன்மை ஏற்படு வதையும, கோவலனுக்கு தீமை யுண்டாவதையும ஒரு கொடி யசைவின் மேலேற்றி இடத்திற் கேற்ப புனைந்துரைத்த இரு பெரும கவிகளின் கவித்திறமை யும மதிநுட்பமும மிகப் போற் றற்பாலனவாகும.

கொடியசைவில் இரு பெரும புலவர்களின் திறமையைப் போல் ஒரு மலர் விரிவதைக் கொண்டு மேலும இரு திறமைசாலிகளின் சொல் வண்ணத்தை இனி அறி வோம.

முத்தொள்ளாயிரம என்ற நூலில் வரும ஒரு பாடல்:

அள்ளற் பழனத் தரக்காமபல்
வாய் நெகிழ
வெள்ளந் தீப்பட்டதென
வெரீஇப் — புள்ளினந்தம
கைச் சிறகாற் பார்ப்
பொடுக்குங கவ்வை
உடைத்தரோ
நச்சிலை வேற் நாடு

நீர் நிரமபியிருக்கும வயலில் பறவைக் குஞ்சுகள் நீந்தி விளை யாட தாய்ப் பறவைகள் அரு கிலே இருந்து பார்த்து மகிழ்கின் றன. ஒரு பறவை தலையை உயர்த்திப் பார்க்கின்றது. செவ் வாமபல் பூக்கள் அப்போதுதான் மெல்ல விரிகின்றது.

நீர் மட்டத்தில் அது செந் நிறமாய் விரிவதைக் கண்டு நெருப்புச் சுவாலை என எண் ணிய பறவை கூக்குரலிட ஏனைய பறவைகளும தம குஞ்சுகளை சிறகாற் மூடிக் கொண்டு சப்த மிட்டனவாம.

பறவைகள் எண்ணியது புலவ ருக்கு தெரிந்ததா? இல்லை. தன் மனதில் ஏற்பட்ட அந்த அழகு கற்பனையை, பறவைகள் எண்ணியதாக பாடல் மூலம வெளிப்படுத்தியுள்ளார் புலவர்.

செவ்வாமபல் மலரைக் கண்டு பறவைகள் பயந்தது போலவே இஙகும காந்தள் பூக்களைக் கண்டு ஏனைய பிராணிகள் அஞ் சின தன்மையை நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அழகுபட சித்திரித்துள்ளார்.

புதருக்கடியில் மலருகின்ற காந்தள் எனும ஒருவகைப் பூ (கார்த்திகைப்பூ)வை விஷங கொண்ட அரவமதான் என அஞ்சி புலுனியினஙகள் ஏனைய வற்றிற்கு எச்சரிக்கை செய்வது போல சப்திக்க, அணில்கள் அச் செய்தியை தந்தி போல எடுத்துச் சென்று சொல்லுகின்றதாம.

அதாவது அணில்கள் அஙகும இஙகும ஓடி ஓடி கீச்சிடுவதை தந்தி கொடுப்பதாக உருவகிக்கப் படுகின்றது.

அதைக் கேட்டு அஙகு வாசம செய்கின்ற பூவையினஙகள் பயத் தினால் வாய் மூடிக் கொள்ள, இவைகளின் மடமையை எண்ணி முசுண்டை சிரிக்கின்றதாம.

முசுண்டை எனப்படும ஒரு வகைக் கொடியில் மலர் மலர் கின்ற தன்மை சிரிப்பது போன்றி ருக்குமாம.

இயற்கையாக மலர்கள் மலர்வதையும, பிராணிகளின் ஒலிகளையும தன் கற்பனைக்குள் விட்டு அர்த்தமுள்ள, சுவையுள்ள செய்கைகளாக விவரித்துக் காட்டு வது எல்லோருக்கும இயல்பாக வரக் கூடியதல்ல.

இது புலவரின் பாடல்:

புதர்மலர்ந்த காந்தளினை
விடப்பாமபென்றஞ்சிப்
புளினியினமெச்சரிக்க
அணில் தந்தி புகல
வதியுமிளம பூவையினம
கேட்டுவாய் பொத்த
மலர்கின்ற பனி முசுண்டை
மடமைகண்டு சிரிக்கும.

— இப்படியான நகைச்சுவை யும கவிச்சுவையும கொண்ட பாடல்கள் இலக்கிய நெஞ்சஙக ளில் எளிதாய் இடமபிடிக்க தவறுவதுமில்லை.

எளிமையும இனிமையும கவிகளில் இருக்குமிடத்துதான், அவற்றை இயற்றிய புலவர் பெரு மக்களுக்கு அவை புகழையும பெருமையையும சேர்க்கின்றன.

(ம)

# மாற்று உறுப்புகளை உடல் ஏற்றுக்கொள்ளும்

உடல் உறுப்பு மாற்று சிகிச்சை சாத்தியம் என்பது கண்டுபிடிக்கப் பட்டதும் டாக்டர்கள் எதிர் கொண்ட பெரும் பிரச்சினை மனித உடலின் குறிப்பிட்ட தன் மையை எப்படி வெற்றி கொள் வது என்பதுதான்–

ஏனெனில் ஒரு மனித உடல் அந்நிய பொருட்களை ஏற்ப தில்லை– வேறு ஒருவருடைய உறுப்பை சத்திர சிகிச்சை மூலம ஒருவருக்கு பொருத்தினால் அவ ரது உடல் அந்த உறுப்பை ஏ ற் று க் கொ ள் ளா ம ல் நிராகரித்துவிடும– இது இயற் கையின் நியதி–

இதை டாக்டர்கள் இறுதியில் வெற்றி கொண்டனர்– உடலின் இந்த தன்மையை ஏமாற்றி திசை திருப்பி விடுவதுதான் அவர்கள் கையாளும் முறை ஒருவர் வேறு ஒரு இருதயத்தையோ சிறுநீரகத்தையோ பொருத்திக் கொள்வாரானால் அதன் பின்னர் தொடர்ந்து உடலின் நிராகரிக் கும் தன்மையை செயலிழக்கச் செய்யு வகையில் அவர் அதற் கான மருந்தை உட்கொண்டு வர வேண்டும–

சைக்ளோஸ்பொரின் எனப் படும் ஒரு மருந்து இப்போது உலகெஙகும் வெற்றிகரமாக உபயோகிக்கப்பட்டு வருகிறது– ஆனால் ஒருவர் வாழ்க்கை முழு வதும இம் மருந்தை உபயோ கிக்க வேண்டியிருக்கிறது– மேலும பக்க விளைவுகளை இம் மருந்து ஏற்படுத்தக் கூடும்– இது மட்டு மல்ல– சிறுநீரகத்தை இமமருந்து பாதிக்கலாம–


ஆனால் ஜப்பானிய மருந்து நிறுவனம ஒன்று கே எப் 506 என்ற பெயரில் அதிக பலன் தரக் கூடிய மருந்து ஒன்றை கண்டுபிடித்துள்ளது– இதை உப யோகிப்பவர்கள் அதிக பக்க விளைவுகளுக்கு ஆட்படுவ தில்லை–

சிறுநீரகஙகள் பாதிப்புடைவ தில்லை மேலு உறுப்பு மாற்று சத்திர சிகிச்சை செய்து கொண் டவர் தொடர்ந்து இம மருந்தை உபயோகித்து வரத் தேவை யில்லை–

இம மருந்து பரீட்சார்த்தமாக நோயாளர்களிடம பிரயோகிக் கப்பட்டது– இவர்கள் பொருத் திக் கொண்ட ...உறுப்புக்களை அவர்களது உடல் சற்றும் நிராக ரிக்கவில்லை–

உடல் உறுப்பு மாற்று சத்திர சிகிச்சைத் துறையைப் பொறுத்த வரை மிகவும் நுட்பமான மருந்து என டாக்டர்கள் கே எப் 506 மருந்து பற்றிக் கூறுகிறார் கள்.

(ம–032)



# காதலி தேடிக் கொடுத்த மனைவி

## ஆர். இராஜலிங்கம்

— 4 —

அன்றிரவு பிரேமினிக்குத் தூக்கம் பிடிக்கவேயில்லை! பல்வேறு சிந்தனைகளில் அவள் மனம் குழம்பிப் போயிருந்தது!

திலீபனின் பணம் — பங்களா — தொழிற்சாலை — தோட்டம் — கார் என்பனவெல்லாம் ஒவ்வொன்றாக அவள் நினைவில் தோன்றித் தோன்றி மறைந்தன—

அவன் — அவள் மீது வைத்திருக்கும் அன்பு சாதாரண ஒரு பெண்ணுக்குக் கிடைக்கக் கூடியதல்ல! அதனை அவ்வளவு எளிதில் தூக்கியெறிந்து விட வும் அவளால் முடியவில்லை! என்ன செய்வதென்று பல வாறு சிந்தித்துக் கொண்டிருந்தாள்!

திலீபனின் ஜாதகப்படி அவனுக்கு வாய்க்கும் இரண்டாவது மனைவி நீண்ட ஆயுள் உடையவளாக இருப்பாள் என்று சொல்லப்பட்ட விஷயத்தைப் பற்றி அவள் தீவிரமாகச் சிந்தித்தாள்!

தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்த பிரேமினிக்கு தான் சில நாட்களுக்கு முன் சந்தித்த தன் பள்ளித் தோழி தேன்மொழியின் ஞாபகம் வந்தது— அவளைப் பற்றி நினைத்ததும் அவளுக்குத் தன் பள்ளி வாழ்க்கை பற்றியும் நினைவு வந்தது—

சில வருடங்களுக்கு முன் பாடசாலையில் நடைபெற்ற ஒரு சம்பவமும் அவள் மனதில் நிழலாடியது—

★

அப்பொழுது பிரேமினிக்குப் பதினைந்து வயது! ஜீ சி ஈ இறுதி ஆண்டில் கல்வி பயின்று கொண்டிருந்தாள்! அவள் தோழி தேன்மொழிக்கும்

பிரேமினி பெரும்பாலும் குறும்புத்தனத்திலும் — ஆடம்பரத்திலும் — கேளிக்கை நிகழ்ச்சிகளிலுமே தன் பள்ளி வாழ்க்கையைக் கழித்து வந்தாள்—

உயிர்த்த நண்பியான தேன்மொழி — பிரேமினியின் இத்தகைய பழக்கவழக்கங்களை அடியோடு வெறுத்தாள்— அவளை எப்படியாவது திருத்தி நல்வழிக்குக் கொண்டு வர வேண்டுமென்று முயற்சி செய்தாள்—

பல சந்தர்ப்பங்களில் அவளுக்கு புத்திமதியும் கூறியிருக்கிறாள்— ஆனால் பிரேமினி

"பிரேமினி! நீ இப்படியே விளையாடித் திரிந்து விட்டு கடைசியில் பரீட்சையில் கோட்டை விடப் போகிறாய்! ஏண்டி கொஞ்சம் படிப்பில் கவனம் செலுத்தக் கூடாதா?"

— தேன்மொழி இப்படிக் கேட்டதற்கு பிரேமினி —

"என்னடி செய்வது...? நான் எவ்வளவு முயற்சி செய்தாலும் படிப்பு என் மண்டையில் ஏற மாட்டேனென்கிறதே!"

"சே... அப்படிச் சொல்லாதேடி! முயன்றால் முடியாதது எதுவுமில்லை! உனக்கு உதவுவதற்குத்தான் நான் இருக்கி

ஆனால் ஓய்வு நேரங்களில் தேன்மொழி மட்டுந்தான் அங்கு அமர்ந்து படித்தாளே தவிர பிரேமினி ஏதாவது சாக்குப்போக்கு சொல்லி விட்டு நழுவியே வந்தாள்—

பிரேமினியின் இந்த செய்கை தேன்மொழிக்கு மிகுந்த கவலையையும் அதேசமயம் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது—

அந்த வருட ஜீ சி ஈ அரசாங்கப் பரீட்சைக்கான காலமும் நெருங்கிக் கொண்டிருந்தது—

அந்த வருட அரசாங்கப்

லேசாகக் காட்டினால் போதும் ஒரு நொடியில் பிரேமினி அதனைக் காப்பியடித்து விடுவாள்— அந்தக் கலையை மட்டும் அவள் கற்றிருந்தாள்—

இந்த நினைப்புடன் அவள் மெதுவாகத் தேன்மொழியின் முதுகை வருடினாள்— உடனே தேன்மொழி படீரென திரும்பினாள்— அவள் முகம் கடுமையைக் காட்டியது—

"என்னடி? என்ன வேண்டும் உனக்கு? உனக்கு எது வேண்டுமானாலும் மேற்பார்வையாளரின் அனுமதியோடு கேள!" என்று கூறிவிட்டு டக்கென்று திரும்பிக் கொண்டாள்—

பிரேமினிக்கு மிகுந்த அவமானமாகப் போய் விட்டது— தேன்மொழியின் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது— மற்ற நேரமாக இருந்தால் தேன்மொழியின் கன்னத்தை பதம் பார்த்திருக்கும் அவள் கை! என்ன செய்வது? ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு பொறுமையாக இருந்தாள்—

இன்னும் சிறிது நேரம் கடந்தது— அவமானத்தைத் தனக்குள்ளேயே அடக்கிக்கொண்டு தேன்மொழியை மீண்டும் பின் பக்கத்தில் வருடினாள்— ஆத்திரத்துடன் பின்னால் திரும்பிய தேன்மொழியை அவள் பார்வையால் கெஞ்சினாள்—

தேன்மொழி சற்றும் தாய



ராகக் கடமையாற்றிய அவளின் வகுப்பு ஆசிரியை அருகில் வந்தார்— பிரேமினியின் விடைத்தாளைப் பார்த்தார்.

"ஏனடி பரீட்சை தொடங்கி இரண்டு மணித்தியாலத்திற்கு மேலாகிறது— இன்னும் எதுவும் எழுதவில்லை— சும்மா இருக்கிக் கொண்டிருக்கிறாய்— மற்ற பிள்ளைகளுக்கும் இடைஞ்சலாக வேறு இருக்கிறாய்— ஏறடி மேசை மீது— பரீட்சை முடியும் வரை அப்படியே நில்" என்று கூறி அவளை மேசை மீது ஏறி நிற்கச் செய்தார்—

பிரேமினியால் அவமானம் தாங்க முடியவில்லை— மாணவர்களும் மாணவிகளும் நிறைந்திருந்த மண்டபம் அது! தேன்மொழியை வெட்டித் தின்று விடும் அளவுக்கு ஆத்திரம்— எனினும் அடக்கிக் கொண்டு மௌனமாக மேசை மீது நின்று கொண்டிருந்தாள்—

பரீட்சை முடிந்து மாணவர்கள் மண்டபத்தை விட்டு வெளியேறும்போது அவளும் அவர்களுடன் கலந்து சென்றாள்—

மண்டபத்துக்கு வெளியில் தேன்மொழியை சந்தித்தாள்— அவளால் ஆத்திரத்தை அடக்க முடியவில்லை—

பதில் சொன்னாள்—

"பிரேமினி நீ படிக்கும் காலத்தில் எல்லாம் விளையாடித் திரிந்து விட்டு பரீட்சையில் காப்பியடித்து சித்தியடைய நினைக்கிறாய்! அது நடக்கக் கூடிய காரியமா? என்னை டிஸ்டர்ப் பண்ண வேண்டாமென்று ஏற்கனவே சொன்னேன்தானே நீ கேட்கவில்லை— உனக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை—

தொடர் கதை

ஆனால் உனக்குக் கிடைத்தது சரியான தண்டனைதான்!" என்றாள்—

"சரிதான் போடி— உன் புத்திமதி எனக்குத் தேவையில்லை— இன்றோடு உனக்கும் எனக்கும் இருந்த நட்பு முறிந்து விட்டது— ஆனால் உன்னைப் பழிவாங்

# மழைப் பிரசவம்

— ஸாஜித ப்ரீதா —

வானத் தாய்க்குப் பிரசவ வேதனை  
வதனம நோவினைக் காட்டிக் கறுத்தது  
ஆன சூலதன் வேக வுதைப்பினால்  
அமமா வெனவிடி யோதை யரற்றினள்  
தான மேயிது வென்னு முணர்வினால்  
தேசு கொண்டு மின்னும முகத்தினில்  
சூனல் வில்லென வண்ணத் துகிலுமே  
கூடி அழகினைக் காட்டி நெகிழ்ந்து நெகிழ்ந்தது!

★

வண்ணமயிற்குலம தண்மைக் குளவியின்  
வருகை நோக்கித்தோ கைவிரித் தாடின  
பண்ணி சைத்தன மகிழ்ந்துமண் டுகமே  
பாய் விரித்தன திரைநிறை வாரியே  
உண்ணும மருந்தினைத் தேடி யளித்திட  
உடுக்க ளெங்கோ வோடி மறைந்தன  
நண்ணும வியர்வைக்குச் சாமரம வீசிட  
நாடின பருவக் காற்றுக்க ளாமரோ.

★

தரையை நோக்கி விழுந்திடும பிள்ளையைத்  
தாஙகிப் பிடித்திடத் தாவரக் குமபலும  
நரை விழுந்துடல் வெடித்த தரையதும  
நானோ, நீயெனப் பந்தயம கொண்டன  
திரை யுடை கடல் வாவிகள் நீர்நிலை  
திட்டம போட்டன தமது மையென  
உரைக ளேதுமில் லாதுவா னன்னையோ  
உள்ளம மகிழ்ந்தனள் வேதனைக் குள்ளுமே.

தார்!

திலீபனின் ஜாதகப்படி அவனுக்கு வாய்க்கும் இரண்டாவது மனைவி நீண்ட ஆயுள் உடையவளாக இருப்பாள் என்று சொல்லப்பட்ட விஷயத்தைப் பற்றி அவள் தீவிரமாகச் சிந்தித்தாள்!

தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்த பிரேமினிக்கு தான் சில நாட்களுக்கு முன் சந்தித்த தன் பள்ளித் தோழி தேன்மொழியின் ஞாபகம் வந்தது— அவளைப் பற்றி நினைத்ததும் அவளுக்குத் தன் பள்ளி வாழ்க்கை பற்றியும் நினைவு வந்தது—

சில வருடங்களுக்கு முன் பாடசாலையில் நடைபெற்ற ஒரு சம்பவமும் அவள் மனதில் நிழலாடியது—

★

அப்பொழுது பிரேமினிக்குப் பதினைந்து வயது! ஜீ சி ஈ இறுதி ஆண்டில் கல்வி பயின்று கொண்டிருந்தாள்! அவள் தோழி தேன்மொழிக்கும் அவள் வயதுதான்!

பிரேமினியும் — தேன்மொழியும் நெருங்கிய தோழிகள்— ஒருவரை விட்டு ஒருவர் பிரிய மாட்டார்கள்—

தேன்மொழியோ படிப்பில் மிகுந்த கெட்டிக்காரி! பிரேமினி அதற்கு நேர் எதிர்!



நல்வழிக்குக் கொண்டு வர வேண்டுமென்று முயற்சி செய்தாள்—

பல சந்தர்ப்பங்களில் அவளுக்கு புத்திமதியும் கூறியிருக்கிறாள்— ஆனால் பிரேமினி அவளின் புத்திமதிகளை அலட்சியமும் செய்தாள்—

இது தேன்மொழிக்கு மிகுந்த மன வேதனையைக் கொடுத்தது— இருந்தாலும் அவள் முயற்சியை கைவிடவில்லை!

அவளுக்குப் பல வழிகளிலும் புத்திமதி கூறினாள்—

படிப்பு என் மண்டையில் ஏற மாட்டேனென்கிறதே!"

"சே... அப்படிச் சொல்லாதேடி! முயன்றால் முடியாதது எதுவுமில்லை! உனக்கு உதவுவதற்குத்தான் நான் இருக்கிறேனே!"

தேன்மொழி இப்படிக் கூறியதும் பிரேமினி கேள்விக்குறியுடன் அவள் முகத்தைப் பார்த்தாள்—

"என்னடி புரியவில்லையா? நீ விரும்பினால் நான் உனக்குப் பாடம் சொல்லித் தருகிறேன்" என்றாள் தேன்மொழி!

"என்ன நீ பாடம் சொல்லித்தரப் போகிறாயா?" பிரேமினி ஏளனமான குரலில் கேட்டாள்—

"ஏண்டி உனக்குப் பாடம் சொல்லித் தரும் தகுதி எனக்கு இல்லையென்று நினைத்து விட்டாயா?" என்று கேட்டாள் தேன்மொழி!

தேன்மொழியின் உள்ளம் வேதனைக்குள்ளாகி விட்டது— என்று உணர்ந்த பிரேமினி ஆறுதலாக பதில் சொன்னாள்—

"இல்லடி நான் அப்படி நினைக்கவில்லை— உனக்கேன் வீண் சிரமம் என்றுதான்......" பிரேமினி இழுத்தாள்—

"இதில் எனக்கு ஒரு சிரமமுமில்லை! உன் முயற்சியில்தான் இருக்கிறது— தனியான ஒரு இடத்தைத் தயார் செய்து கொண்டு நாளையிலிருந்து ஓய்வு நேரங்களில் படிப்போம்— என்ன சொல்கிறாய்?" பிரேமினி தலையசைத்தாளே தவிர முழு மனதுடன் அதற்கு விருப்பவில்லை—

பாடசாலையில் கல்விப் போதனைக்குப் பயன்படுத்தப்படாமல் இருந்த ஒரு வகுப்பறையில் இருவரும் சேர்ந்து படிப்பதென முடிவு செய்தார்கள்—

ரத்தையும் ஏற்படுத்தியது—

அந்த வருட ஜீ சி ஈ அரசாங்கப் பரீட்சைக்கான காலமும் நெருங்கிக் கொண்டிருந்தது—

அந்த வருடம் அரசாங்கப் பரீட்சைக்காக மாணவர்களைத் தெரிவு செய்யும் பாடசாலைப் பரீட்சையும் வந்தது—

மாணவ மாணவிகள் பரீட்சை மண்டபத்தில் அமர்ந்திருந்தனர்—

வினாத்தாள்களும் கொடுக்கப்பட்டன— வினாத்தாள்களெல்லாம் பிரேமினிக்கு சுத்த சூன்யமாகத்தான் இருந்தன—

வினாத்தாளைக் கையில் வைத்துக் கொண்டு என்ன எழுதுவதென்று ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டிருந்தாள் பிரேமினி!

கொடுக்கப்பட்டிருந்த இரண்டரை மணித்தியாலத்தில் ஒன்றரை மணித்தியாலம் கடந்து விட்டது!

பரீட்சை மேற்பார்வையாளர்கள் அருகில் வரும்போதெல்லாம் விடை எழுதுவது போல் பாசாங்கு செய்து ஏதேதோ கிறுக்கி கிறுக்கி நேரத்தைக் கழித்துக் கொண்டிருந்தாள் பிரேமினி!

நேரமும் கடந்து விட்டது— எதுவுமே எழுதாமல் விடைத்தாளைக் கொடுப்பது எப்படி என்ன எழுதுவதென்றும் புரியவில்லை— இரண்டு மூன்று கேள்விக்காவது விடையெழுதி விட்டால் விடைத்தாளைக் கொடுத்து விட்டுப் போய் விடலாம்!

தனக்கு முன்னால் பரீட்சையெழுதிக் கொண்டிருந்த தன் தோழி தேன்மொழியைக் கவனித்தாள்— அவளோ அடிக்கடி கடிகாரத்தை மட்டும் பார்த்து விட்டு விறுவிறுவென எழுதிக் கொண்டிருந்தாள்—

அவள் தன் விடைத்தாளை

குள்ளேயே அடக்கிக்கொண்டு தேன்மொழியை மீண்டும் பின் பக்கத்தில் வருடினாள்— ஆத்திரத்துடன் பின்னால் திரும்பிய தேன்மொழியை அவள் பார்வையால் கெஞ்சினாள்—

தேன்மொழி சற்றும் தாமதிக்கவில்லை— சடாரென்று எழுந்தாள்—

"டீச்சர்... இவள் என்னை டிஸ்டர்ப் பண்ணுகிறாள்... என்னால் எழுதவும் முடியவில்லை" என்றாள்—

அங்கு மேற்பார்வையாள

மேலாகிறது— இன்னும் எதுவும் எழுதவில்லை— சும்மா கிறுக்கிக் கொண்டிருக்கிறாய்— மற்ற பிள்ளைகளுக்கும் இடைஞ்சலாக வேறு இருக்கிறாய்— ஏறடி மேசை மீது— பரீட்சை முடியும் வரை அப்படியே நில்" என்று கூறி அவளை மேசை மீது ஏறி நிற்கச் செய்தார்—

பிரேமினியால் அவமானம் தாங்க முடியவில்லை— மாணவர்களும் மாணவிகளும் நிறைந்திருந்த மண்டபம் அது! தேன்மொழியை வெட்டித் தின்று விடும் அளவுக்கு ஆத்திரம்— எனினும் அடக்கிக் கொண்டு மௌனமாக மேசை மீது நின்று கொண்டிருந்தாள்—

பரீட்சை முடிந்து மாணவர்கள் மண்டபத்தை விட்டு வெளியேறும்போது அவளும் அவர்களுடன் கலைந்து சென்றாள்—

மண்டபத்துக்கு வெளியில் தேன்மொழியை சந்தித்தாள்— அவளால் ஆத்திரத்தை அடக்க முடியவில்லை—

"ஏண்டி நீ விடைத்தாளைக் காட்டாமலே இருந்திருக்கலாம்— என்னைக் காட்டிக் கொடுத்து விட்டாயே துரோகி! நீயும் ஒரு தோழியா?" என்று கேட்டாள் ஆத்திரத்துடன்!

தேன்மொழி அடக்கமாகப்

கூடிய காரியமா? என்னை டிஸ்டர்ப் பண்ண வேண்டாமென்று ஏற்கனவே சொன்னேன்தானே நீ கேட்கவில்லை— உனக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை—

தொடர் கதை

ஆனால் உனக்குக் கிடைத்தது சரியான தண்டனைதான்!" என்றாள்—

"சரிதான் போடி— உன் புத்திமதி எனக்குத் தேவையில்லை— இன்றோடு உனக்கும் எனக்கும் இருந்த நட்பு முறிந்து விட்டது— ஆனால் உன்னைப் பழிவாங்காமல் மட்டும் விட மாட்டேன்— இது சத்தியம்" என்று படபடவென கூறிய அவள் தனது ஏனைய தோழிகளைப் பார்த்து —

"வாங்கடி போகலாம்" என்றவாறு போய் விட்டாள்!

[தொடரும்]

# வரண்ட பாறைநிலா

— சிகண்டிதாசன் —

எட்ட இருந்திடும் வெண்ணிலவை — நாம
என்ன அழகென வியக்கின்றோம
கிட்ட போயதைப் பார்த்தவர்கள் — அது
காய்ந்து வரண்ட நிலமென்றார்
வட்ட நிலவுக்கு ஒப்பாக — இங்கு
வர்ணிக்கும சில பெண்களுமே
தொட்ட உறவினைத் தள்ளுவதால் — அவர்
தூரத்தில் தோன்றும வெண் நிலவோ!

★

வானில் தோன்றும வெண்நிலவை — நாம
வண்ண நிலவெனப் போற்றுகின்றோம
தோணும அதனைத் தொட்டோர்கள் — அது
துகல்கள் நிறைந்த கல்லென்றார்
நானும வான நிலவான — ஒரு
நங்கை அழகை வர்ணித்தேன்
பேணும காதலை மாற்றியதால் — அந்தப்
பேதையும பாறை எனக்கண்டேன்

★

விண்ணில் தெரியும வெண்நிலவை — நாம
வியந்து அழகென ரசிக்கின்றோம
எண்ணி ஏறிப் பார்த்தோர்கள் — அது
ஏகிடும பாறை நிலமென்றார்
மண்ணில் அந்த நிலாப் போன்ற — ஒரு
மங்கை அழகை வர்ணித்தேன்
நண்ணிய காதலை நசுக்கியபின் — அந்த
நங்கையும பாறை எனக்கண்டேன்.

# 56 மணி நேரம் தண்ணீரில் மிதந்த தலைமை ஆசிரியர்


மதுரை மாவட்டம ஆண்டிப்பட்டி அருகே உள்ள சக்கமபட்டி ஆரமபப் பாடசாலை ஒன்றின் தலைமை ஆசிரியராக இருப்பவர் கருப்புசாமி.

உலக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடமபெறுவதற்காக ஒருவர் 50 மணி நேரம தண்ணீரில் மிதந்த செய்தி, அவரது கண்ணில் பட்டது.

உடனே அவரது சாதனையை முறியடிக்க வேண்டும என்பதற்காக முன் பின் இதற்கான பயிற்சி ஏதும இல்லாமல் நண்பர்கள் உதவியுடன் தண்ணீரில் இறங்கி விட்டார்.

"பகலில் கூட்டத்தைப் பார்த்தபடி இருந்தாலும ஆரமப நேரம என்பதாலும ஒன்றும தெரியவில்லை. இரவு ஆக ஆக உடமபெல்லாம ஜில்லிட்டுப் போய் ரத்த நாளங்கள் சுருங்கிப் போனது.

உடமபு வேறு ஊதத் தொடங்கி விட்டது. என்ன ஆனாலும பரவாயில்லை என்று திடமனதுடன் விடா முயற்சியுடன் தண்ணீரில் மிதந்தேன்.



"மறுநாள் சிலரது ஆலோசனைப்படி உடமபில் கிரீசை பூசிக் கொண்டேன்!

"பழைய சாதனையை முறியடித்து, 56 மணி நேரம மிதந்து புதிய சாதனை படைத்தே திருவேன் என்று திடமனதுடன் தண்ணீரில் 56 மணி நேரம மிதந்து வெற்றிகரமாக தண்ணீரை விட்டு வெளியேறினேன்!" என்கிறார் ஆசிரியர் கருப்புசாமி.

மேலும் கூறுகையில், "சாதனையை நிகழ்த்தும போது வெறும திரவ உணவை மட்டும எடுத்துக் கொண்டேன். உடமபு பல வேதனைகளைத் தந்தாலும அறிவித்தபடி தண்ணீரில் 56 மணி நேரம மிதந்தே தீர்வது என்று உறுதியான மனதுடன் இருந்ததால் இந்த சாதனையைச் செய்ய முடிந்தது" என்றார்.

(ம-10)

# அணு ஆயுத ஒழிப்புக்கு உலகம் இணக்கம்

பாதுகாப்பை உத்தரவாதப் படுத்துவதற்கு தேவையான அளவுக்கு மட்டுமே ஆயுதப் படைகளை வைத்துக் கொள்வது என்னும் கோட்பாடு உலகுக்குப் புதியதல்ல. வெவ்வேறு வரலாற்று நிலைமைகளில், பல்வேறு வடிவங்களில் இந்த நடைமுறை வெளிப்பட்டுள்ளது.

உதாரணமாக, இரண்டாம் உலகப் போருக்கு முன்பாக பெல்ஜியம், டென்மார்க், நெதர்லாந்து முதலிய நாடுகள் இந்தக் கோட்பாட்டைப் பின்பற்றின. அவற்றின் பிரதேசங்கள் சிறியதாகவும், பொருளாதார ஆற்றல்கள் போதியளவு இல்லாததாலும் அவை பெரிய அளவுக்கு இராணுவங்களை வைத்துக் கொள்ளவில்லை.

நடுநிலை நாடுகளான ஸ்வீடனும், சுவிட்சர்லாந்தும் இந்தக் கோட்பாட்டைக் கடைப்பிடித்து வருகின்றன. இராணுவ பலத்தைப் பயன்படுத்தாதிருத்தல், இராணுவக் கூட்டணிகளில் சேராதிருத்தல் என்னும் கொள்கையின் அடிப்படையில் அவை தங்களின் பாதுகாப்பை அமைத்துள்ளன.

உள்நாட்டுப் போர் முடிவுற்ற உடனே, உள்நாட்டில் பொருளாதார நிலவரம் மிகவும் மோசமாக இருந்த நிலையில், சோவியத் யூனியனிலும் இந்தக் கோட்பாடு அமுலாக்கப்பட்டது. அப்போது ஆயுதப் படைகளில் ஒரு பகுதி உழைப்புப் படைகளாக மாற்றப்பட்டன.

எதிரிகளை விடவும் இராணுவ மேலாதிக்கம் பெற வேண்டும் என்ற கோட்பாட்டை அண்மைக் காலம் வரையில் பெரும் வல்லரசுகள் பின்பற்றி வந்தன. இதன் விளைவாக ஆயுதப் போட்டி உருவானது.

பாதுகாப்புக்கு போதுமான அளவுக்கு மட்டுமே படைகளை வைத்திருப்பது என்னும் கோட்பாடு இன்றைய புதிய வரலாற்று நிலைமைகளுக்கு இசைவானதாக இருக்கிறது.

விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாக படைகளின் தொழில் நுட்ப சாதனங்களிலும், ஆயுதங்களின் அழிவுத் திறனிலும் தீவிரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அணு ஆயுதங்கள் பெருமளவு குவிக்கப்பட்டுள்ளன.

ஹிரோஷிமாவிலும் நாகசாகியிலும் அணுகுண்டு வீசப்பட்டதால் ஏற்பட்ட பேரழிவு, ஆயுதப் போட்டியின் அபாயத்தை எடுத்துக் கூறுகின்றது. இன்றைய நிலையில் சிறிய அளவில் அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டால்கூட, மனித நாகரிகமே முழுமையாக அழிந்து விடும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

இந்தப் பின்னணியில், சர்வநாச ஆயுதங்களை, குறிப்பாக அணு ஆயுதங்களை முழுமையாக ஒழிக்க வேண்டியது அவசியமாகும். அதுமட்டுமல்லாமல், ஆயுத மோதல் எதுவும் ஏற்படாமல் தடுப்பதற்கு முயல வேண்டியது அவசியமாகும். ஏனெனில் அத்தகைய மோதல்கள் அணு ஆயுதப் போருக்கு வித்திட்டு விடக் கூடும்.

இதற்கு பரஸ்பரம் ஆயுதப் படைகளையும், ஆயுதங்களையும் குறைப்பதற்கான உடன்பாடு காண வேண்டியது அவசியமாகும். "வார்சா" கூட்டணி நாடுகளுக்கும் "நேட்டோ" கூட்டணி நாடுகளுக்கும் இடையில் வியன்னாவில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளும், சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் ஜெனீவாவில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளும் இத்தகைய உடன்பாடுகளை எட்டவே முயன்று வருகின்றன.

இந்தக் குறிக்கோளை எட்டுவதற்கு இன்னொரு வழியும் இருக்கிறது.

ஒரு தரப்பாக படைக் குறைப்பை மேற்கொள்வதே அந்த வழி. அதே சமயத்தில் ஒரு தரப்பான படைக் குறைப்பை எல்லையின்றி அமுலாக்க முடியாது. பாதுகாப்புக்குத் தேவையான அளவுக்கு படைகளை வைத்துக் கொள்ள வேண்டிய அமசத்துடன் அது சம்பந்தப்பட்டுள்ளது.

வியன்னாவில் நடக்கும் இராணுவக் கோட்பாடுகள் பற்றிய கருத்தரங்கம், இந்தப் பிரச்சினைகளுக்கு பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுகளை உருவாக்க உதவும் என்று எதிர்பார்க்கலாம்.

(ம)

## உங்கள் வீடு...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

குளிக்க வேண்டுமென்று பேரன் கேட்டால் ஆச்சரியப்பட வேண்டியதில்லை—

இப்படி ஆசார அனுஷ்டானத்துடன் இருப்பதில் நஷ்டம் ஒன்றுமில்லை— நம்மைப் பார்த்து மற்றவர்கள் திருந்த வேண்டும்— அப்பாவும் அம்மாவும் கோயிலுக்குப் போனால் குழந்தைகளுந் கூடவே வரும் சினிமாவுக்குப் போனால் அப்போதுந் கூடவே வரும்— பிறகு அப்பா அம்மா போகாவிட்டாலும் நாமே போய் விடுமோமே என்று தோன்றும்.

அப்பாவோ தாத்தாவோ பூஜை செய்தால் பேரனும் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு மந்திரம் சொல்வான்— மணியடிப்பான்— ஊதுவத்தி எடுத்து வைப்பான்— இப்படி புத்தி அவனுக்கும் இதில் செல்லும்—

அப்பா சிட்டாடுகிறார்— தாத்தா பொடி போட்டுக் கொண்டு வெற்றிலையும் புகையிலையும் போட்டுக் கொண்டிருந்தால் பேரனும் அப்படியே செய்ய ஆசைப்படுகிறான்— செய்யவும் செய்கிறான்— பிறகு சிறுவர்கள் நல்வழி நடப்பதெப்படி?

நாம்தான் வழிகாட்ட வேண்டும்— ஆசார அனுஷ்டானத்தோடு இருப்பது கௌரவக் குறைச்சல் என்று எண்ணினால் அந்த வீட்டில் மகாலட்சுமி தங்க மாட்டாள்— அவளுடைய "அக்கா" தான் சந்தோஷமாக வாசம் செய்வாள்— ஜாக்கிரதை என்றார்கள்!!

[ம—10]



## வாழ்வுக்கு நாடுங்கள்

# சீ.ரீ.சீ. ஈகிள்

# அபேக்ஷா

### 4 வருடத்துக்கு ஒரு முறை பண மீட்பு

மாறும் வாழ்க்கைத் தேவைகளுக்கு ஈடுகட்ட நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை சமமான பணத் தொகைகளை அபேக்ஷா உறுதியாக வழங்கும். அத்துடன், காப்புறுதி முதிர்ச்சி பெற்றதும் அதிக தொகையையும் செலுத்தும் - இந்தத் துறையில் அதி சிறந்த சலுகை இதுவே!

### 4 தலைமுறைக்கான பயன்

அதன் 4 வருடத்துக்கு ஒரு முறையான பண மீட்பு வசதி, 4 தலைமுறைகளின் பணத் தேவைகளுக்கு ஈடு கொடுக்கும் வாய்ப்பை உங்களுக்கு வழங்குகிறது. உங்கள், உங்கள் பெற்றோர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் தேவைகளுக்கும் கூடப் பயன் கிடைக்கும்.

### 4 மடங்கு வரிச் சலுகை

4 மடங்கு அதிக வரிச் சலுகைகள் உங்களுக்குக் கிடைக்கும். கட்டுப் பணத்துக்கு மட்டுமன்றி ... மீட்புத்தொகை... முதிர்ச்சித் தொகை ... ஆயுட் காப்பு ... அனைத்துக்கும் வரி நீக்கம் உண்டு.

### 4 விதமான அதிக வாய்ப்புகள் உங்களுக்கு நலம் தரும்

12 முதல் 24 வருடங்கள் வரையான காப்புறுதிகளைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை அபேக்ஷா உங்களுக்கு வழங்குகிறது. மும்மடங்கு ஆயுட் காப்புறுதி வசதி . . . இரண்டு அல்லது மும்மடங்கான விபத்துக் காப்பீட்டு வசதி . . . முற்றிலும் செயலிழந்தால், தவணைக் கட்டண நீக்கம் முதலிய வாய்ப்புகள்.

இவ்வளவும், நீங்கள் முதற் கட்டுப் பணம் செலுத்தியதும், உங்களுக்கு வழங்கப்பட்ட, எவ்வித கழிவுமில்லாத ஆயுட் காப்புறுதியுடன் கிடைக்கும்.

**எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர் கொள்ளுங்கள்.**

TAL

**சீ.ரீ.சீ. ஈகிள்**
**இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்**

ஈகிள் ஹவுஸ்
75, குமாரன் ரத்தினம் வீதி,
கொழும்பு 2
தொலைபேசி : 437090 -6, 421670/79/80/81

பிரதேசக் கிளைகள் : கண்டி, களுத்துறை, குருநாகல், நீர்கொழும்பு, பதுளை

# காலத்திற்கேற்ற மௌலவிகள் உருவாக்கப்படுகின்றனரா?

பெருகி வரும் விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் புதிய சிந்தனைகள் நவீன வாழ்க்கை வசதிகள் அரசாங்கம் விதிக்கும் தேவைகள் இவைகளுக்கு ஈடுகொடுக்கக் கூடிய காலத்திற்கு ஏற்ற மௌலவிமார்கள் நாட்டிலுள்ள அரபுக் கல்லூரிகளில் உருவாக்கப்படுகின்றனரா?

இப்படியொரு வினா முஸாபிரைக் கண்டவர்களில் பலரால் எழுப்பப்பட்டது.

ஜனவரி 7ஆம் திகதி "சிந்தாமணி" இதழில் "முஸாபிர் பார்வை"யில் "குத்பா பிரசங்கங்களில் அரசியல் கலந்து பேசலாமா?" எனும் கருத்தின் கீழ் முஸாபிர் நண்பர்களுடன் நெஞ்சங்களுடன் பரிமாறிக் கொண்ட சிந்தனைகளை அடுத்தே பிரஸ்தாப வினா எழுப்பப்பட்டிருக்கிறது.

"எந்தப் பிரச்சினையும் இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டே காணப்படுகிறது. எந்த அரசியல் பிரச்சினைக்கும் அடிநாதமாக சமுதாயத் தேவையே இருந்து வருகின்றது. ஆகவே எந்தப் பிரச்சினையையும் சமுதாயக் கண் கொண்டு பேசுவதில் தவறில்லை.

"இவ்வாறு பேசுவது சாதாரண விஷயமல்ல, அதற்கு மார்க்க ஞானம் மிக அவசியம். கூடவே நாட்டின் அரசியல் நடவடிக்கைகள் கட்சிகளின் பின்னணி அரசியல் வரலாறு போன்றவற்றில் போதிய விஷய ஞானம் தேவை. சமுதாயத்தை எவ் வழிகளிலும் சிதைய விடாமல் கட்டிக் காக்கக் கூடிய பொறுப்புணர்வு மிக்க வழிநடத்தல் பக்குவம் என்பன உள்ளவர்களே குத்பா உரை நிகழ்த்த வேண்டும்"

மேற்படி கருத்துக்களை முஸாபிர் சமுதாயத்தின் சிந்தனைக்கு விட்டிருந்தார். இதைப் படித்தவர்களே பிரஸ்தாப வினாவை எழுப்பினர். முஸாபிருக்கும் சிந்தனையைக் கிளறலாயிற்று.

இன்று இந்நாட்டில் முஸ்லிம் சமூகம் பல்வேறு பிரச்சினைகளை பல கோணங்களில் எதிர்நோக்குகின்றது. பெருகிவரும் விஞ்ஞான கண்டுபிடிப்புகளும் அவை தொடர்பான புதிய சிந்தனைகளும் அவற்றின் செயலுருவான நவீன வாழ்க்கை வசதிகளும் முஸ்லிம்களைத் திணறவைக்கின்றன.

இந்நிலையில் முஸ்லிம்களுக்கு காலத்திற்கேற்ற இஸ்லாமிய அடிப்படையிலான வழிநடத்தல்கள் தேவைப்படுகின்றன.

இத் தருணம் வாராந்தம் ஒவ்வொரு ஊர்களிலும் இடம் பெறும் குத்பா உரைகள் கலங்கரை விளக்கமாக அமைவதற்கு இடமுண்டு.

இப் பொறுப்பை சரிவர ஆற்றக் கூடிய மௌலவிமார்களை இன்றைய அரபிக் கல்லூரிகள் உருவாக்குகின்றனவா?

இக் கேள்விக்கு விடை தேடும் சமுதாயப் பணியில் முஸாபிர் இறங்கலானார். அம்முயற்சியில் முஸாபிரின் பார்வைக்குக் கிட்டிய அம்சங்களை இவ்வாரம் வாசகர்களுடன் பரிமாறிக் கொள்ள விழைகின்றார்.

இன்று நாட்டில் பெரிய அளவிலும் சிறிய அளவிலுமாக எத்தனையோ அரபிக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இவற்றுள் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டவை சுமார் நூற்றுப்பது அளவில்தான் உள்ளன என அறியக் கிடக்கின்றது.

இவற்றுக்கு மத்தியில் பொதுவான பாடத் திட்டம் ஏதும் அமுல் நடத்தப்படுகின்றதா என்றால் இல்லை என்றுதான் கூற வேண்டும். பதிவு செய்யப்பட்ட அரபிக் கலாசாலைகளுக்கு நடுவிலேனும் ஒரு பொதுவான பாடத் திட்டம் உண்டா, என்றால், அதுவுமில்லை.

சில காலங்களுக்கு முன் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அரபிக் கலாசாலைகளின் ஒன்றிணைப்பு கருதி ஒரு பொதுவான பாடத் திட்டத்தை அறிமுகஞ் செய்தது.

ஓரிரு அரபி மத்ரஸாக்களைத் தவிர பெரும்பாலானவை திணைக்களம் அறிமுகஞ் செய்த பாடத் திட்டத்தை அமுல்நடத்தவில்லை எனத் தெரிகிறது.

இதற்குக் காரணம் என்ன?

பிரஸ்தாப திணைக்களத்தின் வசமில் எந்த அரபி மத்ரஸாவுமில்லை. இதனால் திணைக்களம் அறிமுகம் செய்த புதிய பாடத் திட்டத்தை கட்டாயம் அமுல் நடத்தத்தான் வேண்டும் என்று கட்டுப்படுத்தக் கூடிய நிலையில் திணைக்களமுமில்லை, கட்டுப்படுத்தக் கூடிய கட்டுப்பாட்டில் எந்த அரபி மத்ரஸாவுமில்லை.

அரபிக் கல்லூரிகள் ஏதேனும் வெளிநாட்டில் உதவி பெற வேண்டி வந்தால் அரசு அங்கீகாரம் தேவை என்ற நிலையில் ஓர் உறுதிப்பாட்டுக் கடிதத்திற்காக மட்டுமே திணைக்களத்தை நாடுகின்றன, மற்றப்படி எதுவுமில்லை.

இதேவேளை அரபிக் கலாசாலைகளில் அமுல் செய்யப்படும் பாடத் திட்டம் பற்றி சிந்திப்போம்.

இடத்திற்கிடம் பாடத் திட்டம் மாறுபட்டே காணப்படுகின்றது. சில மத்ரஸாக்களில் பழங் காலத்திய பாடத் திட்டமே இன்னும் நடைமுறையில் பின்பற்றப்படுகின்றது. சில மத்ரஸாக்களில் காலத்திற்கேற்ற மாற்றங்கள் பாடத் திட்டத்தில் புகுத்தப்பட்டுள்ளதையும் முஸாபிர் அறிய

ஆனால் இன்றைய நடைமுறை என்ன? மௌலவிகளாக ஸனது பெற்று வெளியேறுபவர்கள் அரசின் "மௌலவி ஆசிரியர்" தெரிவுக்கு விண்ணப்பிக்க வேண்டுமானால் மௌலவிக்கான சான்றிதழுடன் ஜீ.சி.ஈ. உயர்தரம் சித்தியடைந்திருக்க வேண்டும். இன்றேல் அன்னவர்களால் மௌலவி ஆசிரியர் நியமனம் பெறுவது துர்லபம்.

இது எதைக் காட்டுகிறது? என சிந்திக்கும்படி முஸாபிர் சமுதாயத்தின் பெயரால் "கட்டுப்பாளர்"களை வேண்டிக் கொள்கிறார். விரல்விட்டு எண்ணத்தக்க ஓரிருவர் களவில் "நாவல்" படிக்கின்றனர்; விரும்பத்தகாத புத்தகங்களை வாசிக்கின்றனர் என்பதற்காக எல்லா மூட்டைகளையும் நசுக்குவது அறிவுடைமையாகுமா? எதிர்கால மௌலவி ஆசிரியர் உலகத்தை "கருச்சிதைவு" செய்யும் செயலாகாதா என்ன?

ஒரு சிலர் விடுதியின் மதிலேறி குதிக்கின்றனர் என்றால் கண்காணிப்பு தொடர்பான நிர்வாகம்தான் பலவீனமே தவிர ஏனைய மாணவர்களல்ல. அன்றாடம் தமிழ்த் தினசரிகளையேனும் மௌலவி மாணவர்கள் படிப்பதன் மூலம் நாட்டு நடப்புகளை உள்ளூர் வெளிநாட்டு அரசியல் நிலவரங்களை ஏனைய சமாச்சாரங்களை அறிந்து கொள்ள வாய்ப்பேற்படுமே!

அதேவேளை பாடசாலை கல்விப் போதனையையும் எல்லா அரபிக் கலாசாலைகளும் ஆரம்பிக்க வேண்டும். இது சாத்தியமில்லை என்று பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது; கூடாது எனெனில் ஒரு சில அரபிக் கல்லூரிகள் நடத்திக் காட்டி வெற்றியும் பெற்று வருகின்றன.

கட்டாயம் ஆங்கிலம் சிங்க

வதில்லை, பள்ளிவாசல் நிர்வாகங்கள் எல்லா மௌலவிகளுக்கும் கதவைத் திறந்து விடவும் முடியாது. இந்நிலையில் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு தொழிலை படித்தே வெளியேறினால் யார் கைகொடுக்காவிடினும் சுய காலில் நிற்க வழியேற்படுமே.

"இப்போதுள்ள அரபி மத்ரஸாக்களின் பாட நெறிகள் காலத்திற்கேற்ற சமுதாய கவலைமிக்க மௌலவிகளை உருவாக்கக் கூடிய அமைப்பில் இருக்கின்றனவா?"

இப்படியொரு கேள்வியை கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த மௌலவி எம். இஸட். எம். பௌசுல் அமீன் என்பாரிடம் முஸாபிர் கேட்டபோது...

பாடத் திட்டங்கள் எப்படி இருந்தாலும் மௌலவிமார்களிடம் "தக்வா" (பயபக்தி) இருக்க வேண்டியது அவசியத்திலும் அவசியம். தக்வா இல்லாதவர்களை எந்தப் பாடத் திட்டமும் எதுவும் செய்து விட முடியாது. அகவே அரபி மத்ரஸாக்கள் பாட போதனைகளுடன் பயபக்தியை அவசியம் ஊட்ட வேண்டும்" எனக் கூறியதிலும் பொருள் பொதிந்திருப்பதாகவே முஸாபிர் கருதுகின்றார்.

பலதரப்பட்ட போக்குகளுடைய மத்ரஸாக்களில் இருந்து வெளியாகும் மௌலவிமார்களை ஒரு மூன்று மாத காலத்திற்கேனும் ஒரு பொது பயிற்சி நெறிக்கு உள்ளாக்க வேண்டும். அந்தப் பயிற்சிப் பாசறையில் சமயம் சமூகம் நாடு என்ற கோணங்களில் பொதுவான புரிந்துணர்வை ஊட்டி நற்சான்றிதழ் வழங்கியே வெளியே அனுப்ப வேண்டும். பயிற்சி நிலையத்தை தரமான உலமாக்களைக் கொண்டு திணைக்களமோ பொது நிறுவனமோ நடத்த வேண்டும்.

இப்படியொரு கருத்தை ஒரு பட்டதாரி மௌலவி முஸாபிரிடம் கூறினார்.

"நாட்டிலுள்ள அரபு மத்ரஸாக்களை எல்லாம் சர்வகலாசாலை மட்டத்தில் ஒரு பீடத்தின் கீழ் கொணர்ந்து அங்கீகாரம் வழங்க வேண்டும். பிரஸ்தாப பயிற்சி பாசறையை அந்த பீடமே முன்னின்று செய்யலாம்" என ஒரு பத்திரிகையாளர் முஸாபிரிடம் கருத்து தெரிவித்தார்.

சமூகம் சிந்தித்து செயல்படுமா?

## முஸாபிர் பார்வையில்


## மாவனல்லையில்...

கண் அழகு மிக்கு கண்கவர் தங்க நகைகளுக்கு நாணயம், நம்பிக்கை, உத்தரவாதம் கொண்ட ஒரே ஸ்தாபனம்

## ஸ்டார் ஜுவல்லர்ஸ்

324/22ஏ, பிரதான வீதி

மாவனல்லை

தொலைபேசி- 6049

[எமது நிறுவனத்திற்கு மாவனல்லையில் வேறு கிளைகள் இல்லை என்பதை வாடிக்கையாளர்கள் கவனிக்கவும்]



## சவூதி-டுபாய்—அபுதாபி—

## குவைட்—ஓமான்—


## ஜனாஸா அறிவித்தல்

காத்தான்குடி-2 ஐச் சேர்ந்த ஹாஜியானி எ. எல். சுபைதா உம்மா அவர்கள் காலமானார்.

இவர் மர்ஹூம்களான ஈசா லெப்பை ஹாஜியார் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் மர்ஹூம் முகம்மதுதம்பியின் அன்பு மனைவியும், மர்ஹூம் அப்துர் ரஹ்மான், ஹாஜியானி பாத்தும்மா ஆகியோரின் சகோதரியும் மர்ஹூம் இஸ்ஹாக் லெப்பை, முஹம்மது ஹுசைன், உம்முஸல்மா, அப்துஸ்ஸலாம் ஹாஜியார் (உரிமையாளர் எம்.ரி. அப்துஸ்ஸலாம் ஹாஜியார் ஸ்தாபனம் 136 டாம் வீதி கொழும்பு-12), ஹவ்வாஉம்மா, இஸ்ஸதீன், சஹாப்தீன் ஹாஜி


## டுபாய், ஓமான், பக்ரெயின் குவைட் நாடுகளில் வேலை வாய்ப்பு

முஸ்லிம் வீட்டுப் பணிப்பெண்களுக்கு எவ்வித கட்டணமும் இன்றி

வயது- 22 வயது முதல்
சம்பளம்- 4250 ரூபா முதல்
சேவைக் காலத்திற்குள் பூரண பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கப்படும்.

## யசோதா எண்டர்பிரைசஸ்

ஆட்பலப் பிரிவு,
455, கூட்டுறவு கட்டிடம், 4 ஆம் மாடி,
காலி வீதி, கொழும்பு—03.
தொலைபேசி- 502868

தொழில் அனுமதிப்பத்திர இல- 647
அங்கீகார இல- ஏ எல்/647/11/89



## "பரபரப்புடன் விற்பனையாகின்றன!"

## நூலக அதிபர்களுக்கும்

கண் அழகு மிக்க கண்கவர் தங்க நகைகளுக்கு
நாணயம், நம்பிக்கை, உத்தரவாதம் கொண்ட ஒரே
ஸ்தாபனம்

## ஸ்டார் ஜுவல்லர்ஸ்

324/22ஏ, பிரதான வீதி
மாவனல்லை
தொலைபேசி- 6049

[எமது நிறுவனத்திற்கு மாவனல்லையில் வேறு கிளைகள் இல்லை என்பதை வாடிக்கையாளர்கள் கவனிக்கவும்]



## சவூதி-டுபாய்-அபுதாபி-குவைட்-ஓமான்-சிங்கப்பூர்

வெகு விரைவில் பயணம்

## AMEEN ENTERPRISES

### குவைட்

- ★ வீட்டுப் பணிப்பெண்கள் — 30 கே டி
- ★ வீட்டுச் சாரதிகள் — 35 கே டி
- ★ வீட்டுப் பையன்கள் — 30 கே டி
- ★ சாரதிகள் (கல்ப் லைசனுள்ளவர்) — 45 கே டி
- ★ டெய்லர்ஸ் (ஆண்/பெண்) — 50 கே டி
- ★ வீட்டுச் சமையற்காரர் — 35 கே டி

### யூ. ஏ. ஈ.

- ★ வீட்டுப் பணிப்பெண்கள் — 400 திராமஸ்
- ★ பெண் சாரதிகள் — 800 திராமஸ்
- ★ விற்பனைப் பெண்கள் — 800 திராமஸ்
- ★ பெண் காரியதரிசி — 1000 திராமஸ்
- ★ வீட்டுச் சமையற்காரர் — 500 திராமஸ்

[ஆங்கில அறிவுள்ள வீட்டுப் பணிப்பெண்களுக்கு முன்னுரிமையும், அதிக சம்பளமும் வழங்கப்படும்]

## அமீன் எண்டபிறைசஸ்

511, பிரின்ஸ் ஒப் வேல்ஸ் அவெனியு
கொழும்பு — 14

அனுமதி இல- 625/14/15/17/18/23
(வெளியிடங்களிலிருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்)


நால் இல்லை என்றுதான் கூற வேண்டும்- பதிவு செய்யப்பட்ட அரபிக் கலாசாலைகளுக்கு நடு

## ஜனாஸா அறிவித்தல்

காத்தான்குடி-2 ஐச் சேர்ந்த ஹாஜியானி ஈ எல் சுபைதா உம்மா அவர்கள் காலமானார்.

இவர் மர்ஹூம்களான ஈசா லெப்பை ஹாஜியார் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் மர்ஹூம் முகமதுதம்பியின் அன்பு மனைவியும், மர்ஹூம் அப்துர் ரஹ்மான், ஹாஜியானி பாத்தும்மா ஆகியோரின் சகோதரியும் மர்ஹூம் இஸ்ஹாக் லெப்பை, முஹம்மது ஹுசைன், உம்முனைல்மா, அப்துஸ்ஸலாம் ஹாஜியார் (உரிமையாளர் எம ரி அப்துஸ்ஸலாம் ஹாஜியார் ஸ்தாபனம் 136 டாம வீதி கொழும்பு-12), ஹவ்வாஉம்மா, இஸ்ஸதீன், சஹாப்தீன் ஹாஜியார் (பங்காளர் எம ரி அப்துஸ்ஸலாம ஹாஜியார் ஸ்தாபனம 136 டாம வீதி கொழும்பு), ஹாஜறா பீவி, மர்ஹூம ஹாஜா முஹைதீன் ஆகியோரின் அன்புத் தாயாரும்,

அல்ஹாஜ் எஸ் எம ஆதம லெப்பை, ஏ சேகு இஸ்மாயில், மௌலவி எம எஸ் ஏ அப்துல் காதர் ("மஸ்ஜிதுல் காதிர்" கொம்பனி தெரு கொழும்பு-2) ஹாஜியானி ஜெலீமா பீவி, நஜீனா உம்மா ஆகியோரின் அன்பு மாமியும,

அல்ஹாஜ் முஹம்மது பாறூக் (பங்காளர் எம ரி அப்துஸ்ஸலாம ஹாஜியார் ஸ்தாபனம 136 டாம வீதி கொழும்பு), அப்துல் பரீத் ("ஜாமியா பிநூரியா" மாணவன் பாகிஸ்தான்), அஹமது பளீல், நூறுல்லா (சாகிரா மாணவன் கொழும்பு), யாஸீர் அரபாத், முஹம்மது பாயிஸ், தர்வேஸ், ஜஃபர் ஸாதிக், மர்யம ஜெமீலா, நூறுல் தையிபா, சித்தி பஜ்ரியா, சித்தி ஜுவைரியா, லத்தீபா ஆகியோரின் உம்மும்மாவும முஹம்மது ஆஸீர், முகம்மது ஆரிப், சுமையா ஆகியோரின் வாப்பம்மாவும, பாத்திமா ஸப்ரியா, முகமமது அப்துல்லா, பாத்திமா அபிய்யா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் 20-12-89 இல் காத்தான்குடி மொஹிதீன் மெத்தைப்பள்ளி வாயல் மையவாடியில் நடைபெற்றது.

நல்லடக்கத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் நேரிலும தபால் மூலமும அனுதாபம தெரிவித்தவர்களுக்கும எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம.

"ஹாஜரா மன்ஸில்",
69, ஹபுறடி வீதி,
காத்தான்குடி-2

வி இ 029790

பாடத் திட்டத்தை கட்டாயம அமுல் நடத்தத்தான் வேண்டும என்று கட்டுப்படுத்தக் கூடிய நிலையில் திணைக்களமுமில்லை, கட்டுப்பட்டு கூடிய கட்டுப்பாட்டில் எந்த அரபி மத்ரஸாவுமில்லை.

அரபிக் கல்லூரிகள் ஏதேனும வெளிநாட்டில் உதவி பெற வேண்டி வந்தால் அரசு அங்கீகாரம் தேவை என்ற நிலையில் ஓர் உறுதிப்பாட்டுக் கடிதத்திற்காக மட்டுமே திணைக்களத்தை நாடுகின்றன, மற்றப்படி எதுவுமில்லை.

இதேவேளை அரபிக் கலாசாலைகளில் அமுல் செய்யப்படும் பாடத் திட்டம் பற்றி சிந்திப்போம.

இத்திட்டப் பாடத் திட்டம மாறுபட்டே காணப்படுகின்றது- சில மத்ரஸாக்களில் பழங்காலத்திய பாடத் திட்டமே இன்னும் நடைமுறையில் பின்பற்றப்படுகின்றது- சில மத்ரஸாக்களில் காலத்திற்கேற்ற மாற்றங்கள் பாடத் திட்டத்தில் புகுத்தப்பட்டுள்ளதையும முஸாபிர் அறிய வந்துள்ளார்-

சில மத்ரஸாக்களில் மௌலவி பாட நெறியுடன் பாடசாலைக் கல்வியும் போதிக்கப்படுகின்றது குறிப்பாக ஜீ சி ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும மாணவர்களுக்கு மொழியுடன் கணிதம் சமூகக் கல்வி போன்ற பாடங்கள் போதிக்கப்படுகின்றன.

ஜீ சி ஈ சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு தொடர்ந்து உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றக் கூடிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படுகின்றன, நூல் நிலைய வசதியுடன் வெளியிற் சென்று படிக்கவும் கல்விக் கருத்தரங்குகளுக்கு செல்லவும் அனுமதி போன்ற வசதிகளும செய்து கொடுக்கப்படுகின்றன-

இதன் வழியில் மௌலவியாக அல்ஆலிமாக வெளியேறும மாணவர்கள் ஜீ சி ஈ உயர்தரம் பயின்றவர்களாக பல்கலைக்கழகம் புகுந்த பட்டதாரி மாணவர்களாக ஏன் பட்டதாரிகளாகக் கூட திகழ்கின்றார்கள்- தீன் மணம கமழ்கிறார்கள்.

இதேசமயம் சில அரபி மத்ரஸாக்களில் தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும ஆங்கில இதழ்களைத் தொட்டுக் கூட பார்க்க அனுமதிப்பதில்லை மார்க்க அடிப்படையில் அரபு மொழி மூலம் "தீன்தாரி"களாக உருவாகும மாணவர்களின் கவனம் திசைமாறிவிடும் என்பதையே கட்டுப்பாட்டுக்கான காரணமாகக் காட்டுகின்றனர்-

"என்னதான் மார்க்கக் கல்வி கற்ற மௌலவிகளாக இருந்தாலும் அவர்கள் வெளியுலகு தெரியாமல் "கிணற்றுத் தவளை"களாகவே இருக்கின்றனர்" என சில மௌலவிமார்கள் குறித்த பொது மக்களிடையே நிலவும கருத்தினை மேற்படி கட்டுப்பாடு ஊர்ஜிதம் செய்கிறதே!

என்பதற்காக எல்லா மூட்டைகளையும் நசுக்குவது அறிவுடைமையாகுமா? எதிர்கால மௌலவி ஆசிரியர் உலகத்தை "கருச்சிதைவு" செய்யும செயலாகாதா என்ன?

ஒரு சிலர் விடுதியின் மதிலேறி குதிக்கின்றனர் என்றால் கண்காணிப்பு தொடர்பான நிர்வாகமதான் பலவீனமே தவிர ஏனைய மாணவர்களல்லர்- அன்றாடம் தமிழ்த் தினசரிகளையேனும் மௌலவி மாணவர்கள் படிப்பதன் மூலம் நாட்டுநடப்புகளை உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் நிலவரங்களை ஏனைய சமாச்சாரங்களை அறிந்து கொள்ள வாய்ப்பேற்படுமே!

அதேவேளை பாடசாலை கல்விப் போதனையையும் எல்லா அரபிக் கலாசாலைகளும ஆரம்பிக்க வேண்டும்- இது சாத்தியமில்லை என்று பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது; கூடாது ஏனெனில் ஒரு சில அரபிக் கல்லூரிகள் நடத்திக் காட்டி வெற்றியும் பெற்று வருகின்றன-

கட்டாயம் ஆங்கிலம சிங்களம மௌலவி மாணவர்களுக்கு கற்பிக்கப்பட வேண்டும்- இது உள்நாட்டில் பிற இனத்தாருடன் நெருங்கிப் பழகி சௌஜன்ய உறவை ஏற்படுத்த உதவும்- வெளியுலகத்தைப் புரிந்து கொள்ளவும் ஏதுவாகும இது குறித்து நாட்டிலுள்ள எல்லா அரபிக் கல்லூரி நிர்வாகங்களும சிந்திக்க வேண்டியது காலத்திற்கேற்ற மௌலவிகளை உருவாக்க வழிவகுக்கும.

இது குறித்து மௌலவி எம எச் எம ரயீசுத்தீன் என்பாருடன் முஸாபிர் கருத்துப் பரிமாற்றம செய்ய நேர்ந்தபோது சமுதாய முக்கியஸ்தர் கல்லூரி நிர்வாகங்களும சிந்தித்தாக வேண்டியதொரு மணியான கருத்தை கூறினார்- அது என்ன?

"பௌத்த மத குருமார்களுக்கு மணஞ் செய்து இல்லறம நடத்தும் வாய்ப்பில்லை- இவ்வாறே கிறிஸ்தவ பாதிரிமார்களுக்கும வாய்ப்பில்லை, ஆனால் இஸ்லாத்தில் அப்படியில்லை- மௌலவிகளோ அனாலும் மணஞ் செய்து இல்லறத்தில் ஈடுபட்டு குடும்பம் நடத்தி கஷ்ட நஷ்டங்களில் உழன்று கரைசேர வாய்ப்பிருக்கிறது-

இதனால் மௌலவிமார்களுக்கும கவலை கஷ்டம கண்ணீர் அதிலொரு கதையுண்டு- இதனால் அவர்கள் மௌலவி ஆசிரியர் நியமனம் கிடைக்காவிடில் ஏதேனும் ஒரு பள்ளிவாயலை அல்லது ஒரு குர்ஆன் மத்ரஸாவை நாடியாக வேண்டியது அவர்களின் வாழ்க்கைப் பிரச்சினையாகி விடுகிறது- எனவே மௌலவி மாணவர்களுக்கு தொழிற் கல்வியையும் படிப்பிப்பது சகல வழிகளிலும் நன்மையாகவே முடியும்" என்றார்-

வருடாந்தம் வெளியேறும மௌலவிகள் எல்லோருக்குமே ஆசிரியர் நியமனம் கிடைத்துவிடு


## நாடுகளில் வேலை வாய்ப்பு

முஸ்லிம் வீட்டுப் பணிப்பெண்களுக்கு
எவ்வித கட்டணமும் இன்றி

வயது- 22 வயது முதல்
சம்பளம்- 4250 ரூபா முதல்
சேவைக் காலத்திற்குள் பூரண பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கப்படும்.

## யசோதா எண்டர்பிரைசஸ்

ஆட்பலப் பிரிவு,
455, கூட்டுறவு கட்டிடம், 4 ஆம் மாடி,
காலி வீதி, கொழும்பு—03.
தொலைபேசி- 502868

தொழில் அனுமதிப்பத்திர இல- 647
அங்கீகார இல- ஏ எல்/647/11/89



## "பரபரப்புடன் விற்பனையாகின்றன!"

## நூலக அதிபர்களுக்கும் புத்தக விற்பனையாளர்களுக்கும்

- எம்மிடம நூலகத்திற்குத் தேவையான அனைத்துத்துறை புத்தகங்களும வெளிவந்து விட்டன. பிரபல எழுத்தாளர்களின் படைப்புக்களான சரித்திர நாவல்கள், நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், வைத்திய நூல்கள், வரலாற்று நூல்கள், சட்ட நூல்கள், சமய நூல்கள், நியூமராலஜி, விளையாட்டு, தொழில்நுட்பம், தையற்கலை, சமையற்கலை, பொது அறிவு, சிறுவர் புத்தகங்கள், அகராதிகள்...... இன்னும் எத்தனையோ துறைகள்! பிரபல பதிப்பகங்களின் புதிய வெளியீடுகள்! நூலகப் பொறுப்பாளர்களே எம்முடன் உடன் தொடர்பு கொள்ளுங்கள். நூலகங்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
- "எம்மிடம் புத்தகங்கள் கொள்வனவு செய்யும வியாபாரிகளுக்கு விசேட கழிவுகள் உண்டு."
- மேலும் நீண்ட காலமாக நீங்கள் எதிர்பார்த்திருந்த

**"ராணி முத்து" "ராணி காமிக்ஸ்"**

சஞ்சிகைகளும வெளிவந்து விட்டன.

- ஏஜென்ட் இல்லாத ஊர்களுக்கு முற்பணம் கட்டக் கூடியவர்கள் தேவை. உங்களுக்குத் தேவையான புத்தகங்களை ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள உடனே நாடுங்கள்!

## BOOK CENTRE

த பெ 96 371 டாம வீதி கொழும்பு—12
தொலைபேசி 43459, 541099

Prop: ACDIL

யாழ் விநியோகஸ்தர்-

## ALL CEYLON DISTRIBUTORS

No. 119 1/1 KKS Road, Jaffna.

# கலண்டர் சீசனில் வந்தது தலையிடி

இது கலண்டர் சீசன், யாரைப் பார்த்தாலும் கலண்டர் கிடைக்குமா டயறி கிடைக்குமா என ஆலாய்ப் பறந்து கொண்டிருக்கிறார்கள், விசேஷமான பேர்வழிகள் மார்பழகு தொடையழகு பின்னழகு காட்டும பெண்கள் படம கொண்ட ஜப்பானிய கலண்டர்கள் கிடைக்குமா என இந்த சீசனில் நோட்டம விட்டுக் கொண்டிருப்பார்கள்,


சீனாவிலும மக்களின் விசேஷ சுவைகளைப் புரிந்த கொண்ட ஒரு நபர் நிர்வாணப் பெண்களின் புகைப்படங்கள் அடங்கிய கலண்டர்களைத் தயாரித்து ரகசியமாக வெளியிட்டார்.

சீட்டுக் கட்டுகளின் பின்புறத்திலும கவர்ச்சிப் பாவைகளின் படங்களை அச்சிட்டு விற்பனைக்கு விட்டார். இவரை முகர்ந்த கண்டு பிடித்த சீனப் பொலீஸார் இவர்மீத வழக்குத் தாக்தல் செய்து நீதிமன்றத்தில் நிறுத்தினர்,

இவருக்கு வழங்கப்பட்ட தண்டனை என்ன தெரியுமா? மரண தண்டனை! ஆபாச சஞ்சிகை தொடர்பாக இந் நீதிமன்றம் மேலும எழுவருக்கு பத்தாண்டு சிறைத் தண்டனையை விதித்தது, ஜனநாயகத்தின் சிறப்பு இப்படிப்பட்ட நேரங்களில்தான் புரிகிறத,

(த-032)

## பிறந்த நாள் வாழ்த்து



முஹமமட் நபாஸ்

கொழும்பு-12, மீரானியா வீதி 189/8 ஆம் இலக்க இல்லத்தைச் சேர்ந்த நவ்ஸார் – நவீரா தமபதிகளின் செல்வப் புதல்வன் முஹம்மட் நபாஸ் தனது முதலாவது பிறந்த தினத்தை எதிர்வரும 1-2-90 அன்று வெகு விமரிசையாக தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

முஹம்மட் நபாஸை எல்லாம வல்ல அல்லாஹ்வின் கிருபையால் சகல சௌபாக்கியங்களும பெற்று சீருடனும் சிறப்புடனும வாழ அதே இடத்தைச் சேர்ந்த அப்பா, உம்மம்மா, நஸார் மாமா, நலீமா சாச்சி, பசீரா சாச்சி, சிதாரா சாச்சி, மாளிகாவத்தையைச் சேர்ந்த வாப்பாவின் குடுமபத்தார் மிசிரியா மாமி, மொய்தீன் உசைன் பெரியப்பா, ஜீனு பெரியம்மா, நிலாம் மாமா, அமசியா மாமி, ரினேசார் சாச்சா, அஸ்வர் மச்சான், உசைன்தீன் மச்சான், மதினிமார்களான நிப்ரா, நிஸ்ரா, நிபாஸா ஆகியோர் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

வி இ 029731

## பிறந்த நாள் வாழ்த்து



முஹமமத் றில்வான்

தர்காநகர், ஸாவியா வீதி, "கிரஸண்ட்" இல்லத்தைச் சேர்ந்த பாஹிந் இஸ்மாயில் – பாத்திமா ரூமிஸா தம்பதிகளின் செல்வப் புதல்வன் முஹம்மத் றில்வான் தனது நான்காவது பிறந்த தினத்தை (23-1-1990) செவ்வாய்க்கிழமை விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை றியாத்தில் இருக்கும் வாப்பா, உம்மா, உமமமமா, வாப்பும்மா, இஸ்மாயில் அப்பா, ஹாஜி உம்மா, றிஸ்லத் தாத்தா, அப்ரத், அஸ்லப், மஸ்லா, மித்லாஜ், அப்ரார், பஸ்ஹான், சியாம், சில்மான், சஹாமா, றியாஜ், நஸூல்பா, உஸ்ரி மற்றும உற்றார், உறவினர்கள் அல்லாஹ்வின் அருளால் பல்கலையும கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தியுள்ளார்கள்.

வி இ 031055

## பிறந்த நாள் வாழ்த்து



ஹாபீல்

மதவாச்சைச் சேர்ந்த ஜலால்தீன் – ஜொஹரா தம்பதிகளின் அன்புச் செல்வன் ஹாபீல் 24-01-90 இல் தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.

இவரை வாப்பா, உம்மா, அன்பு காக்கா ஆதில் மற்றும வாப்பா குடும்பத்தினர், உம்மா குடுமபத்தினர், அஸ்மிலாவைச் சேர்ந்த மாமாமார், ஆராதனைச் சேர்ந்த மாமாமார், வெள்தும்மைச் சேர்ந்த மாமாமார் ஆகியோர் சீர்கல்வி கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தியுள்ளார்கள்.

வி இ 031204

## பிறந்த நாள் வாழ்த்து

## பிறந்த நாள் வாழ்த்து



# இந்திய லோகசபையில் கவர்ச்சி மிகு பெண் எம். பி.

## ராஜீவ்காந்திக்கு இவர் நெருக்கமானவர்



உமா கஜபதி

புதிய இந்திய நாடாளுமன்றத்தின் மிகவும் கவர்ச்சிகரமான பெண் என்று ஆந்திர பிரதேச மாநிலம் விசாகப்பட்டினம் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் காங்கிரஸ் எம் பி உமா கஜபதி ராஜுவை அனைவரும் குறிப்பிடுகின்றனர்.

உமா சென்னை ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் படித்தவர். தெலுங்கு தேசம் கட்சியிலிருந்த தனது கணவர் அசோக் கஜபதி ராஜுவை காங்கிரஸுக்கு மீண்டும் கொண்டு வந்தவர்!

உங்களை கவர்ச்சியான பெண் எம பி என்று கூறுகிறார்களே எனக் கேட்டதற்கு கோபத்தோடு அதை மறுத்தார்.

"இது கேலிக்குரிய விமர்சனம். தேர்தலின் போது எனது கவர்ச்சியால் எதுவும் நான் வென்று விடவில்லை! இது ஆண் வர்க்கத்தின் தவறான கண்ணோட்டம்! ஆண்கள் ஏதாவது சாதனை செய்தால் அவர்களது திறமையால்சாதித்தார்கள் என்று கூறுவார்கள். அதையே ஒரு பெண் சாதித்தால் திறமையை அல்லாமல் வேறு எதையோ காரணம் கூறுகிறார்கள்.

நான் ராஜீவ் காந்திக்கு மிகவும் நெருக்கமானவர் என்பது சரியல்ல! ஆனால் அவர் எனது அரசியல் குரு! அவர்தான் அரசியல் வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு என்னை ஊக்கப்படுத்தினார்!

நான் ராஜீவ் காந்தியின் தீவிரமான ஆதரவாளர்! அவரைக் குறை கூறும் தகுதி இன்னும் அரசியலில் யாருக்கும் கிடையாது. அவர் நம்மை 21 ஆம் நூற்றாண்டுக்கு கொண்டு சென்றார். இன்று நாம் ஒரு வல்லரசு நாடாகத் திகழ்கிறோம் என்றால் அதற்கு அவர்தான் காரணம்! ராஜீவ் காந்தி அற்புதமானவர்! வட இந்திய மக்கள் அவரை புறக்கணித்திருப்பதை எண்ணி வெட்கப்பட வேண்டும். அவர்கள் அதற்காக விரைவில் வருத்தப்படுவார்கள்" என்றார்.

ராஜீவ் காந்திக்கு கெட்ட பெயரை சம்பாதித்துக் கொடுத்ததில் உங்களுக்கும் பங்கு உண்டு என்று கூறப்படுகிறதே என்று கேட்ட போது —

அதை உடனடியாக அவர் மறுத்தார். டில்லியில் எனது தொகுதிகளுக்கான வேலைகளை மட்டுதான் நான் செய்து வருகிறேன் என்றார்! (ம—10).

# வெளிநாட்டவர்களுக்கு ஜப்பானில் வேலை வாய்ப்பு

ஜப்பானிய அரசாங்கம வெளிநாடுகளிலிருந்து வருபவர்களுக்கு, வேலைவாய்ப்புகளை அளிக்க முன்வந்துள்ளது, அதே வேளையில் கடுமையான "விசா" நிபந்தனைகளும விதிக்கப்படும.

அபிவிருத்தி அடையாத நாடுகளிலிருந்து பெரும்பாலானோர் மாணவர்களாகவும, உல்லாச பிரயாணிகளாகவும, நாட்டிற்கு வருகிறார்கள், பின்னர் நிரந்தரமாகத் தங்கி விடுகிறார்கள்.

மத்திய கிழக்கு போன்ற மற்றைய நாடுகளை விட குறைவான சமபளம் ஜப்பானில் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஜப்பானில் தொழில் திணைக்களம தொழில் நுட்ப அறிவு இல்லாத தொழிலாளர்களை வேலைக்கு எடுப்பதில்லை என்று தீர்மானித்துள்ளது.

வெளிநாடுகளிலிருந்து ஜப்பானுக்கு வருபவர்கள், இங்குள்ளவர்களின் வேலை வாய்ப்புகளை பாதிக்கச் செய்யலாம, குடியேறுபவர்களினால் ஜப்பானியர்களின் வாழ்க்கைத் தரம பாதிக்கப்படலாம என்றும கூறப்படுகின்றது,

இவர்கள் குறைந்த சம்பளத்தில், வேலைகளை பெறுகின்றார்கள் ஆனால் காப்புறுதி தொழிலாளருக்கு கொடுக்க வேண்டிய உரிமை போன்றவைகளையும கேட்க ஆரமபிக்கின்றார்கள்.

வெளிநாடுகளிலிருந்து ஜப்பானுக்கு வேலை வாய்ப்புகளை தேடி வருபவர்களைப் பற்றிய வாக்கெடுப்பு அண்மையில் ஜப்பானில் நடந்தது. ஜப்பானில் உள்ள 56 சதவீதமான மக்கள் அதற்கு ஆதரவு அளித்துள்ளார்கள்.

ஜப்பானிய நாடாளுமன்றம் குடியகல்வு, குடிவரவு, சட்டங்களை அண்மையில் மீளாய்வு செய்தது. பெரும வர்த்தகர்கள், தொழில் நுட்பம அடைந்தவர்கள் மட்டுமே குடியேறலாம என்று தீர்மானித்துள்ளது,

வெளிநாட்டு மக்கள் குடியேறுவதினால், ஜப்பானிய வர்த்தகம முன்னேற்றமடைந்துள்ளது. இதனை வர்த்தகர்கள் ஆதரிக்கின்றார்கள், (ம-455)

## பயான் நிகழ்ச்சி

கொழும்பு, ஜன 27.

பாணந்துறை ஜமாஅதே இஸ்லாமி ஏற்பாட்டில் ஒரு நாள் விஷேட பயான் (தஃவா) நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

வத்தல்பொலை ஜிஸ்தியாப் பள்ளிக்கருகாமையில், காலை 9-00 மணி முதல் மாலை 5-00

சிரிப்பு! சிரிப்பு! !

அமோகமாக விற்பனையாகிறது!

அபுநானாவின்

"மெட்டுக்குப் பாட்டு"

அபுநானா, ஆரிபா, ஹலோ பௌமி, டொன் பொஸ்கோ இணைந்து வழங்கும நகைச்சுவைப் பாடல்களடங்கிய "ஓடியோ கெஸட்". கிடைக்குமிடங்கள்– அஸ்ரா புரடக்ஷன் 81/22, பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு-12 பைரூஸ் மியூசிக் சென்டர், கொழும்பு-11 மற்றும் எல்லா ரெகோர்ட் பார்களிலும வீடியோ கிளப்புகளிலும கிடைக்கும்.

மத்திய கிழக்கு நாடுகளில்

தொழில் வாய்ப்புக்கள்

— விரைவான பயணம —

★ பெண் கிளீனர்ஸ்
★ வீட்டுப் பணிப்பெண்கள்
★ பெண் டெயிலர்கள்
★ வீட்டு டிரைவர்கள்

கடவுச்சீட்டு– 6 படங்கள் சகிதம நேரில் வரவும

M. K. M. ENTERPRISE

பெற்று சீருடனும் சிறப்புடனும் வாழ அதே இடத்தைச் சேர்ந்த அப்பா, உம்மம்மா, நஸார் மாமா, நலீமா சாச்சி, பசீரா சாச்சி, சிதாரா சாச்சி, மாளிகாவத்தையைச் சேர்ந்த வாப்பாவின் குடும்பத்தார் மிசிரியா மாமி, மொய்தீன் உசைன் பெரியப்பா, ஜீனு பெரியம்மா, நிலாம் மாமா, அமசியா மாமி, ரிழுனுசார் சாச்சா, அஸ்வர் மச்சான், உசைன்தீன் மச்சான், மதினிமார்களான நிப்ரா, நிஸ்ரா, நிபாஸா ஆகியோர் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

வி இ 029731

## பிறந்த நாள் வாழ்த்து



முஹம்மத் நிப்ராஸ்

கொழும்பு-12, 189/3, மீரானியா வீதியைச் சேர்ந்த மும்தாஜ் - நிஸாம தம்பதிகளின் ஏகப் புதல்வனான முஹம்மத் நிப்ராஸ் தனது இரண்டாவது பிறந்த தினத்தை தனதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

அவரை டெடா, மம்மி, அப்பா, இஸ்மத் மாமா, மும்தாஸ் மாமா, பாத்திமா மாமி, பஸ்னு மைனி, வேகந்தையைச் சேர்ந்த பிர்தவ்ஸியா சாச்சி, அஸார் சாச்சா, ரோஸ் மாமி, ஹுனுப்பிட்டியைச் சேர்ந்த நிஸ்வர் பெரியப்பா, பெரியம்மா குடும்பத்தினர், பாணந்துறை தோட்டவத்தையைச் சேர்ந்த மூர்ஷிதா, முதஸ்ஸிர், கம்பளை வட்டதெனியாயவைச் சேர்ந்த நிஸாம் சாச்சா, சன்பரா மற்றும் அனைவரும முஹம்மத் நிப்ராஸை அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம வாழ வாழ்த்தியுள்ளார்கள்.

வி இ 029498



முஹம்மத் றில்வான்

தர்காநகர், ஸாவியா வீதி, "கிரஸண்ட்" இல்லத்தைச் சேர்ந்த பாஹிந் இஸ்மாயில் - பாத்திமா ருமிஸா தம்பதிகளின் செல்வப் புதல்வன் முஹம்மத் றில்வான் தனது நான்காவது பிறந்த தினத்தை (23-1-1990) செவ்வாய்க்கிழமை விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை றியாத்தில் இருக்கும் வாப்பா, உம்மா, உமமமமா, வாப்பும்மா, இஸ்மாயில் அப்பா, ஹாஜி உம்மா, றிஸ்லத் தாத்தா, அப்ரத், அஸ்லப், மஸ்லா, மித்லாஜ், அப்ரார், பஸ்ஹான், சியாம், சில்மான், சஹ்ராமா, றியாஜ், நஸூல்பா, உஸ்ரி மற்றும உற்றார், உறவினர்கள் அல்லாஹ்வின் அருளால் பல்கலையும கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தியுள்ளார்கள்.

வி இ 031055

## பிறந்த நாள் வாழ்த்து



பாத்திமா ரமீஸா

கல்கிஸ்ஸை பொன்சேகா ரோட், 8 ஏ இல்லத்தைச் சேர்ந்த கமால்டீன் - பாஹிதா தம்பதிகளின் அருமைப் புதல்வி பாத்திமா ரமீஸா தனது முதலாவது பிறந்த தினத்தை 31-1-90 இல் தனதில்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு குவைட் வாப்பா, அன்பு குவைட் உம்மா, உம்மம்மா, அபுஹனிபா மாமா, கலில் ரகுமான் மாமா, ஜீனத், சாஹிரா, ஹைறுன் பெரியம்மாமார்களும், காதர், ஹுசைன், அக்பர் பெரியப்பாமார்களும், ஜரினா, பரிதா மாமிமார்களும் குல்சாத், நவீர், சம்கன், ரினோஸா, ரிஸானா, ருக்ஸானா, ரிஸ்வான், அர்ஷாத் சகோதர சகோதரியும் சருபா மைனியும் ஆகியோர் சகல வளமும் பெற்று பல்லாண்டு காலம வல்ல அல்லாஹ்வின் கிருபையால் நீடூழி வாழ வாழ்த்துகிறார்கள்.

வி இ 031054



ஹாபீல்

மதவாச்சைச் சேர்ந்த ஜலால்தீன் - ஜொஹறா தம்பதிகளின் அன்புச் செல்வன் ஹாபீல் 24-01-90 இல் தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.

இவரை வாப்பா, உம்மா, அன்பு காக்கா ஆதில் மற்றும வாப்பா குடும்பத்தினர், உம்மா குடும்பத்தினர், அஸ்மிலாவைச் சேர்ந்த மாமாமார், ஆராதனைச் சேர்ந்த மாமாமார், வெள்ளம்பிட்டியைச் சேர்ந்த மாமாமார் ஆகியோர் சீர்கல்வி கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தியுள்ளார்கள்.

வி இ 031204

## பிறந்த நாள் வாழ்த்து



பாத்திமா ரிப்னு மௌலானா

வெலிகாமம், 309, புதிய தெருவைச் சேர்ந்த செய்யித் அஹ்மத் மௌலானா - பாத்திமா பைரூஸா தம்பதிகளின் செல்வப் புதல்வி பாத்திமா ரிப்னு மௌலானா தனது முதலாவது பிறந்த தினத்தை 25-1-90 வியாழக்கிழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடினார்.

விட இன்று தரித்திர நாராயணர்களாய்த் தவிக்கின்றனர்— ஓய்வு பெற்ற மலையக ஆசிரியர்கள் தோட்ட நிர்வாகம் பாடசாலைகளை நிர்வகித்திருந்தாலும படிப்பித்தல் முறை, நேரம் என்பன கல்விப் பகுதியின் சட்ட திட்டத்திற்கேற்பவே நடைபெற்றன— எனவே அரசாங்கத்திற்கும இதில் ஒரு பங்குண்டு என்பதில் ஆட்சேபனை இல்லை—

அரசாங்கம பாடசாலைகளை சுவீகரித்ததும் தங்கள் சேவையில் ஒரு பகுதியைக் கணித்து எதிர்காலத்தில் சற்று நிம்மதியாக வாழ நியாயமான ஓய்வூதியம் கிடைக்குமென்று எதிர்பார்த்திருந்த ஆசிரியர்களின் நிலை இலவு காத்த கிளியின் கதையாகவிருக்கின்றது—

ஒரே பாடசாலையில் 40 வருடங்களுக்கு மேலாக சேவை செய்த ஆசிரியர்களுமிருக்கின்றனர்— இவர்களின் சேவையில் அரைப் பங்கேனும் கணக்கிட்டு நியாயமான ஓய்வூதியம் கிடைக்க அரசாங்கம உடன் நடவடிக்கை எடுப்பின் பேருபகாரமாகும— இதற்கு சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஏகக் குரல் எழுப்புவது உறுதுணையாகும்—

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தாபக் கும அங்கீகாரம் பெற்ற சேவைகள் அணையாளர் நாயகம திரு பிரட்மன் வீரக்கோனை ஒரு காலத்தில் சந்தித்தது— முன்னைய கோட்டப் பாடசாலைகளின் சேவைக் காலத்தை யும கணக்கிட்டு ஓய்வூயம பெற நடவடிக்கை எடுப்பதாக திரு வீரக்கோன் அப்போது உறுதியளித்தார்—

இதனை 2-10-83 சிந்தாமணியில் அப்போதைய இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு க சிவ ... ன்றனர்— ஓய்வு பெற்ற மாதத்திற்குரிய சமபளம வழங்கப்படவில்லை—

சம்பளம கேட்டால் அமைச்சரிடம கடிதம வாங்கி வா என்கிறார்களாம் கல்வி அதிகாரிகள் ஓய்வூதியம பற்றி விசாரித்தால் அமைச்சை தான் கேட்க வேண்டும என்று சறுக்கல் விடுகிறார்கள்—

இதேவேளை, தமது ஓய்வு பெற்ற ஒரு தந்தையையும் இவரே பராமரிக்க வேண்டிய நிலை— இந்த அவல நிலை ஏற்படுவதற்கு காரணம் என்ன?

இவர்களுக்கு என அமைப்புகள் இருந்தும, இவர்களின் நலவுரிமைகளைப் பேணிக்காக்க அவை முன் வருவது இல்லை—

கோட்டப் பாடசாலைகள் அரசினால் பொறுப்பெடுக்கப்பட்ட காலத்திலிருந்த இந்த ஓய்வூயம் பற்றி பேசப்படுகிறது— என்றாலும் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் இறு காட்டுக்கு சென்ற பின்னர் தான் ஓய்வூதியம் கிடைக்குமோ என அங்கலாய்க்கிறார்கள் பலர்—

தோட்டப் பாடசாலை ஆசிரியர்களைப் பொறுத்தளவில் குடியிருப்புகளுக்கு ... தாந்தம அவர்களது சம்பளத்தில் ஒரு தொகை கோட்ட நிர்வாகத்தால் வெட்டப்பட்டு வந்தது—

ஓய்வு பெற்ற பின்னரும அதே குடியிருப்பில் தங்கி இருப்பதற்கே இத்தொகை கழிக்கப்படுவதாக கூறப்படுகிறது— ஆனால் இன்று ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் குடியிருப்புகளை புதிதாக நியமனம் பெற்று வரும ஆசிரியர்கள் தங்களுக்கு வேண்டும என்கின்றனர்—

இதனால் இழுபறி நிலைமை தோன்றியுள்ளது—

தோட்டப் பாடசாலை ஆசிரியர்களைப் பொறுத்தளவில் சமபள விகிதாசாரமும மிகவும் குறைவு—

இந்த நிலையில் ஏற்கனவே குடியிருப்புகளுக்கென சம்பளத்தில் வெட்டப்பட்ட தொகையை தோட்ட நிர்வாகங்கள் மீளளிக்குமா?

இல்லை ஓய்வு பெற்ற ஆசிரியரும பிற ஆசிரியரும் குடியிருப்புகளுக்காக மோதிக் கொள்ளப் போகிறார்களா?

இப்படியான சிக்கல்களை எதிர்நோக்கும ஓய்வு பெற்ற தோட்ட ஆசிரியர்களுக்குத் தீர்த்து வைக்க வேண்டிய பொறுப்பு கல்வி அமைச்சைச் சார்ந்ததாகும—

மாகாண சபை கல்வி அமைச்சு இதில் தலையிட்டு நிவாரணம் பெற்றுக் கொடுப்பது அவசியமாகும—

(ம—ங)

# மறைந்த பின்...

(8ஆம் பக்கம தொடர்ச்சி)

மூன்று லட்சம டாலர்களை அபராதமாக செலுத்தி விட்டு அவர் சிறையில் இருந்து மீண்டும இந்தியா வந்து சேர்ந்தார்.

அமெரிக்காவில் இருந்தபோது கால நிலைக்கு ஏற்ப தட்ப வெப்ப நிலையை மாற்றிக் கொள்ளக் கூடிய நீச்சல்குளம ஒன்று பிரத்தியேகமாக இவருக்கென் கட்டப்பட்டிருந்தது. 86 ரோல்ஸ்றோய்ஸ் கார்கள் இவருக்காக வாங்கப்பட்டிருந்தன.

தனி விமானம், ஹெலிகொப்டர்கள் வேறு தனித்தங்கத்தினாலான வைரங்கள் பதிக்கப்பட்ட கைக்கடிகாரம இவரது மணிக்கட்டை அலங்கரித்த வந்தது. இதன் விலை பல லட்சம டாலர்கள்.

ரஜனீஸை ஒருவர் பார்க்க வேண்டுமானால் அந்நபர் முதலில் குளிக்க வேண்டும, பின்னர் தான் அணிந்து சென்ற ஆடைகளை களைந்து விட்டு ஆசிரமத்தில் வழங்கப்படும ஆடையை அணிந்து கொள்ள வேண்டும. இதன் பின்னரே அவர் சுவாமிகளைச் சந்திக்க முடியும, ஆஸ்துமாக்காரராகையால் அவருக்கு தூசு ஆகாதாம, செண்ட் மணம் அலர்ஜியை உண்டு பண்ணுமாம, இதனால் தான் இப்படி ஒரு ஏற்பாடு!

பகவானுடன் உறவுகளை முறித்துக் கொண்டதும தனது குருநாதரைப் பற்றி ஷீலா என்ன சொன்னார் தெரியுமா?

அவர் வெலியம என்ற போதைப்பொருளுக்கு அடிமையாகிப் போனவர். தினமும 60 மில்லி கிராம வெலியம அவருக்கு வேண்டும. இதனால் அவரது பேச்சில் குளறல் தோன்றியிருக்கிறது. முகத்தில் சுருக்கம விழாமலிருக்க பல மருந்துகளை அவர் பூசி வருகிறார். பணவெறி பிடித்தவர், பொய்யர் இப்படியெல்லாம தன் குருவை ஷீலா சாடினார்.

இதற்கு பதிலளித்த ரஜனீஸ் ஷீலாவுடன் உறவு கொள்ள வில்லை என்ற கோபத்தில் தான் இப்படியெல்லாம தூற்றுகிறார் என்று கூறவே, ஷீலாவுக்கு பொத்துக் கொண்டு வந்தது கோபம!

இவரால் அதெல்லாம முடியாத விஷயம. ஆண்மை வீரிய மருந்துகளை இவர் உபயோகித்து வருகிறாரே என திருப்பிப் பதிலளித்தார்.

ரஜனீஸ் ஆனந்த ஷீலா மோதல் இப்படி குழாயடிச் சண்டையாக உருவெடுத்த அவ்விருவருமே சேர்ந்த கட்டிய கோட்டையைத் தகர்த்தது,

(ம—032)

# மனையும் மங்கையும்

## பெண்களின் வாழ்க்கையில் கசப்பான நாட்களா?

### சாமர்த்தியமாக சமாளிக்க தெரியவேண்டும்

பெண்களின் வாழ்க்கையில் கசப்பான நாட்கள் வந்தாலும் அதை சாமர்த்தியமாக சமாளித்து செல்வோர்தான் சந்தோஷமாக காலத்தை தள்ள முடியும்.

கல்யாணமான பெண் வேலைக்கு போவோராக இருந்தாலும் சரி, வீட்டில் இருப்பவர்களானாலும் சரி திருமண வாழ்க்கையை அவ்வப்போது அசைபோட்டு சூழ்நிலைக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

ஓரளவு பக்குவ நிலைக்கு தன்னை தயார் செய்து கொள்ளும் முன்பே பெண், திருமணம் செய்து வைக்கப்படுகிறாள். கல்யாணமான ஓரிரு ஆண்டுகள்தான் எவ்வித பிரச்சினையுமின்றி சந்தோஷம் மட்டுமே வாழ்க்கை என்ற வகையில் குடும்பம் அமைதியாக இயங்குகிறது.

அதன் பின், ஒரு குழந்தை பிறந்து விட்டால் போதும். குடும்பப் பெண்ணுக்கு பொழுது போகவில்லை என்ற நிலை இருக்காது. வீட்டு வேலைகள் ஆபீஸ், குழந்தைகளைக் கவனிப்பது என்று கிட்டத்தட்ட 18 மணி நேரத்துக்கு அவள் பிசியாகி விடுகிறாள்.

ஆண்டுகள் மாதங்களாகவும், மாதங்கள் நாட்களாகவும் பறக்கிறது. தினமும் குழந்தையை பராமரித்து வீட்டு வேலைகளை முடித்து ஆபீஸ் கிளம்புவதற்குள் போதும் போதும் என்றாகி விடும். வீட்டில் உள்ள பெண்களானாலும் சரி இதே நிலைதான். எந்த நேரமும் குழந்தை கவனிப்புதான்.

இப்படி முழு பராமரிப்புடன் கிடையாதே, நான் என்ன வீட்டு வேலை செய்யும் மிசின் மட்டும் தானா? என்று மனதிற்குள் அசை போடுகிறாள்.

இந்த ரீதியில் போகும் பெண்கள் சொல்லும் பொதுவான குறை என்ன தெரியுமா? என்னை கவனிப்பதற்கு என் கணவருக்கு நேரம் இல்லை என்று புலம்புவார்கள். எனக்கென்று பொழுது போக்கு, உரிமை என்று இல்லையா? என்னை கவனிக்காதவருடன் தொடர்ந்து வாழ்க்கை நடத்துவது எந்த வகையில் அமைதியாய் இருக்கும். நான் விலகப் போகிறேன் என்ற கொஞ்சம் சூடாக பேசும் பெண்மணிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

சந்தோஷமாக காலம் தள்ளுகிறார்கள் என்று சில தம்பதிகளைப் பார்த்தால் நமக்கு மனதில் எண்ணத் தோன்றும்— ஆனால், அவர்களுக்கும் இது போன்ற குறை இருக்கத்தான் செய்கிறது.

கணவன் போக்குக்கு ஈடு கொடுத்துதான் மனைவி நடக்க வேண்டும். ஒருவரை ஒரே நாளில் மாற்றிவிட முடியாது. சிறிது சிறிதாக மாற்ற வேண்டும். அதனால் "கணவன் கவனிப்பதில்லையே!" என்று மனதை உறுத்திக் கொள்ளாமல் தனது சந்தோஷத்தை தக்க வைத்துக் கொள்ள தனது வாழ்க்கை முறையை பெண்கள் மாற்றிக் கொள்ள வேண்டும்.

முன்பாவது, வீட்டு வேலைகளை எல்லாம் செய்ய வேண்டிய பொறுப்பு மனைவிக்கு உண்டு.

வீட்டில் தன்னை கவனிக்க கணவன் இல்லை, குழந்தையும் தன்னை ஒதுக்குகிறதே என்ற மனக்குறையை முதலில் விட வேண்டும். "போர்" அடிக்கும் நேரத்தில் செய்ய எவ்வளவோ "ஹாபிகள்" இருக்கின்றன. வீட்டில் தோட்டம் அமைப்பது, தையல் வேலை போன்ற சிறு பயிற்சிகளுக்கு செல்வது, கடை, கோயிலுக்கு செல்வது என்று பல வழிகள் உள்ளன.

இன்னொன்று சமூக சேவை. இது வீட்டில் கிடக்கும் பெண்கள் மட்டுமல்ல யாரும் செய்ய வேண்டிய கடமை இது.

இப்படி பொழுது போக்குகளை வளர்த்துக் கொண்டால் இல்லத்தரசிகளின் இனிய வாழ்க்கையில் கசப்பு என்பதே ஏற்பட வாய்ப்பு இல்லை. தங்களை ஏதாவது ஒரு வழியில் ஈடுபடுத்திக் கொண்டு வாழ்க்கையை சீராக, சந்தோஷமாக ஓட்டுவது பெண்கள் கையில் தான் உள்ளது. வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு இந்த விஷயத்தில் குறை அவ்வளவாக இல்லை. வீட்டில் இருக்கும் பெண்களுக்குத்தான் ஏற்படுகிறது.

இதனால் வீட்டில் உள்ள பெண்கள் ஏதாவது ஒரு வேலைக்குச் செல்லலாம். வெளிநாடுகளில் வீட்டுப் பெண்கள் வேலைக்குச் செல்வது சர்வ சாதாரணமாகி விட்டது. கணவனை பார்க்கக் கூட நேரமிருக்காத அம்மணிகளும் அங்கு உண்டு. அவ்வளவு பிசி. அப்படியும் இல்லாமல் தங்கள் வாழ்க்கைக்கு சந்தோஷத்தை அளிக்கும் வகை அறிந்து பெண்கள் செயல்பட வேண்டும்.

குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களானால் அவர்களது தேவையை கவனிக்க ஓரளவு நேரத்தை பெண்கள் ஒதுக்க வேண்டி உள்ளது. பள்ளிப் படிப்பை முடித்து கல்லூரிக்குள் காலடி வைத்தவுடன் அவர்களுடன் பழகும் முறையை பெற்றோர் மாற்றிக் கொள்ள வேண்டி இருக்கிறது. தாய்க்கு கிட்டத்தட்ட ஒரு தோழி போல மகள் இருக்கிறாள்.

இப்படி காலம் மாற மாற குடும்பத் தலைவியின் பராமரிப்பிலும் மாற்றம் ஏற்படுகிறது. "போர் அடிக்கிறதே கணவன் கவனிப்பதே இல்லையே!" என்ற எண்ணம் குறைகிறது. வீட்டில் முழு கவனத்தை செலுத்துகிறாள்.

கணவன் கவனிப்பதில்லையே என்று குறைபடுவது குறிப்பாக நடுத்தர வயது பெண்கள்தான். அந்த வயதில் மேற்சொன்ன பல யோசனைகளைப் பெண்கள் பின்பற்றலாம். அப்படிச் செய்தால் குடும்பம் அமைதியாக இயங்கும். பெண்களின் மனதில் அநாவசிய குழப்பமோ, வெறுப்போ, தனிமை எண்ணமோ ஏற்பட இது வழிவகுக்காது.

அதனால் நடுத்தர வயதுப் பெண்கள் தங்கள் கல்யாண வாழ்க்கை பற்றி குறைபடாமல் சிந்தித்து சாமர்த்தியமாக செயல்பட வேண்டும். போட்டி உலகில் போட்டா போட்டி போட்டு முன்னேறும் கணவனுக்கு சாதகமாக, ஆதரவாக ஒரு பெண் செல்ல வேண்டுமே தவிர, மனைவிதான் முக்கியம் என்று அவனிடம் தகராறு செய்யக் கூடாது.


கணவன் போக்கிலேயே விட்டு விட்டு பின்னர் படிப்படியாக மாற்றினால் கணவனும் சிந்திப்பான். தனது குறையை எண்ணி மாறுவான். ஆனால், அதற்கு சற்று காலம் தேவை— அதுவரை மனைவிதான் பொறுமையாக இருக்க வேண்டும். குடும்பப் பொறுப்பில் முழுமையாக ஈடுபட்டு கணவன் அமைதிக்கு கேடு விளைவிக்காமல் மனைவி நடந்து கொள்ள வேண்டும்.

இப்படி நடந்து கொண்டால் அம்மணிகளுக்கு வாழ்க்கையில் அலுப்பே ஏற்படாது. வாழ்க்கை சந்தோஷமாக ஓடும்.

(ம—10)

## நீச்சல் வீராங்கனையின் துணிச்சலுக்கு பாராட்டு

— ஆர்த்தி பிரதான் —



பதினேழு வயது மாணவியான இவர் வசிப்பது மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள தானா என்ற இடத்தில்!

தர்மார்த்தா கடற்கரையில் இருந்து பம்பாயில் உள்ள இந்தியா கேட் வரையிலான 33 கிலோ மீட்டர் தூரத்தை 10 மணி 41 நிமிடத்தில் நீந்திக் கடந்து இந்தியாவின் முதலாவது இளம் நீச்சல் வீராங்கனை என்ற சாதனை படைத்தார்!

பின்னர் பிரான்ஸ் நாட்டிற்கும் இங்கிலாந்திற்கும் இடையில் உள்ள ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்தார். இந்த சாதனையை உலகத்திலேயே முதன் முறையாக சாதித்த இந்தியப் பெண் என்ற பெயரினையும் பெற்றார்!

இதே போல ஸ்பெயின் நாட்டில் உள்ள 30 கிலோ மீட்டர் கடல் தூரத்தை 7 மணி நேரத்தில் நீந்தி கின்னஸ் புத்தகத்திலும் இடம்பெற்றார்!

இவரது நீச்சல் சாதனையைப் பாராட்டி மத்திய அரசு அர்ஜுனா விருதும் மகாராஷ்டிர மாநில அரசு சத்ரபதி விருதும் வழங்கி கௌரவித்தது!

இவர் தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையிலான 30 கிலோ மீட்டர் தூரம் உள்ள பாக் ஜலசந்தியை கடக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்—

எதிர் நீரோட்டம், கடல் கொந்தளிப்பு, மற்றும் ராட்சதத்தனமான காற்று இவற்றின் காரணமாக 12 மணி நேரம் நீந்தியும் கடலில் முன்னேற முடியாத சூழ்நிலையில் தனது முயற்சியை பாதியிலேயே விட்டார்—

இதுவரை யாரும் நீந்தக் கூடத் தயங்கும் இந்த பாக் ஜலசந்தியில் இடைவிடாது அதுவும் முதன் முறையாக ஒரு பெண் 12 மணி நேரம் நீந்தினார் என்பதே பெரிய சாதனையாகும் என்றார் ஆர்த்தியின் பாதுகாப்புக்கு சென்ற கடற்படை அதிகாரி பைலா. (ம—10)

## அழகு சேர்க்கும் விந்தைக் கலை

டாக்டர் ஹார்வி ஆஸ்டின் அமெரிக்காவில் உள்ள வாஷிங்டன் நகரில் பிளாஸ்டிக் அறுவை

யான உருவம்— வசீகரமான முகம்— 40 வயது நிரம்பிய கேரல் ஆஸ்டின் என்ற அம்மணி

இந்த அழகுக் கலை அறுவை சிகிச்சைக்கு கேரல் தன் உடல் முழுவதையும் டாக்டர் ஹார்வி

சப்பையாக அகன்று இருந்த மூக்கு கூர்மையாக செதுக்கி மாற்றப்பட்டது— அறுவை

பார்வையில் சோர்வு தெரியக் காரணமாக இருந்த

யாணமான ஓரிரு ஆண்டுகள் தான் எவ்வித பிரச்சினையுமின்றி சந்தோஷம மட்டுமே வாழ்க்கை என்ற வகையில் குடும்பம அமைதியாக இயங்குகிறது.

அதன் பின், ஒரு குழந்தை பிறந்து விட்டால் போதும். குடும்பப் பெண்ணுக்கு பொழுது போகவில்லை என்ற நிலை இருக்காது. வீட்டு வேலைகள் ஆபீஸ், குழந்தைகளைக் கவனிப்பது என்று கிட்டத்தட்ட 18 மணி நேரத்துக்கு அவள் பிசியாகி விடுகிறாள்.

ஆண்டுகள் மாதங்களாகவும, மாதங்கள் நாட்களாகவும பறக்கிறது. தினமும குழந்தையை பராமரித்து வீட்டு வேலைகளை முடித்து ஆபீஸ் கிளமபுவதற்குள் போதும போதும என்றாகி விடும. வீட்டில் உள்ள பெண்களானாலும சரி இதே நிலைதான். எந்த நேரமும குழந்தை கவனிப்புதான்.

இப்படி முழு பராமரிப்புடன் வளரும குழந்தை 5 வயதுக்குப் பின்னர் சற்று மாறுதல் அடைகிறது. அதுவரை அமமா அமமா என்று வளர்ந்து வரும இந்தக் குழந்தைகளுக்கு 5 வயதுக்குப் பின் அமமாவின் தேவை குறைகிறது. இதனால் தாய் – குழந்தை இடையே உணர்ச்சிகரமான இடைவெளி விழுகிறது. இந்த இடைவெளி தாயின் மனதில் ஆழமாய் பதிகிறது.

ஒரு பக்கம வேலை வேலை என்று வீட்டில் தஙகாமல் ஓடும கணவன், இன்னொரு பக்கம தாயை எதிர்பார்க்காத குழந்தை. இப்படி நிலைமை இருப்பதால் தாய் பெரிதும சலிப்படைகிறாள். தன்னை கவனிக்க யாருமே இல்லையே, பொழுது போவதற்கு கூட கணவன் நேரம ஒதுக்குவது

சூடாக பேசும பெண்மணிகளும இருக்கத்தான் செய்கிறார்கள்.

சந்தோஷமாக காலம தள்ளுகிறார்கள் என்று சில தமபதிகளைப் பார்த்தால் நமக்கு மனதில் எண்ணத் தோன்றும– ஆனால், அவர்களுக்கும இது போன்ற குறை இருக்கத்தான் செய்கிறது.

கணவன் போக்குக்கு ஈடு கொடுத்துதான் மனைவி நடக்க வேண்டும. ஒருவரை ஒரே நாளில் மாற்றிவிட முடியாது. சிறிது சிறிதாக மாற்ற வேண்டும. அதனால் "கணவன் கவனிப்பதில்லையே!" என்று மனதை உறுத்திக் கொள்ளாமல் தனது சந்தோஷத்தை தக்க வைத்துக் கொள்ள தனது வாழ்க்கை முறையை பெண்கள் மாற்றிக் கொள்ள வேண்டும.

முன்பாவது, வீட்டு வேலைகளை எல்லாம செய்ய வேண்டிய பொறுப்பு மனைவிக்கு உண்டு. காலம மாறி விட்டது. இப்போது எதற்கெடுத்தாலும வேலை ஆட்கள் உள்ளனர். இதனால் வீட்டில் உள்ள பெண்களின் "சும்மா இருக்கும நேரம" அதிகரிக்கிறது. இப்படி "போர்" அடிப்பதால் கணவன்தான் இதற்கு காரணம, ஆபீஸ் ஆபீஸ் என்று கட்டிக் கொண்டு அழுகிறாரே என்று எரிச்சல் வரும.

இப்படி இல்லத்தரசிகள் புலமபுவது பெரிய பிரச்சினையில் கொண்டு வருகிறது. காரணமே இல்லாமல் கணவன் – மனைவி சச்சரவுக்கு இது வழிவகுத்து விடுகிறது. இந்த குறையை அமமணியால் தீர்த்துக் கொள்ள முடியுமா? முடியும! ஆனால் மனப்பக்குவம முக்கியம!

வேண்டிய கடமை இது.

இப்படி பொழுது போக்குகளை வளர்த்துக் கொண்டால் இல்லத்தரசிகளின் இனிய வாழ்க்கையில் கசப்பு என்பதே ஏற்பட வாய்ப்பு இல்லை. தஙகளை ஏதாவது ஒரு வழியில் ஈடுபடுத்திக் கொண்டு வாழ்க்கையை சீராக, சந்தோஷமாக ஓட்டுவது பெண்கள் கையில் தான் உள்ளது. வேலைக்குச் செல்லும பெண்களுக்கு இந்த விஷயத்தில் குறை அவ்வளவாக இல்லை. வீட்டில் இருக்கும பெண்களுக்குத்தான் ஏற்படுகிறது.

இதனால் வீட்டில் உள்ள பெண்கள் ஏதாவது ஒரு வேலைக்

வேண்டி உள்ளது. பள்ளிப் படிப்பை முடித்து கல்லூரிக்குள் காலடி வைத்தவுடன் அவர்களுடன் பழகும முறையை பெற்றோர் மாற்றிக் கொள்ள வேண்டி இருக்கிறது. தாய்க்கு கிட்டத்தட்ட ஒரு தோழி போல மகள் இருக்கிறாள்.

இப்படி காலம மாற மாற குடுமபத் தலைவியின் பராமரிப்பிலும மாற்றம ஏற்படுகிறது. "போர் அடிக்கிறதே கணவன் கவனிப்பதே இல்லையே!" என்ற எண்ணம குறைகிறது. வீட்டில் முழு கவனத்தை செலுத்துகிறாள்.

கணவன் கவனிப்பதில்லையே

...படிப்படியாக மாற்றினால் கணவனும சிந்திப்பான். தனது குறையை எண்ணி மாறுவான். ஆனால், அதற்கு சற்று காலம தேவை– அதுவரை மனைவிதான் பொறுமையாக இருக்க வேண்டும. குடுமபப் பொறுப்பில் முழுமையாக ஈடுபட்டு கணவன் அமைதிக்கு கேடு விளைவிக்காமல் மனைவி நடந்து கொள்ள வேண்டும.

இப்படி நடந்து கொண்டால் அமமணிகளுக்கு வாழ்க்கையில் அலுப்பே ஏற்படாது. வாழ்க்கை சந்தோஷமாக ஓடும.

(ம—10)

ஜுனா விருதும் மகாராஷ்டிர மாநில அரசு சத்ரபதி விருதும் வழங்கி கௌரவித்தது!

இவர் தலைமன்னாருக்கும தனுஷ்கோடிக்கும இடையிலான 30 கிலோ மீட்டர் தூரம் உள்ள பாக் ஜலசந்தியை கடக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்–

எதிர் நீரோட்டம், கடல் கொந்தளிப்பு, மற்றும் ராட்சதத்தனமான காற்று இவற்றின் காரணமாக 12 மணி நேரம் நீந்தியும் கடலில் முன்னேற முடியாத சூழ்நிலையில் தனது முயற்சியை பாதியிலேயே விட்டார்–

இதுவரை யாரும் நீந்தக் கூடத் தயங்கும் இந்த பாக்



ஜலசந்தியில் இடைவிடாது அதுவும் முதன் முறையாக ஒரு பெண் 12 மணி நேரம் நீந்தினார் என்பதே பெரிய சாதனையாகும என்றார் ஆர்த்தியின் பாதுகாப்புக்கு சென்ற கடற்படை அதிகாரி பைலா. (ம—10)

# அழகு சேர்க்கும் விந்தைக் கலை

டாக்டர் ஹார்வி ஆஸ்டின் அமெரிக்காவில் உள்ள வாஷிங்டன் நகரில் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைத்துறையில் நிபுணர்–

பிறவியிலேயே சிலருக்கு அளவுக்கு குறைவான கோணல் மாணலான உடல் உறுப்புக்கள் அமைந்து விடுவதுண்டு– இத்தகையவர்களுக்கு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மூலம் சிறிய மாற்றம் செய்து அவர்களை மிகச் சிறந்த அழகிகளாக அழகர்களாக மாற்றி விடலாம–

ஹார்விக்கு திருமணமாகி ஐந்து குழந்தைகள்– அந்தத் திருமணம் முறியும நிலை வயது 42 தொழிலில் திறமை காட்டக்கூடிய வாய்ப்பு இவருக்கு கிடைக்கவில்லை– மிகவும் மனம் சோர்ந்து போயிருந்தார்–

வயது நாற்பத்தி இரண்டு என்றாலும் ஹார்விக்கு எடுப்பான தோற்றம்– கவர்ச்சியான உருவம்– வசீகரமான முகம– 40 வயது நிரம்பிய கேரல் ஆஸ்டின் என்ற அம்மணி இவரிடம் ஒருநாள் வந்தார்–

"எனக்கு அழகு சேர்க்க முடியுமா?

"அதாவது...?"

"ஆம்... பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் என் உடலின் மேடு பள்ளங்களை சரிசெய்ய முடியுமா என் தோற்றம மிக எடுப்பாகக் கவர்ச்சியாக மாற வேண்டும்"

துள்ளி எழுந்தார் டாக்டர், ஹார்வி ஆஸ்டின்!

இதற்காகத்தானே காத்துக் கொண்டிருந்தார் அவர்!

நாற்காலியில் அமர வைத்தார்–

இமையின் கீழ்ப் பகுதியில் வீக்கம போல் சதை இருந்தது– பார்வையில் சோர்வு வெளிப்படுவது போல் தோன்றியது– இதற்கு அந்த சதைதான் காரணம்!

மூக்கின் நுனிப் பகுதி அகன்று இருந்தது– குறுக வைத்தால் முகத்தின் அழகு சற்றே கூடும– இந்த இரண்டு அறுவை சிகிச்சையுடன் "கேரல்"லை அழகுபடுத்தும் பிளாஸ்டிக் சர்ஜரி வேலையைத் துவக்கினார்–

ஒரு சிற்பி கல்லில் சிலை வடிக்க உளியையும் சுத்தியலையும பயன்படுத்துவது போல பிளாஸ்டிக் சர்ஜன்கள் சகுால் பெல் சிசில் ஆகியவைகளைப் பயன்படுத்துவர்–

ஒரு இடத்தில் அதிகப்படியாக சதை இருந்தால் அதை செதுக்கி எடுத்து தேவைப்படும இடத்தில் சேர்த்து விடுவார்கள்– அறுவை சிகிச்சையில் சதை எடுத்த இடமும் பொருத்திய இடமும் தெரியாத வகையில் மூடி விடுவார்கள்–

இந்த அழகுக் கலை அறுவை சிகிச்சைக்கு கேரல் தன் உடல் முழுவதையும் டாக்டர் ஹார்வியின் திறமையை சோதனை செய்து பார்க்க ஒப்படைத்தார் முதல் கட்டமாக இமையும் மூக்கும–

இமையில் இருந்த கொத்துச் சதை அகற்றப்பட்டது– பிறகு சப்பையாக அகன்றும் இருந்த மூக்கு கூர்மையாக செதுக்கி மாற்றப்பட்டது– அறுவை சிகிச்சை முடிந்தது– கேரல் தன் முகத்தை கண்ணாடியில் பார்த்தாள்– அவளால் நம்பவே முடியவில்லை–

மாற்றம் மிகப் பெரிய மாற்றம்!

பார்வையில் சோர்வு தெரியக் காரணமாக இருந்த இமைச் சதை அகற்றப்பட்டவுடன் பார்வையில் காந்த சக்தி ஒளிர்விட்டது– சப்பை மூக்கு போய் கூர்மையான நாசி முகத்தின் அழகை அட்டகாச

(23ஆம் பக்கம பார்க்க)

# எத்தகைய ஆண்களை பெண்கள் விரும்புவர்?

பெண்கள் எத்தகைய ஆண்களை விரும்புகிறார்கள் என்பது பற்றி ரஷ்யாவில் ஓர் ஆராய்ச்சி நடந்தது– அதன்படி பெருமபாலான பெண்கள் துடிப்பான வாலிபர்களையே விரும்புகிறார்கள்– ஆனால் அமைதியான ஆண்களை விரும்பும் பெண்களும உண்டு– ஒல்லியாகவும குட்டையாகவும உள்ளவர்களை பயந்தாங்கொள்ளி என்று பெண்கள் ஒதுக்குகிறார்கள்–

சில ஆண்கள் பெண்களைப் பார்த்தாலே வெட்கப்படுவார்கள்– பாராதவர்களைப் போல் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு போவார்கள்– இது சில பெண்களுக்குப் பிடிப்பதில்லை–

"உன்னைக் காதலிக்கிறேன்" என்று மனந்திறந்து பேசும் மன்மதன்களை சில ரதிகள் விரும்புகிறார்கள்–

(ம–10)

# யுவதிகள் விரும்பும் பகிரங்கக் காதல்

இளைஞர் யுவதிகளுக்கிடையே தாம்பத்ய உறவு பற்றிய கருத்துக்கள் முற்றிலும் எதிர்பார்க்காததும் முரண்பாடுள்ளனவாகவும இருக்கின்றன–

இவ்வாறு குடும்ப திட்டச் சங்கம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது!

கிராமங்களில் வாழும் 40 சதவீதமான யுவதிகள் திருமணத்திற்கு முன் உடலுறவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்– பகிரங்க காதலுக்கும ஆதரவு தெரிவித்துள்ளனர்–

இந்த 40 சதவீதமானோரில் 29 சத வீதமானவர்கள் திருமணத்திற்கு முன் உடல் உறவு அவசியம் எனக் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்– ஆனால் கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும வசிக்கும பெண்கள் கருச்சிதைவுக்கு ஆதரவு காட்டவில்லை! கருச்சிதைவை 65 சத வீதமானோர் எதிர்க்கின்றனர்–

குழந்தைகளை பெற்றெடுத்து அனாதைகளாக நடுத்தெருவில் விடுவதை 87–3 வீதமானோர் கண்டிக்கின்றனர்–

பலவந்தமாக உடலுறவு ஏற்பட்டு குழந்தை தரித்தாலும் அல்லது கள்ளக் காதல் மூலம் குழந்தை தரித்தாலும அதனை கருச்சிதைவு செய்யக் கூடாதென்று 69–6 சதவீதமான பெண்கள் கூறுகின்றனர்–

திருமணத்திற்கு முன் உடல் உறவை 39–7 இல் இருந்து 60–7 வரையிலுமான ஆண்கள் வரவேற்கின்றனர்– திருமணத்திற்கு ஏற்பாடுகள் செய்த பின் உடலுறவு அவசியம் என்பதும பலரின் கருத்து!

பெண்களின் சுகநலத்திற்கு கருச்சிதைவு அவசியமென்றால் அதை செய்ய வேண்டும் என்ற அபிப்பிராயத்தை ஆண்களில் அநேகமானோர் ஆதரிக்கின்றனர்–


திருமணத்திற்கு முன் உடல் உறவில் பெண்ணின் கற்பு பறிக்கப்படுகின்றது– அதைத் தெரிந்தும் 79 சதவீதமான ஆண்கள் கன்னிப் பெண்களையே திருமணம் செய்ய விரும்புகின்றனர்–

முதல் இரவன்று திருமணப் பெண் கன்னிப் பெண்ணாக இருக்க வேண்டுமென்ற கொள்கை பரவலாக இருக்கின்றது–

[ம—455]



# தாயும் சேயும்



# தாயின் அன்பு இன்றி குழந்தைகள் நன்றாக வளர முடியாது

## நிபுணர்கள் நடத்திய ஆய்வு தரும் விவரம்

அன்பின்றி குழந்தைகள் நன்றாக வளரமுடியாது. இதனை அனாதை இல்லங்களில் ஆய்வு நடத்திய நிபுணர்கள் கண்டு பிடித்தனர்.

அனாதை இல்லங்களில் வசிக்கும் பிள்ளைகள், இரண்டு அல்லது மூன்று வயதாகியும் கூட உட்காரவோ அல்லது நடக்கவோ முடியாத நிலையிலிருக்கின்றார்கள். அநேக குழந்தைகள் இறந்தும் இருக்கின்றனர்.

இக்குழந்தைகளுக்கு சகல விதமான சலுகைகளும் இருந்தன, நல்ல உடையும், உணவும் உறங்கத் தொட்டிலும் இருந்தன. அவர்களின் வளர்ச்சிக்கு அனைத்தும் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் தாய்ப் பாசம் என்ற அரவணைப்பிற்கு ஏமாந்திருந்தார்கள்.

அனாதை இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்கு, என்ன குறைவு என்று பலர் நினைக்கலாம். ஆனால் அவர்களுக்கு என்ன குறைவு என்பது அவர்களுக்குத்தான் தெரியும்.

அவர்களுடைய வளர்ச்சிற்கு தேவையான சில முக்கியமான ஒன்று, அங்கில்லை, அதுதான் அன்பு!

அவர்களைத் தொட்டுப் பார்க்கவோ, அணைத்துக் கொள்ளவோ, தாலாட்டவோ, அங்கு யாருமேயில்லை.

யாருமே அவர்களை நேசிக்கவில்லை.

அவர்களுடைய அன்பையூட்டும் கிண்ணங்கள் நிரம்பி வழியாமல் காய்ந்து கிடந்தன.

குழந்தைகள் மீது நாம் கவனம் செலுத்தினால்தான் நாம அவர்களை நேசிக்கிறோம் என்பதை குழந்தைகள் உணர்ந்து கொள்வார்கள்.

நாம அவர்களை ஏற்றுக் கொள்கிறோமா என்பதை அறிய விரும்புகிறார்கள், தங்களுடைய நடவடிக்கைகளை நான்கு பேர் பார்க்கக் கூடியதாக காட்ட விரும்புகிறார்கள்.

தாங்கள் நல்ல பிள்ளைகள் என்று தங்கள் நடத்தையினாலும் மற்றவர்களுக்கு புரியவைக்க முயலுகின்றார்கள். அநேக தவறான காரியங்களைச் செய்தும் கூட சிறுவர்கள் மற்றவர்களின் கவனத்தை எப்படியாவது பெற்றுக் கொள்ள விரும்புகிறார்கள்.

மற்றவர்களது கவனத்தைக் கவரவேண்டும் என்பதே அவர்களது ஒரே ஒரு குறிக்கோளாக இருக்கிறது. அது சரியான முறையா அல்லது தவறான முறையா என்பதற்கான வழி முறைகளை அவர்கள் சிந்திப்பது கிடையாது.

அன்புள்ளவர்களாக வளருவதற்கு தேவையான அன்பை நமது குழந்தைகள் பெருகிறார்களா என்பதை எப்படி நிச்சயப் படுத்திக் கொள்வது?

மிகச் சாதாரணமான சில வழி முறைகளை பின்பற்றி, குழந்தை தன்னை யாருமே நேசிக்கவில்லை என்று நாம செய்து விடுகிறோம்.

அதற்கான வழிமுறைகள் என்ன என்பதைப் பார்ப்போம்.

குழந்தை நன்றாக நடந்து கொள்ளும் போது, மட்டுமே நாம ஆதரவு காட்டுகிறோம், பிள்ளைகளை மற்றவர்களுக்கு முன்பாக கேலி செய்து அவ்வாறு திருத்த முயல்கின்றோம், பிள்ளைகளை பயமுறுத்துகிறோம்.

நமது ஏமாற்றம் அல்லது வெறுப்பு ஆகியவற்றைக் காட்டுவதற்காக அவர்களை கண்டு பெருமூச்செறிகிறோம், சில சமயங்களில் அமைதியைக் கடைப்பிடித்து பிள்ளையை அலட்சியம் செய்கிறோம்.

நாம அன்பைக் காட்ட வேண்டிய நேரத்தில் காட்டாமல் இனிய வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் தட்டிக் கொடுக்காமல், பாராட்டாமல் சின்னஞ்சிறு பரிசுகளை கொடுத்து சந்தோஷப்படுத்தாமல், அமைதியை கடைப்பிடிக்கின்றோம்.

அவர்களின் அன்பு கிண்ணங்களை நிரப்புவதில் எவ்வாறு அக்கறைகாட்ட வேண்டும்?

பிள்ளை எப்படியிருக்கின்றானோ அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டியது மிக முக்கியமான காரியமாகும்.

குழந்தை எப்பொழுதும் உங்களால் விரும்பப்படுகின்றவன், வரவேற்கப்படுகின்றவன் என்பதை அவன் உணர்ந்து கொள்ள வேண்டும். அவன் பழகும் விதத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

அவன் பிழையாக நடந்து கொண்டால், அதன் காரணங்களை அறிந்து கொள்ள முயல வேண்டும். அவனை அன்பாக நடத்தவேண்டும், மேலும் பிள்ளைகள் வயதில் சிறியவர்களாக இருந்தாலும் அவர்களை மதிக்க வேண்டும்.

ஒவ்வொரு பிள்ளை சொல்வதையும் கவனமாக கேட்க வேண்டும். பிள்ளை தனது மனதில் பட்டதை தங்குதடையின்றி வெளிப்படையாக சொல்லும், அதற்கு தகுந்த சூழ்நிலைகளையும், சௌகரியத்தையும் உருவாக்க வேண்டும். தேவைகளை பூர்த்தி செய்யவேண்டும்.

நாள்தோறும் பிள்ளையோடு நமது நேரத்தை செலவிட வேண்டும், அவர்களது கையைப் பிடித்துக் கொள்ளுங்கள், அரவணைத்துக் கொள்ளுங்கள், கட்டிப்பிடித்துக் கொள்ளுங்கள், முத்தமிடுங்கள்.

உங்களது பிள்ளைகளிடத்தில் அன்பு காட்டுங்கள், "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்"

(ம-455)

# கர்ப்பிணிகள் மரணம்

## உலகில் அதிகரிப்பதை

# குறைக்க வழி பிறக்கும்

பிரான்சில் ஒரு புது மாத்திரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது- வேண்டாத கர்ப்பம் தரித்த பெண்கள் இம் மாத்திரையை உட்கொண்டால் தானாகவே கருக் கலைந்துவிடும்- டாக்டர்களைத் திருட்டுத்தனமாக சந்திக்க வேண்டியதில்லை- ஆயுதம் போட வேண்டியதில்லை உயிருக்கு ஆபத்து நேருமோ என பயப்படத் தேவையில்லை- கருக்கலைப்பை பாதுகாப்பான ஒரு சங்கதியாக்கி விட்டது இந்த புதிய மாத்திரை!

இப்போது பிரான்சில் மட்டும் விற்பனைக்கு விடப் பட்டுள்ள இம் மாத்திரையின் பெயர் அர் யூ 486 என்பதாகும்- விரைவிலேயே உலக நாடுகளிலும் இம் மாத்திரை விற்பனைக்கு விடப்பட வேண்டுமென டாக்டர்கள் இம்மாத்திரை குறித்த அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்-

ஹோர்மோன்களைப் பாதிக்கும் தன்மைகொண்ட ஒரு மூலகத்தை இம் மாத்திரை கொண்டுள்ளது- இம் மாத்திரையை உட்கொண்டதும் இந்த மூலகம் இயங்கி புரஜஸ்டரோன் எனப்படும் ஹோர்மோன் உற்பத்தியாவதைத் தடுத்து விடுகிறது-

பெண்களின் உடல் நலத்திற்கும் பாதுகாப்புக்கும் ஆபத்து விளைவிக்காத இந்த மாத்திரைகளை உலக நாடுகளில் விற்பனைக்கு விடுவது பல மரணங்களைத் தடுத்து நிறுத்துமென அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது- ஏனெனில் உலகெங்கும் தெரிந்தும் தெரியாமலும் கருக்கலைப்பு நடைபெறவே செய்கிறது- தவறான முறைகளைக் கையாள்வதால் வருடம் ஒன்றுக்கு இரண்டு லட்சம் கர்ப்பிணிகள் உயிரிழப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது-

[ம—032]

## அழகு சேர்க்கும்...

(22 ஆம பக்கத் தொடர்ச்சி)

மாகக் கூடிற்று-

"கேரல்" ன் இடுப்புப் பகுதி இரண்டு பக்கங்களிலும் இரண்டு அங்குலம் கூடுதலாக இருந்தது- இடை சிறுத்தால் தானே பெண்களின் அழகு கூடும்-

டாக்டர் ஹார்வியின் பரிசோதனை மேஜையில் ஆஜரானாள் கேரல்- கருவி தன் கைவரிசையை நிமிடங்களில் காட்டிற்று- பேரிக்காய் என்று பழிப்புக்குக் காரணமாக இருந்த இடுப்புப் பகுதியின் கொழுப்புச் சதை கரைந்து பேரழகி கேரல் என்று மாற்ற அடைமொழிக்கு வழிவகை செய்யப்பட்டது- மகிழ்ச்சியின் உச்சத்தை எட்டினாள் கேரல்! முப்பது வயதுக்குக் குறைவான தோற்றம் பெற்றாள்!

[ம—10]



# பெண்களின் உள்ளாடைகளை

திக்க வேண்டியதில்லை- ஆயுதம் போட வேண்டியதில்லை உயிருக்கு ஆபத்து நேருமோ என பயப்படத் தேவை யில்லை- கருக்கலைப்பை பாதுகாப்பான ஒரு சவுகரி யமாக்கி விட்டது இந்த புதிய மாத்திரை!

இப்போது பிரான்சில் மட்டும் விற்பனைக்கு விடப் பட்டுள்ள இம் மாத்திரையின் பெயர் ஆர் யூ 486 என்ப தாகும்- விரைவிலேயே உலக நாடுகளிலும் இம் மாத் திரை விற்பனைக்கு விடப்பட வேண்டுமென டாக்டர்கள் இம்மாத்திரை குறித்த அபிப்பிராயம் தெரிவித்துள்ள னர்-

ஹோர்மோன்களைப் பாதிக்கும் தன்மைகொண்ட ஒரு மூலகத்தை இம் மாத்திரை கொண்டுள்ளது- இம் மாத்திரையை உட்கொண்டதும் இந்த மூலகம் இயங்கி புரஜஸ்டரோன் எனப்படும் ஹோர்மோன் உற்பத்தியாவ தைத் தடுத்து விடுகிறது-

பெண்களின் உடல் நலத்திற்கும் பாதுகாப்புக்கும் ஆபத்து விளைவிக்காத இந்த மாத்திரைகளை உலக நாடு களில் விற்பனைக்கு விடுவது பல மரணங்களைத் தடுத்து நிறுத்துமென அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது- ஏனெனில் உலகெங்கும் தெரிந்தும் தெரியாமலும் கருக் கலைப்பு நடைபெறவே செய்கிறது- தவறான முறைக ளைக் கையாள்வதால் வருடம் ஒன்றுக்கு இரண்டு லட்சம் கர்ப்பிணிகள் உயிரிழப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது-

[ம—032]

யாருமே அவர்களை நேசிக்க வில்லை.

அவர்களுடைய அன்பையூட் டும் கிண்ணங்கள் நிரம்பி வழி யாமல் காய்ந்து கிடந்தன.

குழந்தைகள் மீது நாம் கவ னம் செலுத்தினால்தான் நாம் அவர்களை நேசிக்கிறோம் என் பதை குழந்தைகள் உணர்ந்து

மற்றவர்களது கவனத்தைக் கவரவேண்டும் என்பதே அவர் களது ஒரே ஒரு குறிக்கோளாக இருக்கிறது. அது சரியான முறையா அல்லது தவறான முறையா என்பதற்கான வழி முறைகளை அவர்கள் சிந்திப்பது கிடையாது.

அன்புள்ளவர்களாக வளருவ

வாறு திருத்த முயல்கின்றோம், பிள்ளைகளை பயமுறுத்துகிறோம்

நமது ஏமாற்றம் அல்லது வெறுப்பு ஆகியவற்றைக் காட்டு வதற்காக அவர்களை கண்டு

யமான காரியமாகும்.

குழந்தை எப்பொழுதும் உங் களால் விரும்பப்படுகின்றவன், வரவேற்கப்படுகின்றவன் என் பதை அவன் உணர்ந்து கொள்ள

முத்தமிடுங்கள்.

உங்களது பிள்ளைகளிடத்தில் அன்பு காட்டுங்கள், "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்"

(ம-455)

## அழகு சேர்க்கும்...!

(22 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகக் கூடிற்று-

"கேரல்" லின் இடுப்புப் பகுதி இரண்டு பக்கங்களிலும் இரண்டு அங்குலம் கூடுதலாக இருந்தது- இடை சிறுத்தால் தானே பெண்களின் அழகு கூடும்-

டாக்டர் ஹார்வியின் பரி சோதனை மேஜையில் ஆஜ ரானாள் கேரல்- கருவி தன் கைவரிசையை நிமிடங்களில் காட்டிற்று- பேசிக்காய் என்று பழிப்புக்குக் காரணமாக இரு ந்த இடுப்புப் பகுதியின் கொழுப் புச் சதை கரைந்த பேரழகி கேரல் என்று மாற்ற அடை மொழிக்கு வழிவகை செய் யப்பட்டது- மகிழ்ச்சியின் உச் சத்தை எட்டினாள் கேரல்! முப்பது வயதுக்கும் குறைவான தோற்றம் பெற்றாள்!

[ம—10]



அறிவு பூர்வமாகவும் அணுக வேண்டும்.

(த-032)

# பெண்களின் உள்ளாடைகளை திருடும் மனநோயாளர்கள்

தனது வைப்பாட்டியின் உள் ளாடைகளைத் திருடினரார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பிரிட் டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நீதிமன்றத்தில் நிறுத்தப் பட்டுள்ளார். இந்த கிறுக்கு உறுப்பினரின் பெயர் ரொன் பிற வுண். பிரச்சினைக்குரியவராகக் கருதப்படும் இவர் ஒரு இடது சாரி அரசியல்வாதி.

திருமணம் செய்து குடியும் குடித்தனமாக இருந்து வரும் இவர் நாடாளுமன்றத்தில் உதவி ஆய்வாளராக வந்து சேர்ந்த நொரனா லொங்டன் என்ற அழகிய பெண்ணுடன் காதல் கொண்டு அவரைச் சின்ன வீடா கவும் செட்டப் செய்து கொண் டிருக்கிறார்.

நான்கு ஆண்டுகளாக இவர், வாரத்தில் ஐந்து நாட்களை லொங்டனுடனும், வார இறு தியை தனது மனைவியுடனும் கழித்து வந்திருக்கிறார்,

ஆனால் நான்கு ஆண்டு சின்ன வீட்டு வாழ்வில் சலிப்பு கண்டு போன லொங்டன் புதிய காத லனை தேடிக் கொண்டிருக் கிறார். இந்த விடயத்தை எப்ப டியோ கேள்விப்பட்ட எம் பி ரொன் பிறவுண், ஆத்திரத்துடன் வைப்பாட்டியின் வீட்டை அடைந்து கூச்சல் போட்டிருக் கிறார்.

இருவருக்கும் இடையே நடைபெற்ற கடும் வாக்குவாதத்

## உயர் பதவி வகிப்பவர்கள் மத்தியிலும் இப்பழக்கம்

தின் போது ஆத்திரமடைந்த ரொன். இரும்புக் கம்பி யொன்றை எடுத்து அவ் வீட்டு கண்ணாடிக் கதவு, ஜன்னல்கள் மற்றும் முகம் பார்க்கும் கண் ணாடி ஆகியவற்றை அடித்து நொருக்கியிருக்கிறார்.

சுமார் ஆயிரத்தி மூன்னூறு டாலர் பெறுமதியான சேதத்தை விளைவித்து விட்டு இடத்தைக் காலி பண்ணும் போது லொங் டனின் நகைகளையும் சில உள் ளாடைகளையும் எடுத்துக் கொண்டு சென்றிருக்கிறார். பொலீஸார் இவரை கைதுசெய்த போது கோட் பாக்கெட்டில் இருந்த நகைகளுடன் உள்ளா டைகளையும் கைப்பற்றினர்.

ஆனால் தான் லொங்டனின் உள்ளாடைகளை வேண்டுமெனத் திருடவில்லை என்று மறுக்கிறார், இந்த பிரிட்டிஷ் எம் பி,

முன்னர் நாடாளுமன்ற குளிய லறையில் ஒரு பெண்ணுடன் இவர் ஆனந்தமாக ஸ்நானத்தில் ஈடு பட்டிருந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டது. இதையும் இம் மன்மதர் இல்லை என மறுத்து விட்டார்.

இவர் கதை எப்படியிருந்தா லும், சிலருக்கு பெண்களின் உள் ளாடைகளின் பேரில் விசேஷ கவர்ச்சி ஏற்படுவது உண்டு. அந்தரங்கத்தில் பெண்களின் உள்ளாடைகளை அணிந்து தமது தோணலாகிப் போன காம உணர்ச்சியைத் தணித்துக் கொள் பவர்கள் உள்ளனர்.

கௌரவமான மனிதர்கள் சிலருக்கும் கூட உபயோகிக்கப் பட்ட பெண்களின் உள்ளாடை களை சேகரித்து திருப்தியடை யும் பழக்கம் அந்தரங்கத்தில் உண்டு.

இவர்கள் ஒருவித மனநோயால் தாக்கப்பட்டுள்ள வர்கள். சிறுவயதில் இவர்கள் அனுபவிக்க நேர்ந்த குறிப்பிட்ட சில சம்பவங்கள் இவ்வாறான வேட்கையை கிளப்பி விட்டு விடு கிறது என்பது மனோவியலாளர் களின் கணிப்பு.

இவ்வகை மனிதர்களை எப் போதாவது நாம் சந்திக்க நேர் ந்தால் அவர்கள் மனம் புண் படும்படி பரிகாசம் செய்யக் கூடாது, மனநோயாளிகளான இவர்களை அனுதாபத்துடனும்

# சூரிய வெளிச்சத்தில் வாழும் குழந்தைகள்

இரு குழந்தைகளுக்கு இருட்டென்றால் ஆகாது!! அக் குழந்தைகள் உயிருடன் இருக்க வேண்டுமானால் 24 மணித்தியாலமும் வெளிச்சம் குழந்தைகளின் உடலில் பட்டுக்கொண்டிருக்க வேண்டும்!!

இக் குழந்தைகளில் ஒன்று ஆண்! பெயர் அன்றூ! அன்றூவின் தங்கையின் பெயர் சாரா! ஐந்து வயதாகிறது- இவ்விருவரையும் குணப்படுத்த முடியாத ஒரு ஈரல்நோய் தாக்கியிருக்கிறது- கிறிக்லர் மஜ்ஜார் எனப்படும் இந் நோய் காரணமாக ஈரல் தான் உறிஞ்சி எடுத்து அழிக்க வேண்டிய விஷப் பொருட்களை இரத்தத்தில் கலந்து இக்குழந்தைகளைக் கொன்றுவிடக் கூடும்- இதைத் தடுக்க வேண்டுமானால் இவ்விருவரும் தொடர்ந்து வெளிச் சத்தில் இருந்து வர வேண்டும்- இவர்கள் வாழ்வில் இரவு உதிக்க முடியாது-

மாலையானதும் இவர்களுக்கென அமைக்கப்பட் டுள்ள விசேஷ படுக்கைக்குப் போய் விடுகிறார்கள்- சக்தி வாய்ந்த மின் விளக்குகள் ஒளியை உமிழ இரவை மின் விளக்கு வெளிச்சத்தால் விரட்டி விட்டு வாழ்க்கையை ஓட்டுகிறார்கள் இத் துர்ப்பாக்கியமிக்க குழந்தைகள்!!

இக்குழந்தைகளை ஈரல் மாற்று சத்திர ... சிகிச்சை மூலம் சாதாரண வாழ்க்கைக்கு திருப்பிவிட முடியும் என்று டாக்டர்கள் தெரிவித்திருந்தாலும் அச் சிகிச்சையை இப்போதே செய்து விட முடியாதாம்- பருவ வயதை அடையும் வரை இவ்விருவரும் காத்திருக்க வேண்டும்- அதுவரை இருட்டை இவர்கள் சந்திக்க முடியாது-

இவ்வாறான புதுமையான நோயாளர்களைச் சந் திக்கும் போதுதான் நாம் எவ்வளவு கொடுத்து வைத்த வர்கள் என்பது நிதர்சனமாகப் புரிகிறது- மேலும் இருட் டைக் கண்டு நாம் பயப்படுகிறோம் அல்லவா? இந்த இருட்டு நமக்கு எவ்வளவு அவசியமானது என்பது கூட இந்த மாதிரி சமயங்களில் தான் புரிகிறது-

[ம—032]

சிந்தாமணி

தின வெளியீடு "தினபதி" ஞாயிறு வெளியீடு "சிந்தாமணி"

CHINTAMANI

## எந்த நிறமும் ஏற்றதுதான்

கறுப்பாக இருப்பவர்களுக்கு சிவப்பு, மஞ்சள் " கருமபச்சை. போன்ற அழுத்தமான நிறங்கள் நன்றாக இருக்காது என்ற கருத்து சரி அல்ல, எந்த வண்ணமும அவர்களுக்கு எடுப்பாகவே இருக்கும் என்று பல அழகு நிலைய நிபுணர்கள் கூறியுள்ளனர் (ம-10)



சமபிரதாயங்களை உருவாக்குபவர்கள் மக்களே. சமபிரதாயங்களைச் சட்டமூலத்தில் நிறுவவோ, நீக்கவோ முடியாது. அது மக்களின் கையில் உள்ளது. சில சமபிரதாயங்கள் வாழையடி வாழையாக நூற்றாண்டுக் காலமாக நிலைத்து நிற்கின்றன. சில மறைந்து விடுகின்றன.

சமபிரதாயங்கள் காலப்போக்கில் மாற்றம அடைவதும இயற்கையே. புதிய, நவீன அமசங்கள் புகுவதும இயற்கையே,

டல்யன்கா வாத்தியத்தை எடுத்துக் கொண்டால் அது வொலகா நதிக்கும, யூரல் மாலைகளுக்கும் இடையே உள்ள பரந்து, விரிந்த ஐரோப்பியப் பிரதேசத்தில் உள்ள பஷ்கீரியாவில் சமீப காலத்தில் ஜனரஞ்சகமாகி வந்துள்ளது

இது வெளியிலிருந்து வந்த வாத்தியமாகும். பஷ்கீரிய மக்கள் அதைச் சொந்தமாக்கிக் கொண்டார்கள். பஷ்கீர் மக்கள் முஸ்லிமகள். அவர்கள் இப்போது வருடந்தோறும தல்யன்கா விழா நடத்துகின்றனர். தலைநகரான ஊஃபாவில் நடக்கும விழாக்களில் பெருந்தொகையான மக்கள் கலந்துகொள்கின்றனர்.

## கலையம்சம் ததும்புகின்ற ஆடை அணிகளை மறக்கலாமா?

பஷ்கீர் மக்கள் தமது தேசிய பாரமபரியங்களை – இலசயாகிலுஞ் சரி, நடனமாகிலும சரி, பாடலாகிலுஞ் சரி – பாதுகாப்பதில் அக்கறையுடையவர்கள். அதேபோல தமது ஆடை அணிகளையும கலையமசம ததும்ப தயாரிப்பதில் கை தேர்ந்தவர்கள், கலை அமசம ததும்பும ஆடை அணிகளை அவர்கள் மறக்கவில்லை. (ம)

# மிருகங்களை வதைப்பது மனிதனுக்கு இன்பமா?

விஞ்ஞான பரிசோதனைகள் குறிப்பாக மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும போது அவற்றின் எதிர் விளைவுகளையும பின் விளைவுகளையும் பற்றி தீர்மானித்துக் கொள்ள எலிகள், முயல்கள், பன்றி மற்றும நாய்கள் உட்பட பல்வேறு வகை மிருகங்கள் ஆய்வாளர்களால் பயன்படுத்தப்படுகின்றன, இப்பரிசோதனைகளின் போது இம மிருகங்கள் அல்லது பறவைகள் பெருமபாலும கொல்லப்பட்டு விடுவதுண்டு. அப்படியே பரிசோதனைகளுக்கு அவை ஈடுகொடுத்துத் தப்பிப் பிழைத்தாலும நீண்ட காலம உயிர் வாழ்வதில்லை. விஞ்ஞான ஆய்வுக் கூடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட ஒரு மிருகத்தின் வாழ்வு அத்துடன் அஸ்தமித்துவிடும.

உலகெங்கும உள்ள ஆயிரக்கணக்கான விஞ்ஞான மருத்துவ பரிசோதனைச்சாலைகளில் இவ்வாறு செத்துமடியும மிருகங்களின் எண்ணிக்கை பல ஆயிரங்களைத் தாண்டும, இமமிருகங்களின் உயிர்த்தியாகம மனிதனின் விஞ்ஞான வளர்ச்சிக்கும ஆரோக்கிய வாழ்வுக்கும பெருமளவில் உதவுகிறது. நீண்ட காலமாகவே உலகெங்கும பெருமளவில் விஞ்ஞான ஆய்வுக் கூடங்களில் மனிதனின் மேமபாட்டுக்காக இம மிருகங்கள் தமது உயிரைப் பலியிட்டு வந்துள்ளன வாயினும சமீபத்தில் தான் மனிதனுக்கு இக்கசப்பான உண்மையின் கோரமான உருவம கண்ணுக்குத் தெரிய ஆரமபித்தது.

இப்போது ஐரோப்பிய நாடுகளில் விஞ்ஞானத்தின் பெயரால் மிருகங்களைப் பலியிடுவதற்கு பரவலாக எதிர்ப்பு ஏற்பட ஆரமபித்துள்ளது, மிருக வதையை நிறுத்தும்படி கோரும மிருக வதை இயக்கங்களும சூழல் பாதுகாப்பு அமைப்புகளும் அங்கு மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் குரலெழுப்பி வருகின்றன.

மேற்கு ஜெர்மனியில் மிருகவதை எதிர்ப்பு வலுப் பெற்றுள்ளது. இந்நாட்டின் புகழ்பெற்ற பத்திரிகையான டைல்ட், சுவீடன் நாட்டு மருந்து தயாரிப்பு நிறுவனம ஒன்று நாய்களை உபயோகித்து மேற்கொண்டிருந்த பரிசோதனை ஒன்றைக் கேள்விப்பட்டு போர்க்கொடி உயர்த்தியது. இக்கொடுமைபற்றி தனது பத்திரிகையில் ஆசிரியர் குழுவினர் விஸ்தாரமாக எழுதவே, வாசகர்கள் கொதித்துப் போயினர். உடனே ஆயிரக்கணக்கான கடிதங்கள் மருந்து நிறுவனத்துக்குப் பறந்தன. தனது செல்வாக்குக்கு வேட்டு வைக்கப்படவிருப்பதைத் துல்லியமாக உணர்ந்து கொண்ட நிறுவனத்தினர் பரிசோதனையை இடை நிறுத்தி நாய்களை விடுவிக்க சமமதம் தெரிவித்தனர்.

ஏனெனில் மேற்கு ஜெர்மனியில் சுமார் 60 ஆயிரம பலம பொருந்திய ஜீவகாருண்ணிய அனுதாபிகள் உள்ளனர். இவர்களைத்தவிர இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவு தர மேலும பல லட்சக்கணக்கானோர் உள்ளனர்,

மிருக வதை எதிர்ப்பு அரசியல் விஷயமாகக் கருதப்படும அளவுக்கு இங்கு செல்வாக்கு பெற்றுள்ளது. மிருகவதை எதிர்ப்பு என்பது சாதாரண விஷயமாக கணிக்கப்பட்ட காலமெல்லாம மலையேறிவிட்டது; இப்போது இதுவும ஒரு அரசியல் விஷயமாகும என்கிறார் 1981ஆம ஆண்டு இங்கு நிறுவப்பட்ட ஜீவகாருண்ய சஙக பணிப்பாளர் வுல்ப்காங்க்.

இவரது சஙகம மிதவாத போக்குக்கொண்டது என்றுதான் சொல்ல வேண்டும. தீவிரவாத மிருக அனுதாபிகளுடன் இச்சஙகத்தினரை ஒப்பிடும போது ஏனெனில் இந்த தீவிரவாத மிருக அனுதாபிகள். இரவில் யாருக்கும தெரியாமல் விஞ்ஞான ஆய்வுக் கூடங்களினுள் நுழைந்து அங்கு பரிசோதனையின் பொருட்டு அடைத்து வைக்கப்பட்டிருக்கும மிருகங்களை விடுதலை செய்து விடுகிறார்கள். விஞ்ஞான பரிசோதனை என்ற பெயரில் மிருகவதை செய்வதை தீவிரமாக எதிர்த்து வரும இவர்கள் சில சமயம விலையுயர்ந்த விஞ்ஞான உபகரணங்களையும நாசம செய்து விடுவதுண்டாம்.

ஆனால் மிதவாத அமைப்புகள் இத்தீவிரவாதத் தன்மையை விருமபுவதில்லை, ஒருமுறை பரிசோதனைக்கு முகம கொடுத்த மிருகங்கள் உடல் ரீதியாக ஆரோக்கியம இழந்து விடுகின்றன. அவற்றை விடுவிப்பதில் அர்த்தமில்லை. மேலும அவற்றுக்குப்பதில் ஆரோக்கியம கொண்ட வேறு மிருகங்கள் பரிசோதனைக்கென கொண்டு வரப்பட்டு விடுகின்றன என்று இந்த அமைப்புகள் கூறுகின்றன.

இதற்குப் பதிலாக, மிருகங்களை உபயோகிக்காமல் விஞ்ஞான பரிசோதனைகளை நடத்துவதற்கான வழிவகைகள் ஆராயப்பட வேண்டும என இவை கருத்துத் தெரிவித்துள்ளன, இறைச்சிக்காக மிருகங்கள் அறுக்கப்படும போதும மயக்க மருந்து கொடுக்கப்பட்ட பின்னரே அக்காரியம நடத்தப்பட வேண்டுமென்று இவை கோரிக்கை விடுத்துள்ளன. சின்னஞ்சிறு கூடுகளில் பெட்டைக்கோழிகளை அடைத்து வைத்து முட்டை பெறும நடைமுறை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும என்பது இச் சஙகங்களின் மற்றுமொரு வேண்டுகோள்.

இந்த ஜீவகாருண்ய சஙகங்கள் மேற்கு ஜெர்மனியில் செல்வாக்கு பெற்று வருவதால் மிருகங்களைப் பயன்படுத்தும கைத்தொழில்கள் நடத்திவருபவர்கள் பாதிப்படைந்துள்ளனர். ஏனெனில் மிருகங்களை வதைப்பது மூலம உற்பத்தி செய்யப்படுபவை எனக் கருதப்படும பொருட்களை இச்சஙகங்கள் பகிஷ்கரிக்கின்றன. பூனையின்ம ஒன்றில் இருந்து தயாரிக்கப்படும பெண்களுக்கான ஓவர் கோட்டின் விற்பனை இருபது சதவீதத்தால் படுத்து விட்டதாம. இந்த அளவுக்கு ஜீவகாருண்யம சைவ உணவு உண்பவர்களை விட மாமிசம உண்பவர்களிடம பெருகிவிட்டது!

(ம-032)

## வேண்டாத மிருகங்களும் வருமானம் தேடித்தரும்

ஆஸ்திரேலியா பரந்த ஒரு நாடு– மனிதர் வாழும் பகுதிகளை விட பாலை நிலப் பரப்புகளும காட்டுப் பகுதிகளும அங்கு அதிகம்– அங்கு பல்வேறு வகையான மிருகங்கள் வாழ்ந்து வருகின்றன–

இவற்றில் சில ஆஸ்திரேலியாவுக்குச் சொந்தமில்லாதவை– இந்நாட்டில் குடியேற வந்தவர்கள் தம்முடன் கொண்டு வந்த மிருகங்கள் இன்று பல்கிப் [illegible]

சரி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன–

வேட்டைக்காரர்கள் ஆஸ்திரேலிய புதர்களிடையே மறைந்திருக்கும் பன்றிகளை வேட்டையாடி ஏற்றுமதியாளர்களின் கொள்வனவு நிலையங்களில் அவற்றை விற்பனை செய்கிறார்கள்–


காட்டு மிருகங்களின் மாமிச ஏற்றுமதித் திட்டத்தின் மூலம் நல்ல வருவாய் பெற முடியும என்பது உண்மையானாலும [illegible]

[illegible] களை பூண்டோடு ஒழித்துவிட முடியாதா!

குறிப்பாகப் பன்றியைச் சொல்லலாம– பன்றியினம் தமது எண்ணிக்கையின் அரைபது சதவீத இழப்பை பன்னிரெண்டு மாத காலத்தில் ஈடுசெய்துவிடக் கூடிய இனவிருத்தி ஆற்றலைக் கொண்டது!

வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்– வேண்டாத மிருகங்கள் மூலம ஆஸ்திரேலியா வளம தேடுகிறது!





## எந்தன் உள்ளத்து ராணி

ஒருகீற்று மயிர்முகத்தில் கோடிட்டு நிற்கின்ற
ஒயிலான மேக்கப்பில் மயலாகிப் போனேன்
ஒருகையில் தலைசார்த்தி இருகண்ணை ஒருசாய்த்து
உயிர்வாங்கும் நோக்கிலே வசமாகிப் போனேன்
ஒருஎண்ணம் அவளுக்கு உண்டென்று கண்டதும்
உவகையின் உச்சத்தில் நிலைகண்டு கொண்டேன்
ஒருநாளில் அவள்எந்தன் உள்ளத்து ராணியாய்
கொலுவேறல் நிசமென்று மனமொன்றி நின்றேன்

## பொதுமக்களிடம் இருந்து வரி அறவிடுவதாக எதிரணியினர் தெரிவித்துள்ள முறைப்பாடு பற்றி அரசாங்கத்தின் நிலை என்ன?

இந்த வாரம் மீண்டும் ஆரம்பமாகவுள்ள அரசு - புலிகள் இயக்க பேச்சுவார்த்தையின் போது இந்த விவரம் பற்றி முழுமையாக ஆராயப்படும் எனத் தெரிகிறது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் ஆலோசகர் திரு அன்டன் பாலசிங்கத்துடனும் பொதுச் செயலாளர் யோகி என அழைக்கப்படும் யோகரத்தினத்துடனும் அரசு தரப்பினர் பேச்சுவார்த்தை நடத்துவர்.

வரி அறவிடுவதுடன் அவசர கால நிலையை மீறி புலிகள் பொதுக் கூட்டங்களை நடத்துவது பற்றியும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. யோகி தற்போது கிழக்கு மாகாணத்தில் பிரசார கூட்டங்களில் ஈடுபட்டுள்ளார்.

வரி அறவிடுதல், அவசர

(2ஆம் பக்கம் பார்க்க)

...ணிக்கை முன்னர் 10 லட்சமாகவே இருந்தது. கடந்த ஆண்டில் இது 15 லட்சமாக அதிகரித்து விட்டது!

சுகாதார அமைச்சு நடத்திய ஆய்வு ஒன்றில் இருந்து இந்த விவரம் தெரியவந்துள்ளது.

நாய்களின் ஆயுட்காலம் 12 வருடங்கள் முதல் 15 வருடங்கள் வரையாகும்.

பெண் நாய்கள் பிறந்து ஒன்றரை வயதாகும் போதே குட்டிகளை ஈனுகின்றன.

ஒரு நாய் வருடாந்தம் இருமுறை குட்டிகளை ஈனுகின்றது. அவை ஒரு முறைக்கு 5 முதல் 7 குட்டிகள் வரை ஈனுகின்றன.

(ண—007)

## வடக்கு கிழக்கு மா. சபையை கலைப்பதா?

### வரதர் நாடு திரும்பியபின் முடிவு

கொழும்பு, ஜன 27

வடக்கு - கிழக்கு மாகாண சபை முதல்வர் நாடு திரும்பிய பின்னர்தான் இம்மாகாண சபையைக் கலைப்பதா இல்லையா என்பது பற்றி முடிவு எடுக்க முடியும்.

இப்படி வெளிவிவகார அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்னவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய தமிழ் தேசிய சபை பிரதிநிதிகள் அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

தமிழ் தேசிய சபையின் பிரதிநிதிகள் திரு ரஞ்சன் விஜேரத்னவை கொழும்பில் சந்தித்து வடக்கு - கிழக்கு நிலை பற்றி எடுத்துரைத்தனர். அங்கு சாதாரண நிலையைத் தோற்றுவிக்கும் வகையில் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டு

(2ஆம் பக்கம் பார்க்க)

## 10,000 மாணவர்களுடன் மலை ஏறும் அமைச்சர்

கொழும்பு, ஜன 27

கல்வி கலாசார தகவல்துறை அமைச்சர் திரு டபிள்யூ ஜே எம் லொக்குபண்டார 1000 பாடசாலை மாணவர்கள் மற்றும் அதிகாரிகள் சகிதம் சிவனொளி பாதமலையைத் தரிசிக்க இருக்கிறார்.

பெப்ரவரி 9 ஆம் திகதி இந்த நிகழ்ச்சி நடைபெறும்.

பெப்ரவரி 8 ஆம் 9 ஆம் திகதிகளில் இரத்தினபுரியில் கல்வி அமைச்சின் நடமாடும் அமைச்சு சேவை நடைபெறும். அதனைத் தொடர்ந்து இந்த தரிசிப்பு நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டு இருக்கிறது.

இவ்வாறு இரத்தினபுரி கல்விப் பணிப்பாளர் திரு எஸ் எம் ஜயதிலக்க தெரிவித்தார்.

8 ஆம் திகதி 30,000 மாணவர்களும் பெற்றோரும் இரத்தினபுரி சமன் தேவாலயத்தில் இருந்து இரத்தினபுரி நகர சபை வரை நடைபெறும் பாதயாத்திரையில் பங்குபற்றுவர்.

நுவரெலியாவில் நடமாடும் கல்வி அமைச்சு சேவை பெப்ரவரி 11 ஆம் திகதி நடைபெறும்.

(ண—007)

## வர்த்தக கொள்கை வகுக்க அதிகார சபை உருவாகும்

கொழும்பு, ஜன 27

வர்த்தக அபிவிருத்தி அதிகார சபை ஒன்று நிறுவப்பட இருக்கிறது.

உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகத்தை அபிவிருத்தி செய்து பாவனையாளருக்கு நிவாரணம் வழங்கும் விதத்தில் கொள்கை ஒன்றை வகுக்கவே இந்த அதிகார சபை நிறுவப்படவிருக்கிறது.

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச இதுபற்றி தீர்மானித்திருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சுதந்திர வர்த்தகம் தொடர்பாக மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு ஏற்பவே இக் கொள்கை வகுக்கப்படும்.

இதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபைத் தலைவர் திரு கே குணரத்தினம் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

இக் கொள்கையை வகுக்கும் போது இந்திய ஏற்றுமதி வர்த்தகம், சிங்கப்பூர் வர்த்தக முறைகள் ஆகியனவற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு வர்த்தக கப்பல்துறை அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் ஏற்கனவே உத்தரவு வழங்கி இருக்கிறார். (ண—007)

## 4 தீவிரவாதிகள் சுட்டுக் கொலை

கொழும்பு, ஜன 27

மொனறாகலை மாவட்டத்தில் அதிரடிப்படையினர் மேற்கொண்ட திடீர் நடவடிக்கைகளின் போது நான்கு தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 18 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

இத்தகவலை பாதுகாப்பு வட்

(2ஆம் பக்கம் பார்க்க)

## உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு அமைச்சர்கள் வெளிநாடு செல்லமுடியாது

கொழும்பு, ஜன 27

அமைச்சரவை உறுப்பினர்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை தமது உத்தியோகபூர்வ வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்ளாமல் நாட்டிலேயே தங்கியிருக்க வேண்டும்.

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசா இப்படி அமைச்சர்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

கடந்த வாரம் ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசா தமது அமைச்சர்களைச் சந்தித்தார். அப்போது அமைச்சர்கள் ஏப்ரல் மாதம் வரை நாட்டிலேயே தங்கியிருக்க வேண்டுமென்று அமைச்சர்களிடம் அவர் வேண்டிக் கொண்டார்.

ஏற்கனவே மூன்று அமைச்சர்கள் தாம் உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள விருப்பதாக ஜனாதிபதியிடம் தெரிவித்து அதற்கான அனுமதியைக் கோரியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் இம் முடிவுக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லையானாலும், ஜனாதிபதி தமது அமைச்சரவையில் மாற்றங்களை மேற்கொள்ள விரும்புவதையே இது சுட்டிக் காட்டுவதாக இருக்கிறது என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதியின் இப்பணிப்புரை அமைச்சர்களின் தனிப்பட்ட வெளிநாட்டுப் பயணங்களைக் கட்டுப்படுத்தாது. ஜனாதிபதியின் முன் அனுமதியுடன் அமைச்சர்கள் தமது தனிப்பட்ட விஜயங்களை மேற்கொள்ள முடியும்.

வெளிநாட்டு அரசாங்க மற்றும் நிறுவனங்களின் அழைப்பை ஏற்று மேற்கொள்ளப்படும் பயணங்களுக்கே தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

இதே சமயம் சகல அமைச்சுகளும் கடந்த ஓராண்டு காலப் பகுதியில் அவை சாதித்துள்ளவை

(2ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களை வேட்பாளர்கள் திருப்பி ஒப்படைக்கவேண்டும்

கொழும்பு, ஜன 27

மாகாண சபைத் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டு தோல்வி அடைந்த சகல அரசியல் கட்சி வேட்பாளர்களும் தமது துப்பாக்கிகளை அரசாங்கத்திடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்று பாதுகாப்பு அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதே சமயம் இத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய

(2ஆம் பக்கம் பார்க்க)

## மின் இணைப்பு கடன் திட்டம்: ரூ. 1 கோடி 70 லட்சம் ஒதுக்கீடு

கொழும்பு, ஜன 27

புதிதாக மின் இணைப்பைப் பெறுவதற்கு கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒரு கோடி 70 லட்சம் ரூபாவை மின்சார சபை ஒதுக்கியிருக்கிறது.

வீடுகளுக்கு புதிதாக மின் இணைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக வங்கிக் கடன் வழங்கும் இந்தத் திட்டத்தை மின்சார சபை தற்போது நடைமுறைப்படுத்தியிருக்கிறது.

இத் திட்டத்தின் கீழ் மின்சாரம் பெற 5000 ரூபா கடன் உதவி வழங்கப்படும்.

கிராமப்புற மக்கள் மின் இணைப்புக்கான அடிப்படைச் செலவுகளை ஈடு செய்வதற்காக சம்பந்தப்பட்ட பகுதிகளின் மின்

(2ஆம் பக்கம் பார்க்க)

ஆகக் கூடுதலான விற்பனையுள்ள தமிழ் வார இதழ் சிந்தாமணி தான்